

நாணலிலே
காலெடுத்து...
ஜெய்சக்தி

# நாணலிலே காலெடுத்து...

## 1

கார் விரைவாகப் போய்க் கொண்டிருந்தது. அப்பா, ஜனனியிடம், 'ஏம்மா, கல்யாண நாள் நெருங்கிகிட்டே இருக்குது. கல்யாணத்துக்குன்னு நீ எதுவும் புதுசா நகை வாங்கிக்கலியே. இருக்கறதே போதும்ங்கறே.. இன்னைக்குச் சாயங்காலம் போய் ஏதாவது வாங்கலாமா?' என்றார்.

ஜனனி அப்பாவைத் திரும்பிப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தாள்.

'இருக்கறதே போதும்ப்பா..!' என்றாள்.

'என்னம்மா நீ புரியாத பொண்ணா இருக்கறே! எல்லாப் பொண்ணுங்களும் கல்யாண சமயத்திலே எவ்வளவு முடியுமோ அவ்வளவு வசூல் செய்வாங்க. நீ என்னம்மா?' என்றார்.

டிரைவர் பாலையா சிரித்தார். வெகு நாட்களாக அவர்கள் வீட்டில் டிரைவராக இருக்கிறார்.

'ஐயா.. நம்ம ஜனனிம்மாவைப் பத்தித் தெரிஞ்சதுதானே! ஏம்மா, ஐயாவோட ஆசைக்காவது ஏதாவது வாங்கிக்குங்க..' என்றார்.

'சரிப்பா.. உங்க இஷ்டம்..' என்றாள்.

'நல்ல ஜாதி முத்திலே.. ஒரு செட் செய்யச் சொல்லி ஏற்கெனவே ஆர்டர் கொடுத்து விட்டேன்.' என்று சிரித்தார்., நாகமாணிக்கம்.

ஜனனியும் சிரித்துக் கொண்டாள்.

'சரிம்மா.. நீ ஆபிஸ்ல இறங்கிக்க.. நான் முக்கியமான ரெண்டு மூணு பேருக்கு அழைப்பிதழ்கள் கொடுக்க வேண்டியிருக்கு. பார்த்துட்டு வந்தர்றேன். ஏதாவது பிராப்ளம்னா செல்லில் காண்டாக்ட் செய்,' என்றார். சரிப்பா என்றாள்.

"ஜனனி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்" என்ற பெயரில் கட்டிடம் கட்டிக் கொடுக்கும் நிறுவனம் நடத்திக் கொண்டிருந்தார்கள். தரமான பொருட்களை வைத்து நியாயமான லாபத்தில் கட்டிடம் கட்டிக் கொடுப்பதால் அவர்களுக்கு நல்ல பெயர் இருந்தது.

என்னதான் பணப் புழக்கம் குறைந்து விட்டது என்ற போதிலும், கோயமுத்தூரில் அவர்களுக்குத் தொடர்ந்து வேலைகள் இருந்து கொண்டுதான் இருந்தது.

ஜனனி சிவில் என்ஜினியரிங் படிப்பு முடித்திருந்தாள், நாகமாணிக்கத்துக்கு ஒரே பெண்.

ஆனால், மனைவி இளம் வயதிலேயே இறந்து விட்டாள். அக்கா பெண். திருமணத்தின் போதே ஏதோ உடல் நலக் குறைவு இருந்தபோதிலும், அவர் திருமணம் செய்துகொண்டார். ஆனால், ஜனனி பிறந்ததற்குப் பிறகு உடல் நலம் தேய்ந்து கொண்டே வந்து அவளுக்குப் பத்து வயது இருக்கும்போதே இறந்து போனாள்.



அப்போது நாகமாணிக்கத்திற்கு 35 வயதுதான். மனைவி மரகதத்துடன் ஒன்றும் சுகமான வாழ்க்கை வாழ்ந்துவிடவில்லை என்பதையும், அவர் செய்ததும் தியாகம்தான் என்பதையும் உணர்ந்த தாயார் கோமதியம்மாள் அவருக்கு மறுதிருமணம் செய்து வைக்க வெகுவாக ஆசைப்பட்டார். நாகமாணிக்கம் மறுத்து விட்டார். ஆனால் கோமதியம்மாள் சளைக்காமல், தேடிப் பிடித்து உறவில் ஒரு பெண்ணைக் கண்டு பிடித்தார்.

தாய் தந்தையர் இல்லை. அவளுக்கும் ஏதோ காரணத்தால் குழந்தை பிறக்காது என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள் ஒரே மகள். முப்பது வயதாகியும் திருமணமாகாமல் இருந்தாள். ஜெகதாம்பாள் என்று பெயர். கோமதி. பாலையா எல்லாரும் வற்புறுத்திப் பேசி அவரைச் சம்மதிக்க வைத்தார்கள்.

'அம்மா' என்றுதான் ஜனனியும் அழைத்தாள். ஜெகதாவும் யாருக்கும் ஒன்றும் குறை வைக்கவில்லை. வீட்டில் முழு நிர்வாகமும் கோமதியம்மாளின் கையில் இருந்ததால் எந்த இடைஞ்சலுக்கும் வழியும் இருக்கவில்லை.

வாழ்க்கை லகுவாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. இந்த மாப்பிள்ளை நீலகண்டனைக் கூட ஜெகதாதான் தேர்ந் தெடுத்தாள்.

'நடுத்தரக் குடும்பம்.. நம்ம கட்டுக்குள்ளே இருப்பாங்க..' என்று கணவனிடம் பேசிச் சம்மதம் வாங்கினாள்.

ஜனனியிடம் கேட்டபோது, ஜனனி, 'அப்பா... அம்மாவும் நீங்களும் எப்படிச் சொன்னாலும் சரி,' என்று சொல்லி விட்டாள். 'ஆனால் பேர்தான் என்னமோ கர்நாடகமா இருக்கு' என்றாள் ஜனனி.

'பேர்ல என்னம்மா இருக்கு... வாழப் போற வாழ்க்கையிலதானே இருக்கு..' என்று ஜெகதா சொன்னாள்.

'ஐயோ! சூப்பர் தத்துவம்மா.. இது' என்று கிண்டல் செய்து சிரித்தாள்.. ஜெகதாவும் புன்னகைத்துக் கொண்டாள்.

ஒரு நிமிடம் தீவிரமாகச் சிந்திப்பவள் போல் நடித்துவிட்டு. 'ஆமா.. இப்ப என்ன நம்ம வீட்டுல நீயும் அப்பாவும் 'ஓ.. நாகா..!' 'ஓ.. ஜெகதா'ன்னா கூப்பிடுறீங்க?' என்று கலகலவெனச் சிரித்தாள்.

கோமதியம்மாள், 'பேசாமல் சாப்பிடுறி!' என்று ஒரு தட்டுத் தட்டினார். அப்பா மகளின் குறும்பை ரசித்துக் கொண்டார்.

ஜெகதா கொஞ்சம் அழுத்தமாகவே இருப்பாள். லேசான புன்னகைதான் எதற்கும் பதில். முகத்தை வைத்து எதையுமே கண்டு பிடிக்க முடியாது.

அதையும் ஜனனி கிண்டல் செய்து சிரிப்பாள். அதற்கும் மர்மப் புன்னகைதான் பதிலாக வரும். ஆனால், ஒருபோதும் ஜனனியின் சுதந்திரத்தில் தலையிட்டதில்லை. அவளுக்கும் அம்மாவிடம் அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்க அவசியமிருக்கவில்லை.

எது வேண்டுமானாலும் பாட்டியிடம்தான் கேட்பாள். ஆனால் கோமதியம்மாள் பேத்தியைக் கண்டிக்க வேண்டிய சமயங்களில் கண்டித்து நல்ல விதமாகவே வழி காட்டினார்.

ஜனனி வளர்ந்த பிறகு யோசித்துப் பார்த்து, 'ஏன் அம்மா தன்னிடம் முழுமையான சுதந்திரம்' எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாள்? என்று ஒருநாள் பாட்டியிடம் கேட்டாள். பாட்டியம்மாள், 'அது... அவ ரொம்ப வசதியில்லாத குடும்பத்திலே இருந்து வந்தவ. அந்தக் காலப் பெண். ஆனா நீ அவகிட்டே மரியாதையா... அன்பா ஒரு மகளாகத்தான் நடந்துக்கணும். அவளுக்கும் நம்மளை விட்டா வேறு யாரிருக்கா..? என்றார்.



கார் ஆபிசை அடைந்தது.. இறங்குவதற்கு முன்பு ஜனனி அப்பாவிடம், 'அப்பா! அம்மாவிற்கும் ஒரு செட் ஆர்டர் செய்ங்க.' என்றாள், இறங்கினாள்.

நாகமாணிக்கம் அவளைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தார், 'சரிம்மா.' என்றார்.

கார் நகர்ந்தது.

'நம்ம சின்னம்மா ரொம்ப பெருந்தன்மையான பொண்ணுங்க...' என்றார் பாலையா.

அப்பாவுக்குப் பெருமையாய் இருந்தது.

அலுவலகத்தில் நுழைந்தவுடன் அவளுக்கு வேலை சரியாக இருந்தது.

காந்திபுரத்தில் ஒரு பெரிய காம்ப்ளெக்ஸ் கட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மணல் லோடு வரவில்லை என்று சூப்பர்வைசரிட மிருந்து போன். ஏற்பாடு செய்தாள்.

அலுவலகம் பெரிய அலுவலகம். 25 பேருக்கு மேல் வேலை செய்தார்கள். அன்றைக்கு முடிக்க வேண்டிய வேலைகளை முடித்து விட்டு ரிலாக்ஸ்டாக அமர்ந்தபோது டைபிஸ்ட் யசோதா வந்து -

'அம்மா.... யாரோ அன்பழகனாம். உங்களைப் பார்க்கணுமாம்..' என்றாள்.

'வரச் சொல்லுங்க.' என்றாள்.

அவன் வந்தான்.

வணக்கம் சொன்னான்.

அழகிய தோற்றம். அடர்ந்த தலை முடி. கம்பீரமான, அளவான நடுத்தர உயரம். ஆனால், எளிமையான உடை

என்று நின்ற அவளை ஜனனி ஒரு கணம் தன்னை மறந்து பார்த்தாள்.

இப்படி ஒரு இளைஞன் எதற்காகத் தன்னைப் பார்க்க வர வேண்டும். சித்தியின் உறவுக்காரத் திருமணங்களில் ஒன்றிரண்டு முறை பார்த்த நினைவு வந்தது.

ஜனனியும் வணக்கம் சொன்னாள்.

'உட்காருங்க.' என்றாள்.

'நான் அன்பழகன் பி.ஈ. எலக்டிரிகல் அன்ட் எலக்ட்ரானிக்ஸ்.' என்றான்.

'ஓ' என்றாள். 'நாங்க கூட ஒரு என்ஜினியர் வேணும்னு அட்வர்டைஸ்மென்ட் செய்திருந்தோமே. அப்ளை செய்திருக்க லாமே..' என்றாள்.

'இல்லை. உறவுக்காரங்க நிறுவனத்துல வேலை செய்தா சரி வராது. அதுவுமில்லாம இப்பத்தான் பி.ஈ. நான் பார்ட் டைமாத்தான் செய்து முடித்தேன். இன்னும் சர்டிபிகேட்ஸ் வர்ல.' என்றான்.

ஒரு நிமிடம் மவுனம் சாதித்துவிட்டு. 'ஓ! உறவுன்னா?..' என்றாள்.

'ஜெகதாக்கா எனக்கு ஒரு வகையில அக்காவாகணும். எங்க மதரோட பெரியம்மா பேத்தி அவங்க.' என்றான்.

பேசிக் கொண்டே அவள் கண்ணசைத்து விட்டதில் காபி வந்தது.

'சாப்பிடுங்க..' என்றாள்.

'இல்லை. நான் பேச வந்த விஷயம் நீங்க காப்பி குடுத்து உபசரிக்கிற மாதிரி விஷயம் இல்லை..' என்றான்.

அவள் சிரித்தாள்.

'அப்ப முதல்லே.. காபி சாப்பிட்டுடுங்க. அப்புறம் பேசலாம்.' என்றாள்.



அவன் புன்னகைத்தான். சித்தியைப் போலவே பெரிய அழகான கண்கள் என்று சொல்லிக் கொண்டாள்.

அவன் மௌனமாகக் காபி குடித்து முடிக்கிற வரை அவள் இரண்டு மூன்று போன் கால்கள் பேசி முடித்தாள்.

பிறகு. 'சொல்லுங்க சார்..' என்றாள்.

அவன் சொன்னான். அவள் அதிர்ச்சியாய் அவனைப் பார்த்தாள்.

'வ்வாட்?' என்றாள்.

'ஆனா காரணம் கேட்காதீங்க ப்ளீஸ்.... உங்க நலனுக்காகச் சொல்றேன். என்றான்.

கடந்த இரண்டு வருடங்களில் அலுவலகத்தில் அமர்ந்து பல்வேறு தரமான மனிதர்களைச் சந்தித்துப் பழகி வந்ததாலோ என்னவோ, அவள் உணர்வுகளைச் சட்டென்று மறைத்துக் கொண்டாள்.

ஒரு நிமிடம் மேஜையைப் பார்த்தவாறு டேபிள் வெயிட்டை உருட்டிக் கொண்டிருந்தாள். பிறகு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

'மிஸ்டர் அன்பழகன்! நீங்க சொன்னது எவ்வளவு பெரிய விஷயம்னு உங்களுக்குப் புரியுதா..' என்றாள்.

அவன் சளைக்காமல் அவளைப் பார்த்தான். 'தெரியும். ஆனா கடைசி முயற்சியாகத்தான் இங்க வர்றேன். பாட்டியம்மா கிட்டே சொன்னேன். அவங்க புரிஞ்சுக்கல. உங்க அப்பாகிட்டே பேசத் தைரியம் இல்லை. ஆனால், இந்த முயற்சி தொடர்ந்தால் உங்களுக்கு ஒரு அவமானம் காத்திருக்கு!' என்றான்.

'ஓ...!' என்றாள்.

கண்களில் கவலையுடன் அவன் சொல்வதைக் கேட்கும்போது அவளுக்கு நம்பாமலும் இருக்க முடியவில்லை.

'எனக்கு இதுல எந்த லாபமும் இல்லை... இன் ஃபாக்ட்... நாங்க சாதாரணமான குடும்பம். நான் வேலை செய்ற கடை முதலாளிகிட்டே இந்த ஒரு மணி நேரம் பர்மிஷன் வாங்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு. ஆனால் என்னால வேடிக்கை பார்த்துட்டு சும்மாவும் இருக்க முடியலே!' என்றான்.

அவள் ஆழ்ந்த ஒரு பெருமூச்சு விட்டாள்.

'சார்... பெரியவங்களோட முடிவுல தலையிடணும்னா அதற்கு ஒரு அழுத்தமான காரணம் இருக்கணுமில்ல...!' என்றாள்.

அன்பழகன் அவளை வியப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒன்று அதிர்ச்சியடைவாள் அல்லது ஆத்திரப்படுவாள் என்று நினைத்து வந்தான். நேர்மாறாக விஷயத்தை அமைதியாக வாங்கிக் கொண்டு அவள் அலசுகிற விதம் பார்த்து அதிசயித்துப் போனான்.

'மேடம்! உங்களுக்குப் பர்சனலா இந்த முடிவுல பெரிய இன்ட்ரஸ்ட் இல்லேங்கறது நான் ஜட்ஜ் பண்ணினதுதான். ஆனால், வாழ்க்கை உங்களுது மேடம். யோசிச்சுக்குங்க.' என்றான். எழுந்தான். வணக்கம் சொல்லி லேசாகத் தலையசைத்து விட்டுப் போய் விட்டான்.

அவன் போனதற்குப் பிறகு தள்ளு கதவு ஆடுவதைப் பார்த்துக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தாள். அவன் சொல்ல வந்த விஷயம் முழுமையாக அவளுக்கு உறைத்தது. ஆனால், மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்த மாதிரி இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறான். இதை எப்படி யாரிடம் பேசுவது என்று நினைத்து வெகு நேரம் உட்கார்ந்து விட்டாள்.



## 2

அன்றிரவு

எட்டு மணி வாக்கில் பாட்டியின் அறைக்குப் போனாள். சற்று நேரம் செல்லம் கொஞ்சிக் கொண்டு பேசிக் கொண்டிருந்தாள். பிறகு மெதுவாகச் சன்னமான குரலில்,

'பாட்டி!' என்றாள்

'என்னம்மா...' என்றார்.

'பாட்டி! அன்பழகன்னு ஒருத்தர் இன்னைக்கு என்னைப் பார்க்க வந்திருந்தார்...' என்றாள். பாட்டி திகைத்துப் போய்ப் பார்த்தார்.

'என்ன சொன்னான்?' என்றார்.

சொன்னாள்

பாட்டி சற்று நேரம் ஒன்றும் பேச வில்லை.

'ஆமா, இங்கயும், வந்து என்னைப் பார்த்தான். ஜெகதாவுக்குத் தெரிய வேண்டாம்னு சொல்லிவிட்டு உன்கிட்ட சொன்ன மாதிரியேதான் எங்கிட்டேயும் சொன்னான்,' என்றார்.

மறுபடியும் ஒரு மௌனம். 'அவர் சொல்றதைப் பார்த்தால் கவலையா இருக்கு. ஆனா காரணம் சொல்ல மாட்டேங்கறாரே!'

'என்னன்னு உங்கப்பாகிட்டே சொல்றது? உங்கப்பாவோட கோபம் உனக்குத் தெரிஞ்சதுதானே!' என்றார்.

ஜனனியும் ஏற்றுக் கொண்டாள். உண்மைதான். அப்பா சாது மிரண்டால் காடு கொள்ளாது என்கிற ரகம். வாஜிக்கலாகச்

சொல்லத் தெரிய வேண்டும். இல்லையென்றால் ஏற்றுக் கொள்ளமாட்டார். பாட்டியே தொடர்ந்தார்.

'அதிலேயும் ஜெகதா என்னமோ இந்தக் கல்யாணத்துல ரொம்ப ஆர்வமாகச் செய்யறா... இப்ப போயி இடைஞ்சல் செய்தா... அவங்களுக்குள்ள ஏதாவது பிரச்சினை ஆனா... என்ன செய்றது? குடும்பத்தோட அமைதியே போயிடுமே...' என்றார்.

'ஆமா...' என்றாள் ஜனனி. பாட்டி மேலும் தொடர்ந்தார். 'பெருசா என்ன ஆயிரும் ஜனனி? கல்யாணத்துக்கப்புறம் உனக்கு அங்க, வசதி பத்தலேன்னா இங்க கொண்டு வந்தரலாம்னுதான், நானும் துணிஞ்சிட்டேன்.' என்றார் பாட்டி.

ஜனனி. பாட்டி இதைப் பற்றி வெகுவாக யோசித்திருக் கிறார், என்பதைப் புரிந்து கொண்டாள். பாட்டிக்கு இல்லாத அனுபவ அறிவா என்று சொல்லிக் கொண்டாள். நிம்மதி யானாள்.

கோமதியம்மாவுக்குமே நேரப் போகிற சம்பவத்தின் வீரியம் தெரிந்திருக்கவில்லை. தன் வாழ்க்கை தலைகீழாக மாறப் போகிறது என்பதை அப்போது ஜனனியும் தெரிந்து கொள்ளவில்லை.

- - - - - -

திருமண ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்தன.

வீட்டுச் சாமி கும்பிடுவது, மண்டபத்துக்குச் செல்வது என்று எல்லாமும் நன்றாகவே நடந்து கொண்டிருந்தது.

மாப்பிள்ளை அழைப்பு கூடச் சிறப்பாக நடந்து முடிந்தது. அதை விட அதிசயம் என்ன வென்றால், அன்பழகன் அத்திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டு



உறவினனாக வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பது கண்டு அவளுக்கு உள்ளூர ஆச்சர்யமாகக் கூட இருந்தது.

அன்பழகன் ஒரு விதப் பதட்டத்திலேயே இருக்கிறான் என்றும் அவளுக்குப் புரிந்தது. ஆனால், பெரிதாகக் கண்டு கொள்ள வில்லை.

'ஏங்க! வெத்தலை பாக்கு மாத்தறது. பேச்சு வார்த்தை நடத்துறது. இதெல்லாம் கொஞ்சம் லேட் ஆகவே வைச்சுக்கலாமா?' என்று ஜெகதா வந்து கேட்டபோது, 'வச்சுக்கலாம், ஜெகதா. சாப்பாட்டுப் பந்தி முடியட்டும். அப்புறம் பெரியவங்களெல்லாம் வேற... அந்த நேரத்துல கொஞ்சம் கலாட்டாவாகவே பேசுவாங்க... லேட்டாகவே வைச்சுக்கலாம்...' என்றார் நாகமாணிக்கம். முகத்தில் சிரிப்பு நிறைந்திருந்தது.

எப்போதும் அளவாகவே பேசுகிறவர் மகளுக்குத் திருமணமாகப் போகிற மகிழ்ச்சியால் சற்று உற்சாகமாகவே இருந்தார்.

பந்தி முடிவதற்கே பத்து மணியாகி விட்டது. நிறையக் கூட்டம். ஜனனியின் தோழிகள் வேறு அவளை ஏராளமாகக் கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள். பேச்சு வார்த்தை என்ற பெயரில் பேருக்கு இரண்டு வீட்டாரும் எதிரெதிரே அமர்ந்து கொண்டு கலாட்டாவாகப் பேசிக் கொள்வார்கள். கல்யாண வீடுகளில் அதை ஒரு ஆர்வமாகப் பார்ப்பதில் ஜனனிக்கு ஒரு விருப்பம் உண்டு என்பதையெல்லாம் தன் தோழிகளிடம் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

பரபரப்பான பேச்சுவார்த்தைக்குத் தயாரான போதுதான் அது நிகழ்ந்தது.

மாப்பிள்ளை நீலகண்டன் மாயமாகிப் போய்விட்டான். ஒரு சின்னக் கவரில் ஒரு வெள்ளைப் பேப்பரில் -

'இந்தத் திருமணத்தில் எனக்கு விருப்பம் இல்லை... மன்னித்து விடுங்கள் எனக்கு வேறு பெண்ணின் மீது விருப்பம்' என்று வெகு சுருக்கமாக எழுதிவிட்டுப் போயிருந்தான்.

பெரியவர்களுக்கு விஷயம் தெரிய, அதிர்ச்சி அலைகள் பரவியது.

கோமதிப் பாட்டிக்கு விஷயம் தெரிய அதிர்ச்சியானார்.

அன்பழகனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு காரில் ஏற்றிக் கொண்டு ஒரு மறைவான இடத்துக்குப் போனார், இரு கைகளையும் கூப்பியபடி.

'அப்பா... உனக்கு ஏதோ தெரிஞ்சிருக்கு. முழுசா சொல்லுப்பா...' என்று கூறி அழுதார். அவன் கலங்கிப் போய் முடிவில் தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொன்னான். டிரைவர் பலையா நாகரீகமாகச் சற்று ஒதுங்கி நின்று கொண்டார்.

முழுவதையும் கேட்கக் கேட்க கோமதியம்மாள் வெகுவாக அதிர்ச்சியானார்.

பிறகு, 'பாலையா, வண்டிய எடு,' என்றார்.

காரில் சற்று தூரம் போன பின், 'தம்பி... உன் கைகளைக் காலா நெனச்சுக் கும்பிடுகிறேன். என் பேத்தியை நீயே கல்யாணம் செஞ்சுக்கப்பா...' என்றார்.

அன்பழகன் அதிர்ந்து போனான். 'ஐயய்யோ... பாட்டி பேசாம இருங்க. நடக்கிற அநியாயம் பொறுக்காம நா உங்ககிட்டே சொல்ல வந்தேன். வெறும் மூவாயிரம் ரூபாய் சம்பளக்காரன் நான். எனக்குக் கல்யாணமாவது... இப்பவாவது... கடமைகள் நிறைய இருக்கு,' என்றான்.

'புரியுதுப்பா... ஆனா இந்தக் கல்யாணம் நின்னு போனா அவங்க திட்டம் நிறைவேறிடாதா என்ன? காரணத்தையும் என் மகன்கிட்டே சொல்ல முடியாது. ஒரு குடும்ப மானத்தைக் காப்பாத்துப்பா. உங்க அப்பா அம்மாகிட்டே நான் பேசறேன்,' என்றார். மேலும், அன்பழகனைத் தான் பேச விடவேயில்லை.



- - - - -

மண்டபத்திற்கு வந்த பின்னே பேத்தியை அழைத்தார்.

'பாரு ஜனனி! நான் சொல்றபடி செய். நேரா உங்கப்பா கிட்டே போய் நான் சொல்றதை அப்படியே சொல்லு,' என்றார்.

ஜனனி சொன்னாள், 'பாட்டி! நான் கல்யாணம் வேணும்னு கேட்டேனா? நீலகண்டனோ காலகண்டனோ எவனானாலும் பரவாயில்லைன்னு இருந்தேனே... அதுக்காகவா இப்படி?' என்று அழுதாள்.

பாட்டி அணைத்துக் கொண்டு தேற்றினார். 'அன்பழகன் சொன்னது சரிதான் பெரிய சதி நடந்திருக்கு. அதை இப்போதைக்கு வெளிய சொன்னா விவகாரம் வேற மாதிரியாய்ப் போகும். இப்ப இருக்கிற மனநிலையில் நான் எது செய்தாலும் உங்கப்பாவுக்குக் கோபம்தான் வரும். அதனாலே அவன் கோபத்தை நீ தாங்கிக்க... இப்ப அது கஷ்டம்தான். ஆனால், பின்னாலே உன் வாழ்க்கை நல்லா இருக்கும். சொன்னதைக் கேளு,' என்று கண்ணீர்விடவும், ஜனனி ஏற்றுக் கொண்டாள்.

நேராக அப்பாவிடம் போனாள். அப்பா சோகமாக, அதிர்ச்சியால் சுருண்டு அமர்ந்திருந்தார். பாலையா பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். ஜெகதாவும் கவலையோடு அருகில் நின்றபடி, 'பாவி! இப்படிச் செஞ்சிட்டானே!' என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.

'சித்த சும்மாயிரு, ஜெகதா,' என்று நாகமாணிக்கம் எரிந்து விழவும் அமைதியாகி விட்டாள். அந்த நேரம் ஜனனி நுழைந்தாள்.

'அப்பா, எனக்குக் கல்யாணம் வேணும்னு கேட்டேனா? இப்படியொரு ஏற்பாடு செய்து என் மானத்தையே விலை பேசிட்டீங்க. இப்பவாவது நான் சொல்றதைக் கேளுங்க...' என்றாள்.

அப்பா செய்வதறியாமல் தாயாரைப் பார்த்தார்.

'இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடலை இவங்க சொந்தத்துலேயே அன்பழகன்னு ஒருத்தர் இருக்காரு. அவரை நான் கல்யாணம் செஞ்சுக்கிறேன்.' என்றாள்.

ஜெகதா அதிர்ச்சியடைந்து போனாள். 'ஐயய்யோ! ரொம்ப வசதியில்லாத குடும்பம்.' என்றாள்.

'பரவாயில்லை. அவரையே நான் செஞ்சுக்கிறேன்.'

'அவன் சம்மதிக்கணுமே?' என்றாள் ஜெகதா.

'நான் பாட்டிகிட்டே சொன்னேன். பாட்டி கேட்டுச் சம்மதம் வாங்கியாச்சு.' என்றாள் விரைப்பாக.

அப்பா அவசரம் காரணமாகப் பயந்தார். 'அம்மா! ஒன்னு தப்பா போச்சன்னா அதற்காக இப்படி அவசரப்படணுமா,' என்ன?'

'இல்லப்பா...' என்றாள் ஜனனி.

அப்படிப் பேசுவது அவளுக்கே கஷ்டமாக இருந்தது. ஆனால் வேற வழி இருக்கவில்லையே.

அப்பாவுக்குக் கோபம் வந்தது. 'பாரு, ஜனனி, ரொம்ப பிடிவாதம் பிடிச்சே... அப்பாவை மறந்துற வேண்டியதுதான்!' என்றார்.

அவள் அப்பாவை வெறித்துப் பார்த்தாள்.

'அப்பா! உங்களை எப்படியப்பா மறப்பேன்? ஆனா, நீங்க சொல்றது எனக்குப் புரியுது. நீங்க என்னை



வெளியேற்றிடுவீங்க இல்லை?' என்றாள். அப்பா வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'பரவாயில்லப்பா. இத்தனை பெரியவங்க முன்னாலே நாம எதையும் காட்டிக்க வேண்டாம். கல்யாணத்தை நல்லபடியா நடத்தி, நம்ம கௌரவத்தைக் காப்பாத்திக்குங்க. அதுக்கப்புறம் நீங்களா வந்து கூப்பிடற வரைக்கும் நானா வர மாட்டேன்.' என்றாள், வெளியேறினாள்.

வெளியிலே யாருக்கும் எதுவும் தெரியவில்லை என்றாலும் உள்ளே உறவுகளில் பெரிய விரிசல் விழுந்து விட்டது.

அப்பாவிடம் பேசிவிட்டுப் போய்ப் பாட்டியின் தோளில் முகம் பதித்துக் கதறினாள் ஜனனி. 'பாட்டி, அப்பாவை எதிர்த்து விட்டேனே!' என்று.

'பரவாயில்லை தங்கம். எல்லாம் சரியாயிடும்.' என்று தேற்றினார் பாட்டி .

பிறகு, 'கொஞ்ச நாள் கஷ்டமாயிருக்கும். ஆனா அந்தப் பையன் சொல்றபடி நடந்துக்க. தங்கமான பையன்!' என்றார். 'வசதிக் குறைவு இருந்தாலும் தாங்கிக்க. ஆனால், அப்பாவிடம் மட்டும் எதையும் வாங்கிக்காதே!' என்றார்.

'சரி, பாட்டி!' என்றாள்.

பிறகு மறுபடியும் அன்பழகனை அழைத்தார்.

'அப்பா! பின்னாலே எல்லாமும் சரியாயிடும்... ஆனா... அதுக்கு முன்னாடி அவளைக் கண் கலங்காம வச்சுக்கப்பா.' என்றார்.

'நீங்க எங்க சூழ்நிலைக்குத் தயார் செய்திடுங்க! என்றான், பிறகு.

'பாட்டியம்மா, கவலைப்படாதீங்க.. இந்தப் பிரச்சினையை நான் கொண்டு வரப்ப இப்படியொரு விளைவை எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஏற்பட்டு விட்டது.' ஏத்துக்கிட்டது ஏத்துக்கிட்டதுதான். என் உயிருள்ளவரை உங்க பேத்திதான் என் மனைவி. என் சக்திக்கு என்ன முடியுமோ செய்றேன். நல்லா வச்சுக்கறேன்,' என்றான்.

'அப்பா.. செல்லமா, வசதியா வளர்ந்தவ. முன்னே பின்னே இருந்தாலும் நீதான் பொறுத்துப் போகணும்..' என்று குலுங்கி அழுதார்.

அவன் சற்றும் தயங்காமல் அவரை அணைத்துக் கொண்டான்.

'கவலைப் படாதீங்க பாட்டி . கடவுள் இருக்கிறார்!' என்றான்.

நடப்பது எல்லாவற்றையும் மௌன சாட்சியாய் ஒருவர் பார்த்துக் கொண்டிருந்ததை அவர்கள் அறியவில்லை.

## 3

மாப்பிள்ளை வீட்டு அழைப்பு பெண் வீட்டு அழைப்பு எல்லாம் முடிகிற வரைக்கும் அன்பழகனும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

நாகமாணிக்கமும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

இரண்டு நாட்களில் நெருங்கிய உறவினர்கள் எல்லாரும் கிளம்பிச் சென்றதற்குப் பிறகுதான், அன்பழகனின் குடும்பத்தாரும் கிளம்பினார்கள்.



அப்போதுதான் அன்பழகன் அம்மா அப்பாவிடம், 'அப்பா! வீட்டை ரெடி பண்ணி வைங்க... இன்னும் ஒரு மணி நேரத்தில அங்க கூப்பிட்டு வந்தர்றேன்,' என்றான்.

அவர்கள் சரியென்று புறப்பட்டுப் போனார்கள்.. பிறகு ஜனனியிடம் சொன்னான். 'ஜனனி... இங்கிருந்து எதையும் எடுக்காதே... முடிஞ்ச வரைக்கும் மினிமைஸ் செஞ்சுக்கோ,' என்றான்.

'சரிங்க...' என்றாள்.

கடந்த இரண்டு நாட்களில் என்னதான் தன்னை மரியாதையாய் நடத்தினாலும், ஒரு முறை கூட மாமனார் தன்னை மாப்பிள்ளை என்று அழைக்கவில்லை என்பதைக் கவனித்துப் புன்னகைத்துக் கொண்டான் அன்பழகன்.

தன் பின்னால் நிழலாடுவதைக் கண்டு திரும்பினார் நாகமாணிக்கம். அன்பழகனும், ஜனனியும் நின்றிருக்கக் கண்டார்.

'நானும் என் மனைவியும் கிளம்பறோம், மாமா,' என்று கை கூப்பினான். தன்னையும் மீறி நாகமாணிக்கம் பதட்டமானார்.

'இருங்க.... நாளைக்கு.... நாளன்னைக்குப் போகலாம். சடங்கு வேற இருக்கு...' என்றார்.

இப்போது ஜனனி பேசினாள். 'இல்லப்பா, இவ்வளவு கௌரவமா நடத்தி வைச்சீங்களே.... அதுவே போதும். நாங்க கிளம்பறோம்..!' என்று நகர்ந்தாள்.

'இரும்மா...' என்று ஜெகதாவை நோக்கிக் கண்ணைக் காட்ட, அவள் வேலைக்காரர்களை அழைத்துப் பாத்திர பண்டங்கள், சீர் வரிசை என்று ஹாலில் பரப்பினாள். நகைப் பெட்டிகளை எடுத்தபோது அன்பழகன் கையமர்த்தினான்

'ஜெகதாக்கா, ப்ளீஸ் இதெல்லாம் எதுவும் வேண்டாம், வாங்கிக்கிற மனநிலையில நாங்க இல்லை.' என்றான்.

'நாங்க புறப்படறோம்...' என்று பொதுப்படையாகச் சொல்லி விட்டு ஒரே ஒரு சூட்கேஸை எடுத்துக் கொண்டு அன்பழகனுடன் புறப்படுகிற மகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார், நாகமாணிக்கம்.

பாட்டியும் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். மாமனார் மாமியார் காலில் விழுந்து வணங்கினார்கள். தடுக்கவில்லை. ஆனால் மௌனமாக நின்றார்கள் பாட்டியிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டார்கள்.

'பாட்டியம்மா! கவலைப் படாதீங்க ஏதோ கடவுள் புண்ணியத்துல இருக்க இடமிருக்கு. இங்கே மாதிரி தங்கத் தட்டில வெட்டி விடுகிற சக்தி எனக்கு இல்லேன்னாலும்... அவளோட வயிறு வாடாம... மனசு நோகாம பார்த்துக்குவேன்,' என்றான், புறப்பட்டார்கள்.

பாலையா ஓடி வந்து, 'காரெடுக்கவா?' என்றபோது, 'வேண்டாம் அங்கிள்,' என்று சொல்லிவிட்டு, கணவனை அழைத்துக் கொண்டு நடந்து போய் ஆட்டோ பிடித்துப்போகிற அவர்களை போர்டிகோவில் நின்றபடி பார்த்துவிட்டுத் திரும்பிய நாகமாணிக்கம் அம்மாவைப் பார்த்தார்.

'பரவாயில்லம்மா! நீ பிடிச்ச மாப்பிள்ளை ரோஷக்காரன் தான்!' என்று கசப்பாய்ச் சிரித்தார்.

'பின்னே? ஓடுகாலியாவா பிடிப்பேன்!' என்று கிண்டலாக ஒரு பார்வை பார்த்து விட்டுப் போகிற அம்மாவை அதிர்ந்து போய்ப் பார்த்தார்.

- - - - -



ஜனனியும் அன்பழகனும் வீட்டுக்கு வந்தபோது அன்பழகனின் வீடே பரபரப்பானது. பெரிய இடத்துப் பெண், எல்லாவற்றையும் உதறி விட்டு மகனோடு வந்திருக்கிறாள் என்பது அவர்களின் மனதை நெகிழச் செய்திருந்தது.

ஜனனியும் அவனும் மீண்டும் ஒரு முறை அன்பழகனின் அம்மா, அப்பாவின் காலில் விழுந்து வணங்கினார்கள்.

அன்பழகனுக்கு ஒரு தங்கை ஒரு தம்பி இருந்தார்கள். தங்கை அவனை விட நான்கு வயது குறைந்தவள். தம்பி ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருந்தான். இன்னொரு சின்னக் குழந்தை இருந்தான். 'அண்ணா' என்று ஓடி வந்து அன்பழகனிடம் தொற்றிக் கொண்ட அவனை வாரி எடுத்துக் கொண்டவனை ஜனனி ஆச்சர்யமாய்ப் பார்த்தாள். 'வாடா, கொசுறுப் பயலே!' என்று அணைத்துக் கொண்டான்.

'இதுதான் என் கடைசித் தம்பி!' என்று சிரித்தான்.

விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். வடை பாயசத்துடன் சாப்பிட்டார்கள்.

'அண்ணி, நான்தான் அறிவழகன்...' என்று கொழுந்தன் அறிமுகம் செய்து கொண்டான்.

'ஆமா, பேருலதான் அறிவு. தலையில் ஒண்ணும் இல்லை!' என்று அக்கா சிரித்தாள்.

'ஆமா, உம் பேரும்தான் கவிதா... நீயென்ன கவிதையா எழுதறே... நீ எழுதினா எவன் படிப்பான்...!' என்று அவன் திரும்பிக் கிண்டல் செய்தான்.

அவள் கைகழுவ வாஷ் பேசினுக்குப் போனபோது அன்பழகன் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

'அப்பா... நீ பாட்டுக்குக் கடனைக் கிடனை வாங்கித் தடபுடல் பண்ணாதே... நம்ம வீட்டு உண்மையான நிலவரம்

என்னென்னு ஜனனிக்குத் தெரியும். வெட்டியா வேஷமெல்லாம் வேண்டாம். என்ன?' என்றான்.

'அண்ணி, வீட்டைச் சுத்திப் பார்க்கலாமா?' என்றான் அறிவழகன். 'என்னத்தைச் சுத்திப் பார்க்கிறது. நின்ன இடத்துலேயே ஒரு சுத்து சுத்திக்கோ ஜனனி... பார். இது ஒரே ஒரு பெட்ரூம்... இது ஸ்டோர் ரூம். நாம நிக்கறமே... இதுதான் டிராயிங் ரூம் இது கிச்சன். அவ்வளவுதான்' என்று அன்பழகன் சிரிப்பதை அவள் நெகிழ்ச்சியுடன் பார்த்தாள். பிறகு அவளும் சிரித்தாள்.

'போதும்... போதும்... என்னோட ஒரு சின்ன சூட்கேஸ் வைக்க இந்த இடம் போதாதாக்கும். உங்களோட நானும் ஒரு ஓரமா இருந்துக்கிறேன்.' என்றாள்.

அன்பழகனின் அம்மா செண்பகமும், அப்பா மருதாசலமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சுட்டிப் பயலைப் பாபு என்று அழைத்தார்கள். பாபு ஜனனியின் மடியை விட்டு நகரவில்லை. அவளும் அவன் சொல்லுகிற கதைகளைச் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டு அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அமர்ந்து இருந்தாள்.

பத்து மணி வாக்கில் அத்தை அழைக்கவே, 'என்னங்க அத்தை?' என்று போனாள்.

கவிதா, பாபு, அறிவழகன் எல்லாரும் உறங்கியிருந் தார்கள்.

ஸ்டோர் ரூமில் இருந்த அந்தச் சாமான்களிடையே சாமி படங்களை மாட்டியிருந்தார்கள்.

'கும்பிட்டுக்கோம்மா...' என்றாள். அவள் விழுந்து கும்பிட்டாள். ஆசீர்வதித்து ஒரு பால் சொம்பைக் கையில் கொடுத்து அனுப்பவும்தான் ஜனனிக்கே விஷயம் புரிந்தது.



ஒரு திகைப்புடன் தனியாக இருந்த ஒரே பெட்ரூமுக்குப் போனாள். அங்கே அன்பழகன் டிரஸ்ஸிங் டேபிள் முன்னால் தலை கோதிக் கொண்டு நின்று கொண்டிருந்ததைப் பார்த்துத் தயங்கினாள்.

அவளைப் பார்த்து விட்டுப் புன்னகைத்து, அருகில் வந்தான். கையில் சொம்பை வாங்கி மேஜையில் வைத்துவிட்டுக் கதவைத் தாழிட்டு விட்டு வந்தான்.

அவள் செய்வதறியாது கலக்கத்தோடு நின்றிருந்தாள்.

'உட்காரு ஜனனி.' என்று அருகில் அமர்த்திக் கொண்டான்.

'ஜனனி...' என்றான்.

'ம்...!' என்றாள் அவள்.

'நடந்த எல்லாமும் உனக்கு அதிர்ச்சியா யிருக்கும் இல்லை...!' என்று ஆறுதலாய்க் கேட்டான்.

'ம்!' என்று தலையசைத்தாள். பிறகு, 'ஆனா பாவம்! எதிர்பாராம நீங்க இதில சிக்கிட்டிங்க. இல்லை? பாட்டி ஏன் இப்படி பிடிவாதம் பிடிச்சாங்கன்னு தெரியலை...!' என்றாள் சிந்தனையுடன்.

'பாட்டி என் மேல நம்பிக்கை வைத்தது, எனக்கு ஆச்சரியம்தான்.' என்று சிந்தனையோடு சொல்லிக் கொண்டான். பிறகு இடது கையால் லேசாக அணைத்துக் கொண்டான். அவள் தடுக்கவில்லை. ஆனால், கலக்கமாய் அவன் முகம் பார்த்தாள்.

'பயப்படாதே!' என்று சிரித்தான். 'உன் அப்பா ஏற்கலையேங்கற கவலை உனக்கு. இல்லே?' என்றான்.

தன் கவலையைத் துல்லியமாக அவன் புரிந்து கொண்டது அவளுக்கு வியப்பாக இருந்தது.

'ஜனனி! நடந்து போன விஷயங்களை நீ முழுமையாக ஜீரணித்து மனசார ஏத்துக்கற வரைக்கும் எதுவும் வேண்டாம். என்ன..!' என்றான்.

அவள் நிம்மதியானாள். அவன் அணைத்துப் பிடித்துக் கொண்டான்.

'அப்பா அம்மா பாட்டி எல்லோரையும் விட்டுட்டு வந்தது கஷ்டமா இருக்கா என்ன?' என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் உதிர்ந்தது. அவன் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான். 'ஹேய் அசடு. அழாதே!' என்று தேற்றினான்.

'அன்னைக்கு என்னமோ ஆபிஸ்ல வந்து பார்த்தப்போ ரொம்ப போல்டா இருந்தே!' என்றான். அவள் ஒன்றும் பேசவில்லை.

தட்டிக் கொடுத்தான்.

'இங்கேயும் உன் ராஜ்யம்தான். நீ எப்படிச் சொல்றியோ அப்படி . ஓகேவா?' என்றான்.

அவள் தலையாட்டிக் கொண்டாள். அடுத்து அவன் பேசியபோது அவன் குரலில் கலக்கம் தோன்றியது.

'ஜனனி.. நீ ரொம்ப.. வசதியா வளர்ந்தவ. இங்க அந்த அளவுக்கு வசதி இருக்காது முடிந்த வரைக்கும் செஞ்சு தரேன். அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்.' என்றான்.

'அது ஒன்றும் பிரச்சினையில்லை, ஒரு வருஷம் ஹாஸ்டல்ல இருந்திருக்கிறேன். சமாளிச்சுக்குவேன்!' என்றாள்.

அவன் சற்றே நிம்மதியானான்.

'அப்புறம்.. அப்புறம்..!' என்றான்.



அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்கவும், 'நமக்குள்ளே எதுவும் நடக்கலைன்னு அம்மா அப்பாவுக்குத் தெரிய வேண்டாம். ஏன்னா கவலைப்படுவாங்க!' என்றான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு தலையாட்டினாள்.

'கொஞ்ச நேரம் உங்க வீட்டைப் பத்தியெல்லாம் சொல்லு,' என்று பேச விட்டான். பிறகு, 'ஜனனி, எனக்கு ரொம்ப பிடித்த கேசட்,' என்று, காயத்ரி வீணை இசை பதிவாக்கப்பட்ட ஒரு கேசட் போட்டான்.

கேட்டுக் கொண்டே சற்று நேரத்தில் அவள் உறங்கக் கண்டு சரியாகப் படுக்கச் செய்தான். பிறகு எழுந்து வந்து ஸோபாவில் படுத்துக் கொண்டான்.

வீம்பாகச் சொல்லி விட்டு வந்து விட்டோம். எப்படி இவளைக் கண் கலங்காமல் பார்த்துக் கொள்ளப் போகிறோம் என்று யோசித்துக் கொண்டே வெகு நேரம் விழித்திருந்தான்.

## 4

காலை ஆறு மணிக்கு விழிப்பு வந்தது ஜனனிக்கு.

சுற்றுப்புறம் மனதில் படிவதற்கே கொஞ்ச நேரம் ஆனது. சற்று நேரம் திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

தான் பாட்டுக்கு விளையாட்டாய் ஆஃபிசுக்கு போய் வந்து கொண்டிருந்ததும், நினைத்தால் காரில் ஏறிக்கொண்டு சுற்றுவதும், காசைச் செலவழிப்பதுமாக எப்படி இருந்தோம்!

வேறு யாரோ தன் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றுவது போலவும், தான் அதை ஒரு கையாலாகாத வேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போலவும் உணர்ந்தாள்.

திரும்பிப் பார்த்தாள். எதிரே அந்த வீட்டில் இருந்த ஒரே நீள ஸோபாவில் அமர்ந்து கொண்டு தன்னைச் சுற்றிலும் அட்டைப் பெட்டிகள் இருக்க, ஸ்விட்சுகளைப் பொருத்திக் கொண்டு ஸ்குரு டிரைவரும் கையுமாய், அவளைப் பார்த்து 'குட் மார்னிங்!' என்றான்.

'குட் மார்னிங்!' என்று புன்னகைத்தாள். அவசரமாய்ச் சற்றே கூச்சத்துடன் எழுந்தாள்.

'எழுப்பியிருக்கலாமில்லை?' என்றாள்.

'எழுப்பியிருக்கலாம். ஆனா உங்க மாமியாரம்மாதான் செல்லமா வளர்ந்த பொண்ணுடா. நீ பாட்டுக்கு அவளை அஞ்சு மணிக்கெல்லாம் எழுப்பி விட்ராதே. அப்படின்னாங்க...' என்றான்.

'ஓ!' என்றாள்.

பிறகு முகம் திருத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே புறப்பட்டபோது, 'ஜனனி!' என்றான்.

'ம்!'

'நைட் நான் சொன்னது ஞாபகம் இருக்கா? அம்மா ஏதாவது ஜாடையா விசாரிச்சா எல்லாம் நார்மலா போயிட்டிருக்குன்னு சொல்லணும்...' என்றான். சொல்லும் போதே அவன் முகம் சிவப்பது கண்டு ஜனனியின் முகத்திலும் புன்னகை பிறந்தது. முகமும் சிவந்தது.

'ம்!' என்று தலையசைத்து விட்டுப் போய் விட்டாள்.

அவளைப் பார்த்தவுடன் மாமியார் புன்னகைத்தாள்.

'டீ சாப்பிடறியாம்மா!' என்றாள்.

'ம்..' என்றாள் தயக்கத்துடன்.

கொடுத்தார்கள்... பிறகு, 'நா வேணா அவருக்குக் கொண்டு போய்க் கொடுக்கட்டுமா?' என்றாள்.



'அவனா! அவன்தான் முதல் ஆளா டீ சாப்பிடறவன். வேண்ணா உன் கையால நீயே இன்னொரு டோஸ் கொண்டு போய்க் குடு..' என்றாள்.

அவள் டீ கொண்டு வந்ததைப் பார்த்து அவன் பதறிப் போனான்.

'ஜனனி! நீ எதுக்கு இந்த வேலையெல்லாம் செய்யறே?' என்றான்.

'ஏன், செய்யக்கூடாதா என்ன?' என்று தனது டம்ளரோடு சோபாவில் ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டு டீயை ரசித்துக் குடித்தாள்.

குடித்து விட்டு வரவும் பாபு அவள் தோளில் தொற்றிக் கொண்டான். புதிய இடத்தில் புதிய சூழலில் எப்படிப் பழக ஆரம்பிப்பது என்று அறிந்து கொள்வதற்குப் பாபு இதமான ஒரு தோழனாகிப் போனான்.

'உங்க வீட்டில கார் இருக்கிறதாமே! எங்கிட்டயும் இருக்கே!' என்றான்.

'நிஜம்மாவா? எனக்குக் காட்டேன்!' என்று அவனுடன் சகஜமாய்ப் பேசிக்கொண்டு அவள் அவனைப் பள்ளிக்குப் புறப்படச் செய்வதை வீடே கண்டும் காணாதது போல் கவனித்துக் கொண்டிருந்தது.

அறிவழகனும் பாபுவும் கிளம்பியதற்குப் பிறகு, அன்பழகனுக்கும் அவளுக்கும் டிஃபன் கொடுத்தார்கள்.

'நீ போய் ஓய்வெடுத்துக்கம்மா!' என்று அனுப்பினாள் செண்பகம்.

'இல்லங்கத்தை, நான் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்!' என்று சமையலறைக்கு வந்தாள்.

சமையலைக் கற்று வைத்திருந்தாள். அதனால் முடிந்தவரை உதவி செய்தாள்.

ஐந்து மணி வாக்கில், 'எம்மா... நீயும் அன்பழகனும் எங்கேயாவது போயிட்டு வாங்களேன்!' என்றாள், செண்பகம்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அப்போது அன்பழகனின் நண்பன் பாலா வந்தான்.

'என்னடா பயலே, விருந்தாளியாய்ப் போயிட்டு ஹீரோவா வந்து நிக்கறே..!' என்று கலாட்டா செய்தான்.

அன்பழகன் சிரித்துக் கொண்டான்.

'இங்க பார், டாங்க் ஃபுல் பண்ணிக் கொண்டு வந்திருக்கேன். ஒய்ஃப்பைக் கூட்டிட்டு எங்கையாவது போயிட்டு வா!' என்று தன் வண்டியைத் தந்து விட்டுப் போனான்.

மருதமலைக்குப் போனார்கள். போகிற வழியில், 'ஏங்க, உங்ககிட்டே வண்டியில்லையா என்ன?' என்றாள்.

'இருக்கே. உலகத்திலேயே தொல்லை தராத வாகனம். பெட்ரோல் பிரச்சினையே இல்லாத வாகனம்... சைக்கிள்!' என்றான்.

மேலே கோவிலுக்கு முன்னிருந்த படிகளில் அமர்ந்து சற்று நேரம் பேசினார்கள்.

'ஜனனி! ஒரு பக்கம் உன்னை இந்தக் குடும்பத்தில் கொண்டு வந்து தள்ளிவிட்ட விதியை நினைச்சா வருத்தமா இருக்கு. ஆனா ஒரு பெரிய ஆபத்திலே யிருந்து தப்பிச்சேன்னு நினைக்கறப்ப நிம்மதியாகவும் இருக்கு,' என்றான்.

அவள் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள்.

'நீங்களும், பாட்டியும் எங்கிட்ட எதையோ மறைக்கறீங்க..!' என்றாள்.



அவன் மறுக்கவில்லை, ஆனால் சொன்னான். 'ஜனனி, பாட்டி ஏதாவது உனக்குத் தெரிய வேண்டாம்னு நினைச்சா அது உன் நல்லதுக்குத்தானே!' என்று அவன் பேசி முடித்த பின், 'ஆமாம்,' என்றாள்.

பிறகு, 'நான் உங்களை எப்படிக் கூப்பிடறது?' என்றாள்.

'எப்படி வேண்டுமானாலும் கூப்பிடு,' என்றான்.

'அன்புன்னு கூப்பிடவா?' என்றாள்.

'ம்...' என்று சிரித்தான். 'ஆனால் நாம மட்டும் தனியா இருக்கும் போது..!' என்றான்.

'ஓ..!' என்றாள்.

'அன்பு! நம்ம வீட்ல சில சின்னச் சின்ன மாற்றங்கள் செய்யப் போறோம். இன்னும் கொஞ்சம் வசதிகள் கிடைக்கும்,' என்றாள்.

ஜனனி என்றான் அவன் ஆழ்ந்த சிந்தனையுடன். 'என்னோட மாசச் சம்பளம் மூவாயிரமும் அப்பாவோட பென்ஷன் ஒரு நாலாயிரமும். இது மொத்தமும் வைச்சுட்டுதான் குடும்பமே ஓடுது. வயிற்றுப்பட்டினியில்லாமல் ஆறு ஜீவன்கள் கௌரவமா வாழ்றதே பெரிய விஷயம்... இதுல எங்க வசதிகளை நினைச்சுப் பார்க்கறது?' என்றான்.

சென்ற மாதத்தில் அப்பா தனக்கு எடுத்துக் கொடுத்த பட்டுப் புடவைகள் ஒவ்வொன்றும் ஏழாயிரம் எட்டாயிரம் என்று எண்ணிக் கொண்டாள் ஜனனி. கூடவே அதை இப்போது நினைத்து ஆவது என்ன என்றும் எண்ணிக் கொண்டாள்.

'இதுல நான் வேற...' என்றாள்.

'நீ வேறயில்லம்மா. நீயும் இனிமே குடும்பத்தில் ஒருத்திதான்!' என்றான்.

'ஐயோ! தர்மப் பிரபுதான். ஆபத்தில் இருந்து கரையேற்றிக் கூப்பிட்டு வந்துட்டீங்க,' என்றவள். 'எங்க இது நல்லாயிருக்கே. தர்மப்பிரபு...... அப்ப நான் உங்களைப் பிரபுன்னு கூப்பிடவா?' என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'ம்... கூப்பிடு. பேர்லயாவது பிரபுவாய் இருப்போம்!' என்று தேங்காயை ஓங்கி ஓர் உடை உடைத்துத் துண்டு போட்டுக் கொடுத்தான்.

வீட்டுக்கு வந்தார்கள். அவளுக்கென்று இருந்த ஒரு பீரோவில் அவள் துணிகளை வைப்பதற்கும் இடம் ஒதுக்கிக் கொடுத்தான்... அடுக்கி வைத்தாள்.

'பிரபு இதுல பாருங்க, என் பிரெண்ட்ஸ் எல்லாம் எனக்கு மொய் வைச்ச பணம் பர்சில் இருக்கு. இத வைச்சு நான் என் சில சின்னச் சின்ன வசதிகளைச் செஞ்சுக்கவா?' என்றாள்.

'கையில கொஞ்சம் பணம் வச்சுக்கயேன்,' என்றான்.

'பரவாயில்லைங்க! இது எல்லாருக்கும் பயன் படட்டும்,' என்றாள்.

வெளியே பூத்திற்குப் போய் போன் செய்து பாலையாவை வைத்து இரண்டு ஆட்களை வரவழைத்தாள். திட்டங்கள் போட்டுக் கொண்டாள்.

அடுத்த நாள் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வேலைக்குக் கிளம்பினான்.

அவனை அனுப்பி விட்டு உள்ளே வந்தாள்.

'கவிதா, இங்க வா!' என்றாள். இரண்டு பேரும் சேர்ந்து பொருட்களை ஒழுங்குபடுத்திக் காலி செய்து லாஃப்டில் ஏற்றினார்கள்.

எட்டுக்குப் பத்து என்று இருந்த ஸ்டோர் ரூமைத் தங்கள் பெட் ரூமாக மாற்றினாள். சோபாவைக் கட்டிலுக்கு எதிரே போட்டார்கள்.



இருந்த அந்த பெட் ரூமை மற்றவர்கள் எல்லாருக்குமாகக் கொடுத்தாள். முதல் நாளிரவு அவள் பாத்ரூம் செல்ல எழுந்திருக்கையில் அதற்குப் பக்கத்தில் டிராயிங் ரூமில் எல்லாரும் ஒண்டிக் கொண்டு படுத்திருப்பதையும் பார்த்த போதிருந்தே அவளுக்கே ஒரு மாதிரியாக உணர்ந்திருந்தாள், அவள். அதைப்பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை.

மாலையில் மாமியார், 'பாவம்! ரெண்டு பொண்ணுங்களுக்கும் வேலை போதும். மீதிய நாளைக்குப் பார்த்துக்கலாம்,' என்று சூடாகப் பஜ்ஜியும் டீயும் கொடுத்தாள்.

'அத்தை! உங்க சமையல் ரொம்ப நல்லாயிருக்கு!' என்றாள் மனதார.

'நைட்டுக்கு என்ன மெனு?' என்றாள். 'மெனுவா...?' என்று அம்மாவும் மகளும் சிரித்தார்கள்.

'பிஸிபேளாபாத்!' என்றாள் கவிதா. 'இருக்கிற சாதம், சாம்பார், காய், ரசம் எல்லாத்தையும் குக்கர்ல கொட்டி, ரெண்டு விசில் விட்டா அதுவே பிஸிபேளாபாத்,' என்று சொல்லிக் கொண்டு சிரித்தாள்.

மணி ஆறாகியும் அன்பழனைக் காணவில்லை. அவள் வாசலைப் பார்ப்பது பார்த்து மாமியார்,

'சம்பளம் பூராத்தையும் எங்கிட்ட குடுத்துடுவான். கைச் செலவுக்கு எங்கையாவது பார்ட் டைம். வேலை பார்ப்பான்,' என்றாள்.

ஜனனியின் உள்ளம் நெகிழ்ந்து போனது. அன்பு வந்த போது தன் வீட்டில் செய்திருந்த மாற்றங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.

பார்த்தாலே களைப்பு தெரிந்தது. தங்கள் அறையில் தனிமை கிடைத்தபோது, 'எதுக்கு இவ்வளவு சிரமப் பட்டிருக்கே?' என்றான்.

'இல்லை. பிரபு நேற்று நைட் டாய்லெட் போறதுக்காக எழுந்தப்ப பார்த்தேன் எல்லாம் அந்த டிராயிங் ரூமிலே படுத்துக்கிட்டு இருந்ததைப் பார்க்க ஒரு மாதிரியா இருந்துச்சு. இப்ப என்ன, நமக்கு பிரைவசி கிடைக்கணும்னு நினைக்கறாங்க. அதுக்குத்தான் இந்த ஏற்பாடு,' என்றாள்.

'நாட் பேட்!' என்று சிரித்துக் கொண்டான்.

'பிரபு!' என்றாள்.

'ம்!'

'உங்களை ரொம்பத் தொல்லை பண்றேனா?' என்றாள்.

'ஆமா, ரொம்ப!' என்றான்.

அவள் திடுக்கிட்டாள் 'பின்னே நேத்து வரைக்கும், நிம்மதியா, எட்டு மணி, ஒன்பது மணின்னு வந்துகிட்டிருந்தேன். இப்ப ஏழு மணிக்கே ஓடி வர வேண்டியிருக்கே!' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

அவன் ஆடைகளை மாற்றிவிட்டு வந்தான்.

'ரொம்ப டயர்டா இருக்கு,' என்று சொல்லிவிட்டு, சோபாவில் படுத்தான். காலை ரிலாக்ஸ்டாக நீட்டிக் கொண்டவன், 'ஜனனி, உனக்கு என்ன ஸ்வீட் சாப்பிடப் பிடிக்கும்?' என்றான்.

'மைசூர்பா!' என்றாள்.

'ஏதாவது வாங்கிட்டு வரலாம்னு நெனச்சேன். ஆனா இங்கே கட்டுப்படியாகாது, கண்ணம்மா!' என்று சிரித்தான்.

'பரவாயில்லை!' என்றாள்.



திடீரென்று அவன் சிரித்தான். 'ஏன் ஜனனி, இப்படி ஒரு வீட்டிலே அம்மாவும் அப்பாவும் எதிர்த்துகிட்டு ஒரு கல்யாணம் என்று நீ நெனச்சுக் கூடப் பார்த்திருக்கமாட்டே, இல்ல...' என்றான்.

'ம்!' என்றாள், கண்களில் தூக்கக் கலக்கத்துடன். உறங்கி விட்டாள்.

நாள் முழுக்கச் சாமான்களை எடுத்துப் போட்ட களைப்பில் உறங்கிய அவளைப் பார்த்தான்.

அவன் நெஞ்சமே உருகி விட்டது.

கடவுள் ஏன் இப்படி யெல்லாம் ஒவ்வொருவரின் வாழ்வில் விளையாட வேண்டும் என்று கோபம் பொங்கியது.

## 5

காலை ஐந்து மணிக்கு விழிப்பு வந்துவிட்டது. ஜனனி எழுந்தாள். எதிர் சோஃபா காலியாக இருந்தது.

குளித்து முடித்து விட்டு வந்தாள். ஒரு புது வீட்டுக்கு கிரஹப் பிரவேசம் இரண்டு நாளில் இருக்கிறது. தனியாக எலக்ட்ரிகல் வொர்க் அந்த வீட்டுக்குச் செய்து கொடுக்கப் போகிறானாம். அதனால் காலை நாலு மணிக்கே கிளம்பிப் போய் விட்டான் என்றாள் மாமியார்.

பிறகு, 'குடும்பம் வேற ஆயிடுச்சில்ல, பொறுப்பு வந்துடுச்சு,' என்று சிரித்தாள்.

'அப்புறம் கடை?' என்று அவள் கேட்க, 'வேலை முடிச்சிட்டு அப்படியே ஒன்பது மணிக்குப் போயிருவான்.' என்றாள்.

'டிபன்...!' என்றாள் கவலையாக.

'காலைல அதைப் பத்திக் கேட்டா. எரிஞ்சு விழுவான். வேலைன்னு வந்தா அதெல்லாம் பெரிசா நினைக்க மாட்டான். மத்தியானம் வந்து ஒன்னா சாப்பிட்டுக்குவான்.' என்றாள் செண்பகம்.

ஜனனி தான் அந்த வீட்டுக்கு வந்தது வரமா சாபமா என்று புரியாமல் விழித்தாள்.

அடுப்படிக்கு வேலை செய்யப் போனாள். அங்கே வேறு தடுத்தார்கள். லேசான கோபம் வந்தது.

'அத்தை... ப்ளீஸ். என்னால முடிந்தவரை செய்ய விடுங்க. நான் ஒன்னும் விருந்தாளி இல்லை. முடியலைன்னா நானே ரெஸ்ட் எடுத்துக்கறேன்!' என்றாள்.

அத்தை அரண்டு விட்டாள். 'சரிம்மா. சரிம்மா. உன் இஷ்டம்!' என்றாள். கூடமாட உதவி செய்தாள். ஒன்பது மணி வாக்கில்தான் டிபன் சாப்பிட்டார்கள். சாப்பிடும்போது ஒரே உறுத்தலாக இருந்தது நாலு மணியிலே யிருந்து உழைத்து விட்டுக் கணவர் வெறும் வயிற்றோடு இருக்கையில் தான் மட்டும் சாப்பிடுகிறோமே என்று.

'நேரங் கெட்ட நேரத்தில் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லதில்லையே. அத்தை!' என்றாள்.

'என்னம்மா செய்யறது? சொன்னால் கேட்க மாட்டான். இந்த அதிகப்படி வருமானத்தின் ஒரு பகுதியைத் தங்கை கல்யாணத்துக்குச் சேர்த்து வைக்கிறான்.'

ஜனனி நெகிழ்ந்து போனாள். பிறகு உணர்ச்சி மயமான குரலில், 'அத்தை... இப்படி ஒரு பிள்ளை கிடைக்க நீங்க குடுத்து வச்சிருக்கணும்...' என்றாள்.

'அதிலென்ன சந்தேகம்...? இந்த வீட்டுப் பலமே அவன்தாம்மா...' என்றாள். பிறகு சடாரென்று எழுந்து ஒரு



டிபன் பாக்ஸில் இட்லிகளை வைத்துச் சட்டினி ஒரு கிண்ணத்தில் ஊற்றி ஒரு கூடையில் வைத்து எடுத்துக் கொண்டு, 'அத்தை. நான் டிபன் குடுத்துவிட்டு வந்தர்றேன்...' என்று கிளம்பினாள்.

அத்தை அனுமதிக்கத் தயங்கினாள்... 'நாங்க கொண்டு போனாலே திட்டுவான். அதுலயும் உன்னை அனுப்பி வைச்சா...!' என்றாள்.

அவள் அவளைப் பார்த்து விட்டு வாஞ்சையுடன் புன்னகைத்தாள். "அவதான் சொன்னா கேட்க மாட்டேங் கறாப்பா, என்னை என்ன பண்ணச் சொல்றே?'ன்னு சொல்லிடுங்க.' என்று வாசலுக்கு வந்தாள்.

கார் ஒன்று வந்து நிற்க பாலையா இறங்கினார்.

'அம்மா, பாட்டிம்மா இந்த செல்போனைக் குடுத்தாங்க. இது உங்களுக்குப் பாட்டி வாங்கிக் கொடுத்தது. அதனால அந்த வீட்டுச் சொத்து கிடையாது. மறுக்காம வாங்கிக்கணும். அப்பப்ப பேசவாவது செய்யலாம்... அப்படின்னு சொன்னாங்க. சரியா?' என்றார்.

ஒரு நிமிடம் யோசித்து விட்டு ஜனனி வாங்கிக் கொண்டாள், 'இது போக நான் வாங்கியது ஒன்றும் இருந்தது. அதையும் குடுத்தனுப்பச் சொல்லுங்க.' என்றாள். 'அப்புறம் பாட்டியைப் பார்க்கணும் போல இருக்குதுன்னு சொல்லுங்க... அப்பா எப்படி இருக்கிறார்? சித்தி எப்படி இருக்கிறாங்க?' என்றெல்லாம் விசாரித்து விட்டு, 'அவருக்கு டிபன் கொண்டு போறேன். வரட்டுமா?' என்று கூறிப் புன்னகைத்தாள்.

'நா கொண்டு போய் விடறேம்மா.' என்றார் பாலையா.

'நோ தாங்க்ஸ். கொஞ்ச தூரந்தானே. நடந்துக்கிறேன்!' என்று நடக்கிறவளைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டே காரில் ஏறினார் பாலையா.

ஜனனியை எதிர்பார்க்காத அன்பழகன் பதறிப் போனான்.

'ஜனனி! நீ எதுக்கு இப்படி நடந்து பையைத் தூக்கிட்டு...' என்று தவித்தான். முதலாளியிடம், 'சார் என் வைஃப்!' என்று அறிமுகப்படுத்தினான்.

அவள் யார் என்று தெரிந்ததும், அவர் அரண்டு போனார்.

உட்காருங்கம்மா என்று உபசரித்தார்.

'பரவாயில்லை. பரவாயில்லை அவரைச் சாப்பிட அனுமதிச்சீங்கன்னா...' என்று புன்னகைத்தாள்.

'தாராளமா! பாருங்க. அந்த ரூமிலே நீங்களே குடுங்கம்மா.' என்று அனுமதித்தார்.

'ஐயோ.... ஜனனி என்ன நீ!' என்று வெகுவாகப் பதட்டப்பட்ட அவனிடம்.

'என்ன ஆச்சு. இப்ப நீங்க சாப்பிடல. நான் சாப்பிடக் கொண்டு வந்தேன். சாப்பிடுங்க ப்ளீஸ்...!' என்றாள்.

'என்ன ஜனனி. நீ இப்படி...!' என்று மேலும் அவன் சங்கடப் படுவதைக் கண்ட அவள், 'என்ன பிரபு... எதுக்கு இவ்வளவு அன்ஈசியா ஃபீல் பண்றீங்க.' என்றவள் மெதுவாகப் புன்னகைத்தாள்.

'அப்போ நான் சிரமப்படக்கூடாதுன்னு நெனச்சீங்கன்னா கரெக்ட் டைமுக்குச் சாப்பிட்டேன்னு எனக்குத் தகவல் தெரிவிக்கனும். என்ன?'

அவன் விழித்தான்.

'இந்தாங்க இந்த செல்ஃபோன். வச்சுக்கங்க. என்னோட செல் இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடும். செலவோன்னு கவலைப்படாதீங்க. முந்நூறு ரூபாய்க்குள்ள முடிச்சுக்கலாம் என்ன? என்றாள்.



அவன் சாப்பிட்டுக் கொண்டே தலையசைத்தான். அவன் சாப்பிடச் சாப்பிட அன்றைக்குத் தான் என்னென்ன செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்று சொன்னாள்.

'பாருங்க பிரபு. நம்ம வீட்லே கீழேயும் ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கு. மாடியிலேயும் இருக்கு ஒரு ஹாஃப் எச்பி. மோட்டார் பொருத்திட்டா...' என்று உற்சாகமாய் விவரித்தவளை இடைமறித்து,

'ஜனனி, என் ஃபிரண்ட் ஒருத்தன் வீடு கட்டி முடிச்சுட்டான். தன்னோட பழைய மோட்டாரைக் கொடுக்கி றேங்கறான். வாங்கிக்கலாமா?' என்றான்.

அவள் ஒரு நிமிஷம் யோசித்து விட்டு 'ம். பாவம் அத்தையும் கவிதாவும் தொட்டியிலேருந்து தண்ணீர் மொண்டு மொண்டு வந்து ஊற்ற வேண்டியிருக்கு. சில சின்னச் சின்னச் செலவுகள் அவசியம்தான் பிரபு!' என்றாள்.

அவன் அமைதியாய் அவள் முகம் பார்த்தான்.

'ஆமாம் பிரபு. சிக்கனமாக இருக்கலாம் ஆனா கஞ்சத்தனம் இருக்கக் கூடாது.'

'ஓ..கே. ஓ..கே. புரிஞ்சுது!' என்றான்.

'சரி, வேறென்ன ஐடியா வச்சிருக்கே?' என்றான்.

அந்த மெயின் பெட் ரூமிலேருந்து பாத்ரூம் போட்டி ருக்கீங்களே. அதே போல நம்ம ரூமிலேருந்தும் ஒரு டோர் போட்டிருக்கு. ஒரே ஒரு பக்கம் ஒரு ஹாலோ பிளாக் சுவரெழுப்பி ஒரு கூரை போட்டா நமக்கு செப்பரேட் பாத்ரூம் ஆயிடும். லைட் ரூப் போதும் அல்லது சிமெண்ட் சீட் கூடப் போதும்.' என்றாள்.

'பணம்...?' என்றான்.

'எங்கிட்டேயிருக்கிற பணத்திலே முடிச்சுக்கிறேன்,' என்றாள்.

'ஜனனி, உனக்கு ஏதாவது...'

'வாங்கிக்கிறதா? அதான் பிரைவசி கிடைக்குமே. அந்த வசதி அரேஞ்ச் பண்ணிக்கறமே. அது போதாதா?' என்றாள், கலகலவென்று சிரித்தாள்.

அந்தக் கணம் அவளை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றிய உணர்வைக் கட்டுப் படுத்தியபடி அவசர அவசரமாக எடுத்துச் சாப்பிட்டான். அவள் அதைக் கவனிக்கவில்லை.

கடையை விட்டுப் புறப்பட்டபோது அவன் உள்ளே ஏதோ எடுக்கப் போன சமயம், 'இனியென்னம்மா சீர் செனத்தின்னு அன்பழகன் பெரிய ஆளாயிடுவான்...' என்றார் கடைக்காரர்.

'அதுதான் இல்லை. ஹால் முழுக்கப் பரப்பின பொருட்க ளையெல்லாம் ஒரு பார்வை பார்த்துவிட்டு என் வைஃபுக்குச் சோறு போடற சக்தியுண்டுன்னுட்டு வந்துட்டாரே... அந்த சந்தோஷந்தானே நான் இப்ப டிபனைத் தூக்கிட்டு ஓடி வர்றேன்!' என்று சிரித்தாள்.

ஜனனியை முதலாளி ஆச்சரியமாகப் பார்த்தாரென்றால், கையைத் துடைத்தபடி வருகின்ற அன்பழகனைச் சற்று மரியாதையுடனேயே பார்த்தார்.

அன்று மாலை ஐந்து மணிக்கு அவன் கிளம்பியபோது,

'அன்பழகன், இந்தா, உன் கல்யாணத்துக்கு என் போனஸ்!' என்று ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்.

'இந்த மாதத்திலேயிருந்து உன் சம்பளம் ஐந்நூறு ரூபாய் கூட்டியிருக்கிறேன்...' என்றார்.



வீட்டுக்குப் போனதும் சொன்னான். அம்மா, 'தம்பி... பாவம் அந்தப் பொண்ணு. நீ, எதுவும் வாங்கிக் கொடுக்கலை. போய் ஒரு புடவையும் பிளவுசும் வாங்கிட்டு வா. சர்ப்பிரைசா வச்சுக்க..!' என்றாள்.

அவன் உடனே புறப்பட்டுப் போய் முன்னூற்றைம்பது ரூபாயில் ஒரு புடவையும், மேட்சாக ஒரு பிளவுசும் எடுத்துக் கொண்டு, அரைக்கிலோ மைசூர்பாகு, காரம் என்று வாங்கிக் கொண்டு வந்தான்.

உள்ளே நுழைந்தான், அறிவழகன் கவிதா பாபு என்று எல்லாரும் ஒன்று கூடி ஜனனியுடன் தரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

கவிதா தோட்டத்தில் பூத்திருந்த ஜாதி மல்லிப் பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள். ஜனனியும் ஒரு நூலை எடுத்துக் கொண்டு முயற்சித்துக் கொண்டிருந்தாள். ஒன்றும் சரிவரவில்லை.

அறிவழகன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, 'அண்ணி! இன்னைக்கெல்லாம் ஒரு முழமாவது கட்டி முடிப்பீங்களா?' என்று கிண்டல் செய்து கொண்டிருந்தான். சிரிப்பும் கலகலப்புமாக இருந்தது.

ஸ்வீட் பாக்சைக் கண்டவுடன், 'ஹை ஸ்வீட்!' என்று பாபு ஓடிவந்து பறித்துக் கொண்டான். அவனும் அறிவழகனும் ஆளுக்கு இரண்டை அள்ளிக் கொள்ள மீதியை ஜனனியே எல்லாருக்கும் விநியோகித்தாள்.

'உனக்கு!' என்று அன்பழகன் எட்டிப் பார்க்க, 'இருக்கு!' என்றாள். எல்லாரும் சாப்பிட்ட பின் அவள் அறைக்குள்ளே போன பின்னால், அன்பழகனுக்குத் திடீரென்று சந்தேகம் வரப் பெட்டியை வாங்கிப் பார்க்க, அது காலியாக இருந்தது.

'ஜனனி..!' என்று அவள் முகத்தை வருத்தமாய்ப் பார்க்க.. அவள் சிரித்தாள்.

'பரவாயில்லைங்க. நான் நெறைய சாப்பிட்டிருக்கேன். குழந்தைங்க எவ்வளவு ஆசையாய்ச் சாப்பிட்டாங்க!' என்றாள்.

பின்னர், 'ஜனனி' என்று அவன் கண்கள் கலங்க லேசாக அணைத்த போது அவள் தடுக்கவில்லை. பாபு ஓடி வருகிற சத்தம் கேட்டு விலகிக் கொண்டாள்.

வருத்தத்துடன் சோபாவில் அமர்ந்து விட்டான். பாக்கெட்டைத் தடவிப் பார்த்தான் வேறு பணமும் இருக்க வில்லை. 'சே! அவளுக்கு இருக்கிறதா என்று பார்த்திருக்க வேண்டும்!' என்று நொந்து கொண்டான். அறையை விட்டு வெளியே வரவில்லை.

அம்மா என்ன நினைத்தாளோ திடீரென்று எல்லாரையும் கோவிலுக்கு அழைத்துப் போகிறேன் என்று கிளம்பினாள். மற்றவர்கள் எல்லாரும் வாசல் தாண்டியவுடன் திரும்பி வந்து, 'ஜனனி உன் வீட்டுக்காரன் ரொம்பக் கவலையா உட்கார்ந்திருக் கிறான். பாரு. அந்த சின்ன சம்படத்திலே ஒரு மைசூர்பா வச்சிருக்கிறேன், எடுத்துச் சாப்பிடு.' என்று குரல் கொடுத்துப் போனாள்.

அதற்குப் பிறகுதான் அவன் முகம் மலர்ந்தது. 'என்ன நீங்க. இதுக்குப் போய் இப்படி வருத்தப்பட்டுக்கிட்டு. அதான் புதுப்புடவை வாங்கித் தந்திருக்கீங்களே!' என்று தேற்றியபடி உடனே போய் அந்தப் புடவையை அணிந்து வந்தாள். அவன் அவளை ஆர்வமாகப் பார்த்தான். இயல்பாக அருகில் வருவான். சில சமயங்களில் லேசாக அணைத்துக் கொள்ளவும் செய்வான். ஆனால், அதோடு சரி.

வந்த இந்த நான்கைந்து நாட்களுக்குள்ளேயே ஜனனி அவனிடம் ஒரு தோழமை வளர்த்துக் கொண்டது அவனுக்கு



வியப்பாய் இருந்தது. செல்லமாய் இருந்தவள். அவனும் ஒரு நாகரிகமான நண்பனைப் போலவே நடந்து கொண்டான்.

சிரித்தார்கள். கேலி செய்தார்கள். கணவன் மனைவி என்ற உறவு நிலையை ஏற்றுக் கொண்டார்கள். இது எப்படி இவ்வளவு எளிமையாய்ச் சாத்தியமானது என்று இருவருக்கும் ஆச்சரியம்தான்.

உடை மாற்றிக் கொண்டு வந்த அவளிடம், 'ஜனனி! லுக்கிங் ப்யூடிபுல்!' என்று பாராட்டிக் கொண்டான்.

'தாங்க் யூ!' என்று சிரித்தாள்.

'தினமும் நாலு வகை சாப்பிடறவ. ஆனால் உன்னைக் கொண்டு வந்து ஒரு மைசூர்பாகு இல்லையென்றால்... சே!' என்று நொந்து கொண்டான்.

'அடடா! போதும் என்ஜினியர் சார். அங்க கிடைக்காத தெல்லாம் இங்க நிறையக் கிடைக்கிறதே. வீடு கலகலன்னு இருக்கு. இந்த ஷேரிங் அன்டு கேரிங் எல்லாம் ரொம்பப் பிடிச்சிருக்கு. நீங்க வாங்க. இப்ப புதுசா செஞ்சிருக்கிற சேஞ்சஸ் பார்க்கலியே....! என்று சுற்றிக் காட்டினாள்.

'பரவாயில்லையே. ஒரே நாள்ல முடிச்சுட்டே!' என்றான்.

'சிவில் என்ஜினியர் சார், நான். பாலையா கிட்டே சொல்லி ஆள் வரச் செய்து முடிச்சேன். யூஸ் பண்றதுக்கு இன்னும் இரண்டு மூன்று நாள்ல ரெடி ஆயிடும்..' என்றாள், ஜனனி.

அவன் நெகிழ்வாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன யோசனை, எலக்ட்ரிகல் என்ஜினியர் சார்.' என்று அவனை நிலவுலகுக்குக் கொண்டு வந்தாள்.

'ம்... ஒண்ணுமில்ல..' என்று புன்னகைத்தான்.

'பிரபு! இன்னைக்கு என் பிரண்ட்ஸ் கொஞ்சம் பேர் வந்தாங்க. ரமா கூட வந்திருந்தாள்!

தோழி.

ரமா அவளது நெருங்கிய தோழி. ரமா அவளது நெருங்கிய தோழி.

'உங்களோட பாலிஸி பத்தியெல்லாம் சொன்னேன். 'டீ ஜனனி. 'உனக்குக் கிடைச்சிருக்கிற மாப்பிள்ளை தங்கம்னா தங்கம். எங்க கல்யாணத்துக்கு எவ்வளவு கேட்டாங்க தெரியுமா? பாவம் எங்கப்பா. எவ்வளவு கஷ்டப்பட்டார் தெரியுமா? 'என்னை என்ன பண்ணச் சொல்றே. நான் என்ன செய்யறது...'ன்னு சொல்லிகிட்டே: எங்க வீட்டுக்காரர் நழுவிட்டாரு தெரியுமா?'ன்னு உங்களைப் பாராட்டினாங்க,' என்றாள்.

'ஏன், எனக்கு என்ன? வைஃபும் நல்ல அருமையான பெண்தான். பெரிய வசதியான குடும்பத்தில் வளர்ந்த வங்கறதையே மறந்துட்டு– இங்க அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு– அற்புதமாய் வானத்து நிலா மாதிரி இருந்தவ. இப்ப என் வீட்டு நிலாவா வந்திருக்கான்னு நானும் சொல்ல வேண்டியதுதானே...' என்றான், நெகிழ்ச்சி நிறைந்த குரலில்.

அவள் திகைத்துப் போய் அவன் முகம் பார்த்தாள். பார்வைகள் ஒன்றையொன்று பற்றிக்கொண்டன. அந்த முழு நிலவு நேரத்தில் தங்களுக்குள் ஏதோ பரிமாற்றம் நிகழ்ந்தது போல் நின்று கொண்டிருந்தார்கள்.

கார் ஒன்று சர்ரென்று வந்து அவர்கள் காம்பவுண்டுக்குள் நுழைய, சட்டென்று தங்களை மீட்டுக் கொண்டார்கள்.

ஜனனி முகம் சிவக்க நகர்ந்தாள். அவன் பார்வை அவளைத் தொடர்ந்தது.



## 6

'பாட்டி...!' என்று ஓடிப்போய்க் கட்டிக்கொண்டாள் ஜனனி.

'எப்படிம்மா இருக்கே? நீயில்லாம வீடே வெறிச்சோடிப் போய்க் கிடக்கு!' என்றார் கோமதியம்மாள். தனது கம்பீரமான நடையுடன் வீட்டுக்குள் நுழைந்தார். அதற்கு முன் திரும்பிப் பாலையாவிடம் ஏதோ கண் காட்ட, திரும்பி நடந்தார்.

'ஆனா! உங்க பேத்தி வந்ததுக்கப்புறம்தான் இந்த வீடே நிறைஞ்சிருக்கு...!' என்று வரவேற்றான் அன்பழகன்.

உள்ளே ஓடிப் போய்ச் சம்புடத்தில் அத்தை வைத்து விட்டுப் போன ஸ்வீட்டை எடுத்துத் தட்டில் வைத்து மிக்ஸரும் எடுத்துக் கொண்டு வந்து உபசரித்தாள். ஹார்லிக்ஸ் பாட்டிலை நீட்டிய பாட்டியிடம் வாங்கிக் கொண்டாள். அதிலேயே கொஞ்சம் பாட்டிக்கும் கலந்து கொண்டு வந்தாள்.

'உட்காருங்கப்பா...' என்று அன்பழகனைத் தன் எதிரே நாற்காலியில் அமர்த்திக் கொண்டார். வீட்டைச் சுற்றிப் பார்த்தார். அவள் புதிதாகக் கட்டிக் கொண்ட பாத்ரூமை எட்டிப் பார்த்தார்.

எவ்வளவு வசதியில் வளர்ந்தவள்! தான் சொன்ன வார்த்தைக்காக... எப்படி மாற்றிக் கொண்டாள்! இதுவரையிலும் கூட ஏன் பாட்டி அப்படிச் சொன்னீங்கன்னு ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை என்று எண்ணிக் கொண்ட போதே உள்ளம் விம்மியது.

'பாட்டியம்மா.... பழக்கமில்லாத வேலையெல்லாம் இழுத்துப் போட்டுக்காதேன்னா உங்க பேத்தி கேட்கறதில்லை!' என்று அவன் புகார் சொல்ல -

'இவரு மட்டும் என்னவாம்? காலையில நாலு மணிக்கு எழுந்து போய் அப்படிக் களைச்சுப் போற அளவுக்கு உழைக்கவேன்னு யார் கேட்டா?' என்று அவள் புகார் சொன்னாள்.

இருவரும் ஒருவர்பால் ஒருவர் காட்டுகிற அக்கறை அவருக்குப் புரிய, அவர் புன்னகைத்துக் கொண்டார். டம்ளரை வைத்துவிட்டுத் திரும்பிய ஜனனியின் காதில்,

'எம்ப்பா அவகிட்டே எதுவும் சொல்லிடலையே?' எனப் பாட்டி கேட்பதும்,

'இல்லை பாட்டியம்மா. உங்க பர்மிஷன் இல்லாமல் சொல்ல மாட்டேன்.' என்று அவன் சொல்வதும் விழுந்தது.

ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு, 'தெரியறப்ப தெரியட்டும்.' என்று நினைத்துக் கொண்டாள். அதற்குள் கோயிலுக்குப் போனவர்கள் எல்லாரும் வர வீடு கலகலப்பானது.

பாட்டி கண்ணைக் காட்ட, பாலையாவின் மேற்பார்வையில் ஸ்வீட் பாக்ஸ்களும் பழங்களும் காய்கறிகளும் வந்து இறங்கின. அன்பழகனும் தடுக்க வழியின்றி நின்றான்.

அம்மா செல்போன் கேட்டியேம்மா என்று எடுத்துக் கொடுத்தார். அறிவழகன் பேசகிற கிண்டலை ரசித்துக் கொண்டார்.

'பாட்டி! நீங்க அடிக்கடி வாங்க!' என்றதும், 'நான் மட்டும் வந்தா போதுமில்ல!' என்றார், சிரிப்பாக.

'நீங்க பெரியவங்களாச்சே! சும்மாவா வருவீங்க! ஏதோ இப்படி ஒன்னு ரெண்டு கூடை கொண்டு வந்தீங்கன்னா போதும்!' என்று கிண்டலடிக்க, எல்லாரும் சிரித்தார்கள்.

'பொழைக்கத் தெரிஞ்ச பயடா நீ!' என்றார், பாட்டி.



'பின்னே எங்கண்ணன் மாதிரி இருப்பேனாக்கும்!' என்று அவன் அன்பழகனை உசுப்பிவிட,

'டேய் சும்மாயிரு, பெரியவங்களை அப்படியெல்லாம் பேசக்கூடாது.' என்று அவன் மிரட்ட,

'பேசட்டும், விடு!' என்றவர் லேசாகப் பெருமூச்சு விட்டார்.

'அன்பழகன் பொழைக்கத் தெரியாதவனா வேன்னா இருக்கலாம் ஆனா வாழ்க்கை தெரிஞ்சவனப்பா!' என்றார்.

ஒரு நிமிடம் கனமான அமைதி நிலவியது. அறிவழகன் மட்டும், 'பாட்டி நீங்க ஏதோ பெரிய விஷயம் சொல்றீங்கன்னு மட்டும் தெரியுது..' என்றான்.

'அது சரி, போ. இதுக்கெல்லாம் கோனார் நோட்ஸா போட முடியும்?' என்று அவரும் சிரித்தார். பிறகு சற்று நேரம் பெரியவர்களிடம் அளவளாவினார்.

புறப்படும் போது, 'அம்மா! உன்னோட கைனடிக் ஹோண்டா சும்மா நின்னு ஒரு வழியாகிடும் போல இருக்கு. கொண்டு வந்து போடச் சொல்றேன்!' என்றார்.

அன்பழகனும் அவளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவர் அதைக் கண்டு கொள்ளாதவர் போல் தொடர்ந்தார்.

'அம்மா, உங்கம்மா உனக்கென்று போட்டு வச்சிருந்த மூணு லட்சம் ரூபாய் வட்டி குட்டி போட்டு இப்ப அஞ்சு லட்ச ரூபாய் ஃபிக்ஸட் டெபாசிட்டா உட்கார்ந்திருக்கு. ஆனா நீங்க ஃபிக்ஸடை எடுக்க முடியாது. வட்டி உன் பேருக்கு வர்ற மாதிரி ஏற்பாடு செஞ்சிருக்கிறேன். உன் கைச் செலவுக்கு ஆகும். மாப்பிள்ளையைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.' என்றார்.

பாட்டியம்மா... என்று அன்பழகன் ஏதோ பேச ஆரம்பிக்கவும்.

'ஒன்னும் பேசாதேப்பா இதுல பத்துப் பைசா அவங்கப்பன் காசு இல்லை. இது என்னோட தாய் வழிச் சொத்துல அவங்க அம்மாவுக்கு நான் குடுத்தது. போதுமா?' என்று அவன் வாயை அடைத்தார்.

சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டார்.

காரில் ஏறி அமர்ந்து இருவரையும் அருகில் அழைத்தார். ஜனனியின் கையில் ஒரு பாஸ் புத்தகத்தைத் திணித்தார்.

அன்பழகன் வேண்டாம் என்று தலையை ஆட்ட, 'பாருப்பா இது அவ வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சதுல அப்பப்ப போட்டு வைச்சது. நான் கல்யாணப் பரிசா ஒரு இருபத்தைந்தாயிரம் போட்டிருக்கேன். இதுல நீ மறுக்கறதுக்கு ஒன்னுமில்ல. அப்புறம் இந்த கிஃப்ட் பார்சல்ல, அவளோட அம்மாவோட நகைகள் அவளுக்கு வரவேண்டியது. கொஞ்சம் தான் வச்சிருக்கிறேன். நான் சொன்ன எல்லாத்தையும் கேட்ட மாதிரி இதையும் மறுக்காம வாங்கிக்கணும். அப்பதான் நிம்மதியா எனக்குச் சோறு இறங்கும்!' என்றார்.

அவர்கள் பதில் பேசமுன் கார் நகர்ந்து விட்டது.

அன்பழகன் முகம் இறுகியிருந்தது. திரும்பி வந்து அறையில் பாக்கெட்டைப் பிரித்துப் பார்த்தார்கள். கிட்டத்தட்ட நாப்பது ஐம்பது பவுனுக்கு மேல் நகைகள் இருந்தன.

'ஜனனி.. இது ஒன்னும் எனக்குப் பிடிக்கலை. உங்க அப்பாகிட்டே வீம்பாய்ப் பேசிவிட்டு அப்புறம் இதையெல்லாம்.. வாங்கிகிட்டா. என்ன அர்த்தம். உங்க வீட்டு நடைமுறை யெல்லாம் எனக்குப் புரியல!' என்றான் கடுப்பாக.



அவள் அன்புடன் அவனைப் பார்த்தாள். 'பாட்டி மனசு நோகுமே! என்ன செய்யறது? அதுவும் பாட்டி சில சொத்துக் களை யெல்லாம் எனக்குன்னு எழுதி வச்சுட்டாங்க. இந்த நகைகளெல்லாம் எங்க அம்மாவோடது. எனக்கென்று எப்பவோ இதை ஒதுக்கி வைச்சுட்டாங்க. ஆனா சித்திக்கும் பாட்டியே நெறய வாங்கிக் கொடுத்திருக்காங்க.' என்றாள்.

அவன் மறுபடியும் இறுக்கமாக அமர்ந்திருந்தான். அவள் அவன் முகத்தைக் கெஞ்சுவது போல் பார்க்க, 'இதுல ஒரு குந்துமணி கூட அப்பா வாங்கிக் கொடுத்தது இல்லை, போதுமா...?' என்றாள். 'ப்ளீஸ்....' என்றாள்.

அவள் தன்னிடம் கெஞ்சுவது உணர்ந்ததும். அவன் சற்று இளகினான். குரல் இளகியது.

'நீ வேற கழுத்தில கையிலன்னு நெறைய மாட்டிகிட்டு வந்துருக்கே..' என்றான், மீண்டும். அவள் அவனை ஆழமாகப் பார்த்தாள். 'பாருங்க. பிரபு. இதெல்லாம் நான் அப்பா ஆபிஸ்ல வேலை பார்த்ததுல எனக்குக் குடுத்த சம்பளத்திலே வாங்கியது. போதுமா...' என்றாள்.

சற்று நேரம் பலத்த மௌனம் நிலவியது. அவள் சட்டென்று ஒரு காரியம் செய்தாள்.

'அத்தை.. இந்த நகைகளெல்லாம் பாருங்களேன்..' என்று அத்தையிடமும் கவிதாவிடமும் காட்ட, அவர்கள் ஆவலாகப் பார்க்கலானார்கள்.

வெறும் மஞ்சள் கயிற்றைக் கழுத்தில் கட்டிக் கொண்டிருந்த அம்மாவின் கழுத்தை அவன் சங்கடமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நேரம் அவள் கழுத்திலிருந்த கனமான சங்கிலியைக் கழற்றி அத்தையின் கழுத்தில் போட்டாள். அவள் பதறிப் போனாள். மற்றொரு டாலர் வைத்த செயினைக் கவிதாவின் கழுத்தில் போட்டாள்.

'ஐய்யோ. அவனுக்குக் கோபம் வரும்..!' என்று அவள் பதறப் பதற அவள் அவன் பக்கம் திரும்பவே யில்லை. 'பாருங்கத்தை. எனக்கு அம்மாவோட கொடி இருக்கு அதை நான் போட்டுக்கிறேன்.' என்று போட்டுக் கொண்டாள்.

செண்பகம் செயினைக் கழற்றப் போனாள். அவள் தடுத்தாள். 'அத்தை.. இது என் சம்பளத்தில் நான் வாங்கியது அத்தை. உங்க மகன் வாங்கிக் கொடுத்தா வாங்கிக்க மாட்டீங்களா..?' என்றாள்.

அவள் கைகள் நின்றன. ஜனனி கண்கள் கலங்க நாற்காலியில் அமர்ந்தாள். 'நான் உங்களை யெல்லாம் என் மனுஷங்களா நம்பி வந்திருக்கிறேன். நீங்க என்னை வேறயா நினைக்கிறீங்க!' என்றாள் ஆழ்ந்த வருத்தத்துடன்.

'சரிம்மா! உனக்கு என்ன பிரியமோ செய்..' என்றாள் செண்பகம்.

அவள் உற்சாகமாக எழுந்தாள் 'அத்தை. லாக்கர்ல வைக்கப்போறது உங்க கழுத்திலே கிடக்கப் போகுது!' என்றாள்.

அவள் அன்பழகனைப் பார்த்தாள். அவன் மௌனமாய் அமர்ந்திருந்தான். மறுக்கவில்லை. இதையே சாதகமாக எடுத்துக் கொண்டு இரண்டு கைக்கும் வளையல்கள் கொடுத்தாள். பிறகு பெட்டியை அவன் மடியில் வைத்து, 'லாக்கர்ல வச்சர்லாம்.. என்ன?' என்றாள்.

அவன் மௌனமாகத் தலையாட்டினான். அத்தை அதற்குள். 'சாமி கிட்ட வச்சக் குடும்மா,' என்றாள்.

அறைக்குப் போனார்கள். 'ஒரு ஸ்வீட்டுக்கு வருத்தப் பட்டீங்களே.. இப்ப நிறைய வந்திருச்சு,' என்று சிரித்தாள்.

அவன் தன் காலை நீட்டி சோஃபாவில் படுத்துக் கொண்டான். விட்டம் பார்த்தபடி.... 'ஆனா அது நான் வாங்கிட்டு வந்ததில்லே!' என்றான்.



'ஆமாம்' என்று ஒத்துக்கொண்டாள்.

'ஜனனி..!' என்றான்.

'எனக்கு என்னவோ, குடும்பத்தில் அதிகாரம்.. கைமாறிப் போய்க்கிட்டிருக்கு போல ஒரு ஃபீலிங்!' என்றான்.

அவள் பெட்டியை வைத்துவிட்டு வந்தவள் சட்டென்று நின்றாள்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க?' என்றாள், இறுக்கமான குரலில்.

'ஒன்றுமில்லை,' என்று அவன் பேச்சை மாற்ற முயன்றான்.

'பிரபு, எழுந்திருச்சு என் முகம் பார்த்துப் பேசுங்க!' என்றாள் கட்டளையிடுவது போல். அவன் திடுக்கிட்டுப்போய் எழுந்து அமர்ந்தான்.

ஹேய்! ரொம்ப சீரியஸாய் எடுக்காதே. நான் சும்மா சொன்னேன்!' என்றான்.

'என்ன சொன்னீங்க..?'

'அவங்கவங்களுக்குப் பிடிச்சதைக் கொடுத்து அவங்களை வசப்படுத்தறியே, அதைச் சொன்னேன்,' என்றான்.

அவள் சட்டென்று அவன் முன்னால் வந்து மண்டியிட்டு அமர்ந்தாள்.

பிரபு, 'எதைக் கொடுத்தும் அன்பை வாங்க முடியாது. உங்க வீட்ல எல்லாரும் என் மேல அன்பும் பாசமுமாய் இருக்கீங்க. அதுக்குக் கைம்மாறா எங்கிட்டே இருக்கிறதுல கொஞ்சம் கொடுத்தேன், பிரபு' என்றாள்.

அவன் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான். 'உங்களுக்கு எந்தத் தாழ்வு மனப்பான்மையும் வேண்டாம். பாசம்தான்.

நமக்குள்ளே ஈகோ கூடாது. பிரபு! எனக்கு உங்ககிட்டே எந்த ஈகோவும் கிடையாது.' என்றாள்.

'ஜனனி!' என்றான் அவன் - குரல் எழும்பாமல். 'பாட்டிகிட்டே என்னால மறுக்க முடியல..!' என்றாள். பிறகு, அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

'பிரபு. இந்தக் குடும்பத்துக்கு நீங்கதான் தலைவர். அதுல எந்த சந்தேகமும் இல்லை. உங்களுக்கு எங்கிட்டே என்னென்ன அதிகாரம் இருக்கென்றும் எனக்குத் தெரியும். ஆனா ஆனா' என்று முகம் சிவக்க நிறுத்தினாள்.

'சொல்லு.' என்றான் உணர்ச்சி நிறைந்த குரலில்

'சூழ்நிலைகள் சரியில்லைங்கறது உறுத்திட்டே இருக்கு. உங்ககிட்டே எந்த உறுத்தலும் இல்லாமல் என்னைக் குடுக்கணுங்கறதுதான்..' என்று அவள் வெட்கப்படவும்.

அவன் உலகம் மறந்து இழுத்து அணைத்துக் கொண்டான்.

'நோ ப்ராப்ளம் ஜனனி. வெட் திங்ஸ் டேக் சம் டைம். நோ பிராப்ளம். ஐ கேன் மேனேஜ். எங்க உனக்கு என்னைப் பிடிக்கலையோன்னு.'

அவள் தன் கையால் அவன் வாயைப் பொத்தினாள்.

'உங்களை யாருக்காவது பிடிக்காமல் போகுமா? ஹேண்ட்சம். ஹார்ட் வொர்க்கிங்...' என்று அவள் அடுக்க, அவன் லேசாகச் சிரித்தான். அவள் தலையைக் கோதியபடி நெற்றியில் ஒரேயொரு முத்தம் தந்தான். அவள் வெட்கத்தால் விலகப் பார்த்தாள். அவன் விடவில்லை. 'இந்த குடும்பத்துக்கு நான் தலைவனா இருக்கலாம். ஆனா எனக்குத் தலைவி நீதான். உன் கட்டளைதான். இனிமேல்.' என்று மயங்கினான்.



அவள் திகைத்தாள். 'அப்படீன்னா நாம செய்ய வேண்டியது நிறைய இருக்கு.' என்றாள், இனிமையான குரலில்.

'செய்வோம்.. செய்வோம்.. அதுக்கு முன்னாடி கொஞ்சம் கொஞ்சமாவது கவனிக்கணும்...' என்றான், அவளும் வெட்கத்துடன் அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

அவன் சட்டென்று விலகினான். 'சரி ஜனனி. டேக் ரெஸ்ட். நான் கொஞ்சம் நடந்துட்டு வர்றேன்.' என்று வெளியே போய் விட்டான். அரைமணி நேர வேகமான நடையில் மனம் சமனப்பட்டுத் திரும்ப வந்தபோது, அவள் உறங்கியிருந்தாள். அருகில் பாபு அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

'இந்தப் பயல் வேற போட்டிக்கு வந்தர்றான்!' என்று தனக்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டு சோபாவில் படுத்தான்.

## 7

நாகமாணிக்கமும் கோமதியம்மாவும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஜெகதா பாட்டியின் தட்டில் சட்டினி ஊற்றிக் கொண்டே,

'ஏங்க பாட்டி, ஜனனி நல்லாயிருக்காளா?' என்றாள்.

கோமதிப் பாட்டி சற்றே கோபமாக ஜெகதாவைப் பார்த்தார். வேண்டுமென்றே இந்தப் பேச்சை இப்போது ஆரம்பிக்கிறாள் என்று புரிந்தது.

'ம்... நல்லாயிருக்கா..' என்றார்.

'ஏம்மா, போயிருந்தியா?' என்றார் நாகமாணிக்கம், சற்றே இறுகிய குரலில்.

'ஆமாம்ப்பா... கூடவே இருந்தவளாச்சே... ரொம்ப நெனப்பாயிடுச்சு..' என்றார்.

நாகமாணிக்கம் அம்மாவை ஆழமாகப் பார்த்தார். ஜெகதா இடையில் புகுந்து– 'ஆமா, ஜனனிக்கும், உங்களுக்கும் தானே பிரச்சினை. அதற்காகப் பாட்டி போகாம இருக்க முடியுமா?' என்றாள்.

பாட்டிக்குச் சற்றே கோபம் கிளம்பியது. ஜெகதாவை வெறித்துப் பார்த்தார்.

இவள் சமாதானப்படுத்துவது போலச் சண்டை கிளப்பி விடுகிறாள் என்பது புரிந்தது. சட்டென்று தனது அஸ்திரத்தை வீசி எறிந்தார். 'என்னப்பா செய்யறது.. உன்னோட வயசுக்கு நீ வீம்பு பிடிக்கிறே. என்ன இருந்தாலும் பெத்தவ இருந்தா. இப்படி விட்டுட்டு இருப்பாளான்ற எண்ணம் அந்தப் பொண்ணுக்கு வந்திடக் கூடாதில்லை..' என்றார்.

சட்டென்று ஜெகதா அடங்கி விட்டாள். நாகமாணிக்கம் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. அமைதியாகச் சாப்பிட்டார். அதைச் சாதகப்படுத்திக் கொண்டு பாட்டி மேலும் தொடர்ந்தார்.

'கல்யாணம் நின்னு போச்சுங்கற பேரை விட வேற யாரோ ஒருத்தரோடவாவது நடந்ததேங்கறது வேற யில்லயா? என்ன கொஞ்ச நாள் பேச்சு கிளம்பும். அப்புறம் சரியாய்ப் போயிடும்..' என்றார்.

'அதுக்காக ஒன்னுமே யில்லாதவனையா செலக்ட் பண்றது..?' என்றார் நாகமாணிக்கம்.

ஜெகதா மறுபடியும் இடையில் புகுந்து. 'அவன் ரொம்ப ராங்கிக்காரன் வேற..!' என்றாள்.

'அது ராங்கி இல்லை. சுய மரியாதை. ஆனா கல்யாணத்துக்கு முதல் நாள் ஓடிப் போறவன் மாதிரி இல்லையே!' என்றார் கோமதிப் பாட்டி .



ஜெகதா பாட்டியை வெறித்துப் பார்த்தாள். மின்னல் போல் கண்களில் விஷம் தெறித்து மறைந்ததைப் பாட்டியும் புரிந்து கொண்டார்.

'பாரு, ஜெகதா.. உன்னோட இடம் எதுவோ. அங்கேயே நில்லு. போதும். ஒரு தடவை தகுதியில்லாத மாப்பிள்ளையைத் தேடி எங்களை அவமானப்படுத்தியது!' என்றார்.

உடனே ஜெகதா விசும்ப ஆரம்பித்தாள்.

'பாருங்க, பாட்டியை, நான். வேணும்னா செய்தேன். அந்த நீலகண்டன் இப்படிச் செய்வான்னு நான் கண்டனா... நான் நல்ல எண்ணத்தோட செய்தேன். அது இப்படிப் போயிடுச்சு..!' என்று சரசரவென்று கண்ணீர் விட்டாள்.

கோமதி தெரியாததைப் போல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஏன். அந்த அன்பழகன் ராங்கிக்காரங்கறது தெரிஞ்சிருக்கிற உனக்கு நீலகண்டன் நம்பத் தகுந்த ஆள் இல்லைன்னு புரியலயா?' என்று ஆணித்தரமாகக் கேட்டார்.

ஜெகதா அழுது கொண்டே நின்றாள்.

நாக மாணிக்கத்துக்குப் பாவமாகிப் போனது.

'சரி விடு ஜெகதா.. ஆனா எல்லாருமாய்ச் சேர்ந்து எல் பொண்ணு இன்னைக்குத் தெருவில நடந்து போற மாதி பண்ணிட்டீங்க...' என்றார்.

'எல்லாருமா இல்லப்பா. நீயும் உன் பொண்டாட்டியும்தா அதுக்குக் காரணம்.'

'அம்மா! ப்ளீஸ்....' என்றார், நாகமாணிக்கம்.

'ஆனா ஒன்னு நிச்சயம். என் பேத்தி மனசால ரொம் நல்லவ. அவளுக்கு யாரு கெடுதல் நெனச்சாலு அவங்களுக்கு ஆண்டவன் சரியான தண்டனை கொடுப்பா

அம்மா தனக்குத் தெரிந்து இவ்வளவு ஆத்திரமாகப் பேசியதை நாகமாணிக்கம் கேட்டதில்லை. திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரே கணம் கண்களில் நெருப்புப் பொறி பறக்க ஜெகதாவைப் பார்த்தார்.

ஜெகதா நடுங்கிப் போனாள். அதே போல், 'ஜெகதா! நான் எங்க போறேன், என்ன செய்யப் போகிறேங்கிறதெல்லாம் கேள்வி கேட்க நினைக்காதே..! உனக்கும்தான்டா சொல்றேன்!' என்று எழுந்து போய் விட்டார்.

'பார்த்தீங்களா, என்னமோ அந்த நீலகண்டனை நானே அனுப்பி விட்ட மாதிரி என்னைக் குத்தம் சொல்றாங்க!' என்று ஜெகதா அழுதாள்.

நாகமாணிக்கம், 'இத பாரு, ஜெகதா, அம்மா கேட்கறதுல நியாயம் இருக்கு நீ சொன்ன மாப்பிள்ளைன்னுதானே நாங்க ஒத்துக்கிட்டோம். நீ சரியா விசாரிச்சிருக்கணுமில்ல. என்ன குறை என் மகளுக்கு? அப்படி ஒரு அவமானம் வர்ற மாதிரி பார்த்திருக்கலாமா?' என்றார்.

இதை எதிர்பார்க்காத ஜெகதா மேலும் விம்மி விம்மி அழுது பார்த்தாள். நாகமாணிக்கம் ஒன்றும் பெரிதாக இளகி விடவில்லை. ஆனால்,

'அவனுந்தான் என்னை இப்படித் தூக்கி எறிஞ்சிட்டுப் போவான்னு நான் நெனக்கல!' என்று ஒரு பெருமூச்சுடன் எழுந்தார். ஒரு எட்டு நகர்ந்தவர் திரும்பி, 'பாரு, ஜெகதா, அம்மாவை நானே கேள்வி கேட்பதில்லை. நீயும் காரணமெல்லாம் கேட்டுகிட்டிருக்காதே. பெரியவங்க அவங்க இஷ்டப்படிதான் இருப்பாங்க!' என்று அம்மாவைச் சமாதானம் செய்யப் போனார்.

கோமதி இன்னும் வெகு கோபமாக இருந்தார். 'அம்மா, அவதான் விஷயம் தெரியாமல் பேசறான்னா என்னம்மா நீயும்?' என்றார்.



'அவளா விவரமறியாதவள்! ரொம்ப விவரமானவப்பா. அது மட்டுமில்ல. விவகாரமானவகூட . இப்படி ஒரு மோசமான மாப்பிள்ளையை இவ பார்க்கலன்னு யாரு கேட்டா?'

நாக மாணிக்கத்துக்குக் கோமதிப் பாட்டியின் கோபம் புரிந்தது. இந்தச் சமயத்தில் அடங்கிப் போவது உத்தமம் என்று முடிவு செய்தார்.

'சரி, அதை விடும்மா. உன் கொள்ளுப் பேத்தி தேடி யிருந்த மாப்பிள்ளை கூட சந்தோஷமாக இருக்காளா?' என்றார்.

'அவளுக் கென்னப்பா. காசு மட்டுந்தான் அங்கில்ல. மத்ததெல்லாம் நிறைய இருக்கு!'

நாகமாணிக்கம் மெல்லச் சிரித்தார். 'அம்மா, நீயும் உன் பேத்தி மாதிரியே பேசறே. சந்தோஷங்கிறதுக்குக் காசும் வேணும்மா. முதல்ல எல்லாம் நல்லா இருக்கும் அப்புறந்தானே தெரியும்!' என்றார்.

கோமதிப் பாட்டியும் சமநிலைக்கு இறங்கினார். 'நாகு, உனக்கு இந்தக் கல்யாணம் நின்னு போனதுக்குப் பின்னாடி இருக்கிற விஷயங்கள் தெரியாம இருக்கிறதே நல்லது. ஆனா ஒன்னு தெரிஞ்சுக்க. என்னோட ஜனனி ஒன்னும் தப்புப் பண்ணிடலே. இந்தக் கல்யாணத்துக்குப் பின்னாலே பெரியவங்களோட ஆலோசனை இருக்கு. உனக்கு நேர இருந்த அவமானத்தைத் தடுத்து நிறுத்தறதுக்காக அவ உன் கோபத்தை வாங்கிட்டா. தெரிஞ்சுக்க,' என்றார்.

'அம்மா, எதுக்கு எல்லாம் மறைச்சு மறைச்சுப் பேசறே. என்னதான் விஷயம்?'

கோமதிப் பாட்டி ஏனோ விரைப்பானாள். 'அதெல்லாம்.. கேட்காதே.. உனக்கு என்னைக்குப் பிடிக்கறதோ அன்னைக்கு உன் மகளைப் போய்ப்பாரு.. அதோடு விடு,' என்று சொல்லி விட்டார்.

நாக மாணிக்கத்துக்கு அதற்கு மேல் பாட்டியிடம் எதுவும் விஷயம் வாங்க முடியாது என்று தெரியும்.

அன்று காரில் போகும் போது பாலையாவிடம் –

'ஏன், பாலையா, பாட்டி... ஜெகதா... ஜனனி எல்லாம் என்னத்தையோ எங்கிட்ட மறைக்கிறா மாதிரி இருக்கு...' என்றார்.

அதற்குப் பாலையா, 'ஜனனியம்மா எதையும் செய்ய லைங்கய்யா. ஆனா பாட்டி சமீப காலமாகக் கொஞ்சம் அழுத்தமா மாறிட்டாங்க,' என்றார்.

சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது. பிறகு கேட்கலாமா... வேண்டாமா என்று யோசித்து விட்டு, 'ஏன் பாலையா, ஜனனியை நீ பார்த்தியா?' என்றார்.

'பார்த்தேங்கய்யா, நம்ம கம்பெனியில எப்படி எந்த பிரச்சினை வந்தாலும் சரியா கம்பீரமா சமாளிப்பாங்களோ, அதே கம்பீரத்தோடு, வீட்டுக்காரருக்கு டிஃபன் எடுத்துக்கிட்டு நடந்து போனாங்கன்னு சொன்னனே...!' என்றார்.

'ஆமா, பாலையா. அவ ரொம்ப வீம்புக்காரி, ஆனா அவன் அதற்கு மேல இருப்பான் போல இருக்கே...!' என்று சிரித்தார்.

அதில் தெரிந்தது கவலையா, மகிழ்ச்சியா என்று பாலையாவுக்குப் புரியவில்லை.

இரண்டு மாதங்கள் வேகமாக ஓடிவிட்டன.

- - - - -

ஜனனி அப்பாவைச் சென்று பார்க்கவேயில்லை. அவரும் போய்ப் பார்க்கவில்லை.

பாட்டி மட்டும் அவ்வப்போது போய்ப் பார்ப்பார்.



ஜனனி அலுவலகத்துக்கும் வரவில்லை.

அவரும் வரச் சொல்லவில்லை. ஜெகதா மட்டும் ஒன்றிரண்டு முறை போய் வந்தாள்.

ஜனனி வழக்கம் போல அன்பாக இருந்தாள். நீலகண்டனைப் பற்றிப் பேச்சையே இருவரும் எடுக்கவில்லை.

ஜெகதா, 'ஜனனி வீட்டுக்கு வர்றீங்களா?' என்று கணவரை அழைத்தாள்.

'பாரு, ஜெகதா, உனக்கிஷ்டம்னா போயிட்டு வா. எனக்கு எப்பப் போகணும்னு தெரியும். அப்ப போயிக்கறேன்,' என்றார்.

ஜெகதா ஒரு நாள் கூடை நிறையப் பழங்கள் கொண்டு வரவும், அதைப் பார்த்த அன்பழகன்,

'ஜெகதாக்கா, நீ வா! வேண்டாம்னு சொல்லலை ஆனா அந்த வீட்லேருந்து எதுவும் கொண்டு வராதே...!' என்று வெடுக்கென்று சொல்லிவிட்டான்.

'என்ன அன்பு, இப்படிக் கோபிச்சுக்கறாயே!' என்றாள் ஜெகதா.

'போதும் உன் நடிப்பு...' என்கிற மாதிரி அன்பழகன் பார்க்கவும் அடங்கி விட்டாள்.

பாட்டி அடிக்கடி வந்தார்.

இதற்கிடையில் ஜனனி ஒரு வேலை செய்தாள்.

அவர்கள் வீட்டிலே நிறைய இடம் இருந்தது. கிட்டத்தட்ட பதினைந்து செண்ட் இடம், கட்டிடம் இரண்டு செண்டுக்குத்தான் இருந்தது.

நிறையப் பூச் செடிகள் இருந்தன. ரோஜாத் தொட்டிகள் வாங்கினாள். ரோஜா பராமரிப்பில் அவளுக்கு நல்ல அனுபவம் இருந்தது.

தண்ணீர் வசதியும் இருந்ததால், கிட்டத்தட்ட ஐம்பது வகை ரோஜாக்களை வளர்த்தாள் அது மட்டுமல்லாமல், ஒரு பூ விற்கிற ஆளாய்ப் பிடித்து ஒரு விலை பேசி, குறைந்தது ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாயாவது லாபம் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்தாள்.

'அத்தை, இது உங்க கைச் செலவுக்கு. ஒவ்வொரு சின்னச் சின்னச் செலவுக்கும் அவங்களை எதிர்பார்க்க வேண்டாமில்ல!' என்றாள்.

'ஹேய்! ஜனனி, இது நியாயமில்லை. நான்தான் மாஞ்சு மாஞ்சு உரம் வாங்கிக்கொண்டு வந்து தரேன். எனக்கும் பங்கு தானும்!' என்று அன்பழகன் கலாட்டா செய்ய, 'பொறுங்க சார். அடுத்தது காய்கறித் தோட்டம் போடறோம். அதுல வேண்ணா பலன் கிடைச்சா, நல்லபடியா குழம்பு வைச்சுத் தர்றோம். வெட்டுவீங்களாம்!' என்று சிரித்தாள் ஜனனி. சொன்ன மாதிரியே சின்னதாக வீட்டுக் காய்கறித் தோட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்தாள்.

இது தவிர தங்கள் வீட்டுக்குப் பின்னாலும் பக்க வாட்டிலும் காலியான இடத்தில் பராமரிப்பு இல்லாமல் இருந்த பத்துத் தென்னை மரங்களிடமும் கவனம் செலுத்தினாள். கொப்பரைச் சில்லுகளைக் காய வைத்துத் தேங்காய் எண்ணெய் ஆட்டிக்கொண்டு வந்தபோது, தோட்டத்து ஆளை வரச் சொல்லி ஓலைக் குருத்துகளைச் சீவித் துடைப்பங்கள் கட்டச் செய்தபோதும், விழுகிற மட்டை ஓலைகளைத் தண்ணி யடுப்புக்குப் பயன்படுத்திய சாமர்த்தியமும் பார்த்து,

'யப்பா ஜனனி, அசத்தறே!' என்று அன்பழகன் வியந்தே போனான்.

இன்னொரு காரியமும் செய்தாள்.

ஒரு நாள் செண்பகம் புளியோதரை செய்திருந்தாள். வெகு சுவையாக இருந்தது. மற்றொரு நாள் வெஜிடபிள் பிரியாணி செய்தாள். அதுவும் சுவையாக இருந்தது.



ஜனனி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அவர்கள் வீடு வடகோவையிலிருந்து ஆர்.எஸ்.புரம் செல்லுகிற வழியில் ஒரு கார்னர் சைட்டில் இருந்தது.

அக்கம் பக்கத்தில் நிறைய அலுவலகங்கள் இருந்தன.

மாமனாரிடம் சொன்னாள் : 'மாமா, நான் சொல்றதைத் தப்பா நெனச்சுக்கலைன்னா, புளியோதரை பாக்கெட், சாம்பார் சாதம், தயிர்ச் சாதம் இதை யெல்லாம் பாக்கெட்டா செய்து கொடுத்தா எத்தனை பேர் வாங்குவாங்கன்னு ஒரு சர்வே எடுத்துட்டு வாங்களேன்,' என்றாள்.

அவரும் தயங்கவில்லை.

'இதுல என்னம்மா இருக்கு. உழைச்சுச் சாப்பிடறதுலே ஒண்ணும் தப்பே இல்லை!' என்று போய் விசாரித்து வந்தார்.

குறைஞ்சது நூறு பாக்கெட் போகும் போல இருக்கு என்றார். ஒரு ஆளைத் துணைக்கு அமர்த்திக் கொண்டு பகலில் மட்டும் ஆரம்பித்தார்கள்.

தினமும் சராசரியாக முன்னூறு பாக்கெட் போயின. அதே போலக் காலையில் உப்புமா, இட்லி, கிச்சடி என்று ஏதோ இரண்டு வகை மட்டும் செய்து விற்றார்கள்.

கணக்கு வழக்கெல்லாம் ஜனனிதான்.

அன்பழகன் இந்த வேலைகளிலெல்லாம் வீட்டுக்கு இடையூறு இல்லாமல் ஒரு ஷெட் போட்டும் கொடுத்தான். எந்த ஆடம்பரமும் இல்லாமல் செண்பகம் மெஸ் ஓட ஆரம்பித்தது.

அன்றொரு மாலை சீக்கிரமே வீட்டுக்கு வந்தான், அன்பழகன்.

ஜனனி முகம் வாடி அமர்ந்திருந்தாள். 'என்ன ஜனனி?' என்றான்.

'அப்பா நெனப்பா இருக்கு!' என்றாள்.

'உங்க வீட்டுக்குப் போகலாமா?' என்றான்.

'வேண்டாம்,' என்றாள்.

'என்னைத்தானே ஏதாவது சொல்லுவாரு. பரவாயில்லை, ஜனனி. நா வாங்கிக்கறேன். எப்படியும் நீ அவரைப் பாத்திரலாமில்லே,' என்றான்.

அவள் நெகிழ்ச்சியுடன் அவனைப் பார்த்தாள். 'வேண்டாம் பிரபு உங்களை இன்சல்ட் பண்ணினா எனக்குத் தாங்காது', என்றாள்.

அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று பெருகி வழிவதாய் உணர்ந்தான்.

அன்றைக்கு ஒரு நாள் தான் சற்றே உணர்ச்சி வசப்பட்டதாக உணர்ந்த கணத்தில் இருந்தே அவன் எச்சரிக்கையாக இருந்தான். அதிகம் நெருங்காமல் இருந்து கொண்டான். ஆனால், தன் குடும்ப மேம்பாட்டிற்காக அவள் ஒவ்வொன்றாய்த் திட்டங்கள் போடக் கண்டு அவன் உள்ளம் மலர்ந்து கொண்டே வந்தது.

'சரி ஜனனி, கோவிலுக்குப் போகலாமா?' என்றான்.

சரியென்று கிளம்பினார்கள். போகிற வழியில்...

'ஜனனி, திட்டங்கள் இதோட போதும். மெஸ் இதுக்கு மேலேயும் போச்சன்னா சமாளிக்க முடியாது. இப்ப ஏதோ கைக்கும் காசோட்டம் இருக்கு. பூவுல வேற பணம் வருது,' என்றான்.

'இல்லை பிரபு,' என்றாள். 'இன்னும் ஒரு விஷயம் பாக்கி இருக்கு,' என்றாள்.

'என்ன ஜனனி...?'

'இல்லே. உங்களைக் கொஞ்சம் சரி பண்ணணும்...' என்றாள்.



கைனடிக் ஹோண்டாவை அவன் ஓட்ட, அவள் பின்னால் அமர்ந்திருந்தாள். 'போச்சுடா.... இப்ப என்ன கோளாறாம்?' என்றான்.

'ஒரு என்ஜினியர் போய் சேல்ஸ் மேன் வேலை பார்க்கறிங்களே, இது நியாயமா?'

'அட கடவுளே! அங்க தொட்டு இங்க தொட்டு, கடைசிலே அடிமடியிலேயே கை வச்சுட்டாடா!' என்று அவன் மெல்லச் சிரித்து விட்டு, வண்டியை நிறுத்தினான்.

'ஆமா, பிரபு. நின்ன இடத்துலேயே நின்னா அதுக்குப் பேரு குட்டை, ஓடினாத்தான் ஆறு' என்றாள்.

'அட்றா சக்கை. தத்துவம் ரொம்ப நல்லாயிருக்கேம்மா!' என்று சிரித்தான். அவள் நின்று பின் அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

'பிரபு, நா சீரியஸா பேசறேன்,' என்றாள்.

அவன் சிரிப்பை நிறுத்தினான். 'ஜனனி, நீ சொல்ற மாதிரியே எனக்கும் கனவுகள் நிறைய இருக்கு. கேப்பிட்டல் வேணுமில்ல!' என்றான்.

அவள் சிந்தனையுடன் நின்றாள்.

'ஹேய், கற்பனையிலேயே கோட்டை கட்டறே. வா,' என்று இயல்பாய்க் கையைப் பிடித்துக்கொண்டு நடக்க, அவள் நின்றாள்.

'என்ன?' என்று பார்த்தான். 'அப்பா... அங்கே!' என்று காட்டினாள். காரில் இருந்து இறங்கி அப்பா கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார். ஜனனி அவரை நோக்கி ஆசையாய் ஓடினாள்.

## 8

கட்டிலில் இரண்டு முழங்கால்களையும் சேர்த்துக் கட்டிக் கொண்டு அமர்ந்து அழுது கொண்டிருக்கிற ஜனனியை வேதனையுடன் பார்த்துக் கொண்டு நின்றான், அன்பழகன்.

சற்று நேரம் தேம்பியழ விட்ட பின், அவள் அருகில் அமர்ந்தான். அன்று ஒரு நாள் பார்வைகள் மோதிக் கொண்ட பின், அன்பழகன் விலகியே இருந்தான். தொட்டுப் பேசுவதையும் கூட விட்டு விட்டான். மற்றவர்கள் முன்னிலையில் அருகில் அமர்வார்கள். ஒன்றாகப் போவார்கள். தனி அறையில் முடிந்தவரையில் நெருங்காமலே இருந்தனர்.

எந்த உணர்வும் பூரணமாக இருக்க வேண்டும் என்பதும், அவசரம் ஒன்றும் தேவையில்லை என்பதும் அவன் கருத்தாக இருந்தது. ஆனால், இன்று நெஞ்சம் வெடிக்க அழுகிற தன் மனைவியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை.

'ஜனனி, ஹேய்...!' என்று மெதுவாக அவள் தோள் தொட்டுத் திருப்பினான்.

'பார்த்தீங்களா, அப்பா எப்படி நடந்துகிட்டாரு. பார்த்தே ரெண்டு மாசமாச்சேன்னு எவ்வளவு ஆசையா ஓடினேன்!' என்று வருத்தப்படுகிற அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

இதமாக உணர்ந்தாள் ஜனனி. சாய்ந்து கொள்ளத் தோள் கிடைத்த உணர்வில் வெடித்து அழுதாள். 'அப்படி என்ன நான் தப்பு செஞ்சேன். பாட்டி சொன்னதைத்தானே செய்தேன்!' என்று மீண்டும் அழுதாள்.



'ஆமாமா,' என்று அவன் ஒத்துக் கொண்டான். அவள் அழுகையை நிறுத்திவிட்டு ஆவேசமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'இப்பவே அப்பாவுக்குப் போன் போடுங்க. பாட்டி சொன்னதைத்தான் செய்தேன்னு அவங்ககிட்டே சொல்லிடறேன்,' என்றாள்.

'சொல்லலாம்மா. ஆனா அதுக்கு அப்புறம் என்ன ஆகும்னு யோசிச்சுப் பாரு. உன் மேல இருக்கிற கோபம், பாட்டி மேல திரும்பும். இங்கயாவது நாம ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா இருக்கோம். பாட்டி எங்கே போவாங்க, வயசான காலத்தில?' என்றான்.

அவள் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள். 'ஆமா இல்ல!' என்றாள்.

அவன் அவளது இரு கண்களையும் துடைத்து விட்டான். முன் நெற்றி முடியை நீவி விட்டான். அவள் அதையெல்லாம் கவனிக்கிற மன நிலையில் இருக்கவில்லை.

'ஏன் பிரபு?' என்றாள்.

'ம்... சொல்லு...' என்றான்.

'பாட்டி, ஏன் இப்படிப் பண்றாங்க. அப்படியொன்றும் பாட்டி அப்பாவிடம் பயந்தவங்க இல்லை. இன் ஃபாக்ட் அப்பாதான் பாட்டிக்குச் சில நேரத்தில பயப்படுவாரு. அப்புறம் ஏன் இப்படி?' என்ற சிந்தனையோடு பேசினாள்.

அன்பழகன் ஒன்றும் பேசவில்லை. அவள் அவனையும் சற்றே கோபத்துடன் முறைத்தாள்.

'நீங்களுந்தான் எதுவும் விளக்கமாகச் சொல்ல மாட்டேங்கிறீங்க.'

அவன் மறுபடியும் ஒரு நிமிடம் மௌனம் காத்தான்.

அப்பாவிடம் பாட்டி விளக்கம் கேட்டா.

'ஜனனி, அப்படி அப்பாவிடம் பாட்டி விளக்கம் கேட்டா, 'ஜனனி அப்படி வசதியில்லாத இடத்திலே என் அப்படி அவசரமாக ஒரு வசதியில்லாத இடத்திலே என் பொண்ணைத் தள்ள வேண்டிய அவசியம் என்னன்னு கேட்பார்,' என்று மேலும் தொடர்வதற்குத் தயங்கினான். அப்போது ஜனனி சற்றும் எதிர்பாராமல் அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அன்பழகன் ஒரு கணம் திகைத்துப் போனான். கொஞ்சம் கிளர்ச்சியுற்றவனாக இறுக அணைத்துக் கொண்டான். அவன் மார்பில் முகம் படிந்தபடியே பேசினாள்.

'பிரபு, இப்ப ஐ ஹேவ் நோ ரிக்ரெட்ஸ். இந்தக் கல்யாணம் எப்படி நடந்திருந்தாலும் சரி, உங்களை எனக்குப் பிடித்திருக்கு!' என்றாள்.

அவன் லேசான கிறக்கப் பார்வையுடன், 'எனக்கும் இந்த அழகான நிலாவைப் பிடிச்சதான் இருக்கு!' என்றான்.

அவள் சட்டென்று சிரித்தாள்.

'அதெல்லாம் சரி. இந்த டைவர்ட் செய்யற வேலையெல்லாம் விட்டுட்டு கம் டு த பாயிண்ட்,' என்றாள்.

அவன் மறுபடியும் தயங்கினான். ஆனால் மீண்டும் பேசினான்.

'ஜனனி, என்னோட கணக்கு என்னன்னா, நம்மோட கல்யாணத்தைப் பற்றிப் பேச நேர்ந்தா, அடுத்ததா நடக்க இருந்த கல்யாணம் ஏன் நின்னு போச்சுன்றதைப் பற்றிய பேச்சு வரும்...!'

அவள் கண் கொட்டாமல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் தயக்கத்துடன் தொடர்ந்தான்.

'அது தெரிய வந்தா குடும்பத்தில் பெரிய குழப்பம் வரும். அவரோட நிம்மதியும் போயிடும்...' என்றான்.



'ஓ...' என்று திகைத்தாள். பிறகு, 'அதுக்கு... அதுக்கு நான் பலிகடா ஆகணுமா என்ன? கடைசியில என்மேல எவ்வளவு கோபம் பார்த்தீங்களா?' என்றாள்.

'ஆமா ஜனனி, கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. எல்லாம் சரியாயிடும்,' என்றான் அன்பழகன்.

'அதெப்போ... எனக்குப் புரியலே,' என்றாள்.

'ஜனனி, இப்ப உன் மேல என்ன கோபம்? தன்னிச்சையாய் முடிவு எடுத்தேங்கறது ஒரு கோபம். தகுதிக்குக் குறைவான இடத்துல கல்யாணம் செஞ்சியேன்னு ஒரு கோபம்,' என்றான்.

அவன் பிரச்சினையை அக்கு வேறு ஆணி வேறாக யோசித்துப் பிரித்துப் போட்டு அலசுவதை அவள் உள்ளூர வியந்தாள். அவன் தொடர்ந்தான்.

'இந்தக் கோபமும் கொஞ்ச நாள்ல ஆறிடும்...' என்றான்.

'இன்னிக்கு அப்பா நடந்துகிட்ட விதம் பார்த்தா ஒன்றும் ஆறிடறா மாதிரி தெரியலே...!' என்றாள்.

அன்று மாலை அப்பா காரில் இருந்து இறங்கி நடந்து போவதைப் பார்த்த ஜனனி ஆசையாக அப்பாவை நோக்கி ஓடினாள்.

'அப்பா! அப்பா...!' என்று கூப்பிட வேறு செய்தாள்.

அவர் திரும்பி அவளை நன்றாகப் பார்த்தார். ஆனால், பார்க்காதவரைப் போல வேகமாக நடந்து போய் விட்டார்.

ஜனனி ஆணியடித்தாற் போல் நின்ற இடத்திலே நின்றாள். சட்டென்று அன்பழகன் அருகில் வந்து அவளைத் தன் தோளோடு சேர்த்துக் கொண்டான்.

அவள் இரண்டு கண்களிலும் கண்ணீர் ததும்ப அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்ணைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'கண்ட்ரோல் யுவர்செல்ப்!' என்று ஆசுவாசப்படுத்தினான்.

அவர்களும் கோவிலுக்குள் போனார்கள். அவன் ஏதேதோ பேசி அவளைச் சிரிக்கச் செய்ய, கோனியம்மன் கோயிலில் முன்னதாய்ச் சாமி கும்பிட்டுவிட்டு வந்தார்கள்.

சற்று முன்னேதான் அப்பா நடந்து போய்க் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய அந்த நடத்தைக்குப் பிறகு அவளும் அவரைத் திரும்பிப் பார்க்கவில்லை. அன்பழகனுடன் கலகலப்பாகப் பேசுவதைப் போன்ற பாவனையுடன் இருந்தாள். ஆனால், உள்ளே பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

அத்தனை வருத்தமும் வீட்டுக்கு வந்தவுடன் அவர்களது அறையில் அழுகையாய் வெடித்தது. இரண்டு மணி நேரமாக அதையே பேசிப் பேசி விம்மினாள்.

'பிரபு! என் வீட்டு மகாராணி என் மகள்... அப்படிம்பாரு... எதுவும் நான் கேக்கறதுக்கு முன்னாலே எனக்குக் கிடைச்சிடும். தெரியுமா..! அப்படி என்னை வளர்த்த அப்பா...' என்று ஒரு கணம் அழுதாள்.

சற்று நேரம் அமைதியானாள். 'பணக்காரப் பொண்ணு. ஆனா பண்பில்லையேங்கற மாதிரி சொல்லை நீ எனக்கு வாங்கிக் கொடுத்தறக் கூடாது. நீ பண்பானவன்னு பேரெடுக்கணும்பாரு. அப்படி அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்த அப்பா...' என்று மறுபடியும் அழுதாள்.

'இல்ல, ஜனனி. உங்க அப்பா கோபம் கண்டிப்பா ஆறும். நாம ரெண்டு பேரும் திரும்பி வந்து வண்டியெடுக்கறதையும்,



புறப்படறதையும் காரில் உட்கார்ந்து பார்த்துக்கிட்டுத்தான் இருந்தார்,' என்றான்.

அவள் உச்சுக் கொட்டினாள்.

'சரி விடு. நாம சந்தோஷமா இருக்கிறோங்கறதையும் நம் தகுதியையும் அவருக்கு நிரூபிச்சிடுவோம்...' என்று அவன் சிரித்தான்.

'எப்படி?' என்றாள்.

'அகெய்ன், இரண்டு விதமாக நிரூபிக்கலாம். ஒண்ணு... நம்ம ஸ்டேட்டஸைக் கொஞ்சம் உயர்த்த முடிவெடுப்போம்...!' என்றான்.

ரெண்டாவது...?

'என் தகுதியை நிரூபிக்க வேண்டியதுதான். உன்னைப் போல ஜாடையிலோ அல்லது என்னைப்போல ஜாடையிலோ ஒரு வாரிசைப் பெற்று அவர் கையில குடுக்க வேண்டியதுதான். எத்தனையோ வீம்பான அப்பாக்கள் பேரன்மார் உதைக்கிற உதையில மாறி இருக்கறாங்க தெரியுமா?' என்றான்.

அவள் சட்டென்று விலகிப் போய் ஜன்னலைப் பார்த்தபடி நின்று கொள்வதைப் பார்த்தான். பேச்சை நிறுத்திவிட்டான். அருகில் போய் 'ஜனனி!' என்று அழைத்தான்.

அவள் திரும்பவில்லை.

'ஐம். சாரி. நீ வேதனையா இருந்தப்ப, நான் இப்படிப் பேசியிருக்கக் கூடாது!' என்றான்.

'பரவாயில்லை!' என்றாள் அவள், திரும்பாமலே.

மீண்டும் 'ஜனனி!' என்றான். 'கவலைப்படாதே ஜனனி உன் விருப்பமும் ஒப்புதலும் இல்லாமல்... எதுவும் நடக்காது.' என்றான்.

அவள் தலை குனிந்தபடியே தலையாட்டிக் கொண்டாள். மீண்டும் லேசாகத் தலை அசைத்துக் கொண்டான்.

'காலம் எல்லாத்தையும் மாற்றும் ஜனனி. நீ கொஞ்ச நாள் பொறுத்துட்டீன்னா அவர் மனசு ஆறி அதோட விஷயம் முடிஞ்சிடும்!' என்றான்.

'எனக்கொன்றும் அவரு காசு பணம் எதுவும் வேண்டாம். பிரியம் மட்டும் கெடச்சாப் போதும்..!' என்றாள்.

'கிடைக்கும் ஜனனி. கிடைக்கும். அதுவரை ஏதோ என் பிரியத்தை வச்சிட்டு சமாளிச்சிக்க.' என்றான்.

அவளும் சற்றுத் தேற்றிக் கொண்டாள். 'வேற வழி..?' என்று அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

மீண்டும் கலகலவென்று பேசிகொண்டார்கள். பேச்சுக்கு நடுவே அவன் குறுக்கிட்டுச் சிரித்தான்.

'என்ன சிரிப்பு?' என்றாள். ஜனனி.

'இல்லே. அடியேங்கறதுக்கு ஆள் துணையே இல்லேங்கறப்ப பிள்ளைக்கு என்ன பேரென்று யோசிச்சானாம் ஒருத்தன். அது மாதிரி இன்னும் ரெண்டடி தூரத்திலேயே நின்றுவிட்டு, குழந்தை என் ஜாடையா உன் ஜாடையான்னு யோசிச்சேனே... அதை நினைச்சிகிட்டேன்.' என்றான்.

அவள் முகம் சிவந்தது. அந்தச் சிவப்பில் அவள் முகத்தின் அழகு பன்மடங்காகப் பெருகுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் குனிந்து தன் கை விரல் நகங்களை நீவிக் கொண்டே

'எப்பப் பிறந்தாலும் என்ன? யோசிக்கறதுல ஒன்னும் தப்பில்லை.' என்றாள். அப்படியா... என்று அவன் கிறக்கமாய்ப் பார்க்கவும்.



'ப்ளீஸ் பிரபு..' என்று வெட்கப்பட்டாள்.

அவன் குறுஞ்சிரிப்புச் சிரித்தான். 'பரவாயில்லே. கட்டாயக் கல்யாணமாச்சே.. பிடிச்சுத்தான் சம்மதிச்சியோன்னு லேசா சந்தேகம் இருந்தது.' என்றான்.

'பரவாயில்லை. இவ்வளவு சீக்கிரம் கேட்டுத் தெளிவாக்கிக்கறீங்களே... பேரன் பேத்தி வந்ததுக்கப்புறம் கேட்காம!' என்று அவளும் கிண்டல் செய்து சிரித்தாள்.

அவன் அவளை விழுங்குவது போலப் பார்த்துக் கொண்டிருக்க. 'ஐய்யோ உங்க பார்வை சரியில்லை. சார். நான் சொன்ன கண்டிஷன் அப்படியேதான் இருக்கு..' என்று அவள் எழுந்தாள்.

'அது அநேகமாக நம்ம அறுபதாம் கல்யாணத்துல சாத்தியமோ என்னவோ!' என்று அவனும் சிரித்தான்.

'ஐயோ. போதுமே வழிசல். நான் தோசை வார்க்கிறேன். வந்து சாப்பிடுங்க.' என்று பேச்சை மாற்றி விட்டுப் போகிற அவளைச் சிந்தனையுடன் பார்த்தான்.

அன்றைக்கு அவள் உறங்கியதற்குப் பின் எழுந்து வந்து இரவு விளக்கின் வெளிச்சத்தில். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் சோபாவில் அமர்ந்திருந்தான்.

## 9

என்னதான் மனைவியைச் சமாதானப் படுத்தினாலும். அன்பழகனுக்கு உள்ளே கோபம் கனன்று கொண்டுதான் இருந்தது.

எந்த விதத் தவறும் செய்யாமல் தன் மனைவியை மாமனார் அவமானப்படுத்துவதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

மறுநாள் காலை தான் காண்ட்ராக்ட் எடுத்திருக்கிற கட்டிட வேலைக்கு உதவியாக இருந்த பையனை அனுப்பி விட்டு அவன் வீட்டிலேயே இருந்தான்.

காலையிலும் சற்று கேலி செய்து அவள் மனத்தை லேசாக்க முயன்றான். அறிவழகன் வழக்கம் போல் கலாட்டா செய்து கொண்டிருந்தான்.

'அண்ணா! நீ என்ன இன்னைக்கு உன்னோட பார்ட் டைம் வேலைக்குப் போகலையாக்கும்?' என்றான்.

'இல்லடா தம்பி.' என்று அவன் புன்னகைத்தான்.

'போச்சு! இன்னைக்குப் புளியோதரைப் பொட்டலம் கட்றதுக்கு உன்னைப் போட்டுடுவாங்க!' என்று கலவரமாகச் சொல்வது போல் நடித்தான்.

'போடா! உங்கண்ணியே செய்யறாளாம். நான் செய்யக் கூடாதா?' என்றான்.

'செய் அண்ணா... செய். என் அப்ப கடைக்கும் லீவா...' என்றான்.

ஆமாடா. நீயே போகும்போது லீவு சொல்லிட்டுப் போயிடு.' என்றான்.

'புளியோதரைப் பொட்டலம் கட்டறதுக்குக் கூலி குடுங்கன்னு காசு கேட்டு வாங்கித்தானடா ஷூ வாங்கியிருக்கே!' என்று அம்மா உள்ளேயிருந்து குரல் கொடுக்கவும்.

'ஐய்யோ அண்ணா... உண்மையெல்லாம் வெளிய வருது நான் கிளம்பறேன்!' என்று சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நகர்ந்தான். 'போகிற வழியிலே சின்னப் பயலையும் விட்டுடுறா.' என்று சொன்னார் அப்பா.

'சின்னப் பயல்' சோபாவில் அண்ணியின் தோளில் சாய்ந்து கொண்டு. 'அண்ணி, எனக்கு வயித்தை வலிக்குது!'



என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டு நின்றான். 'டாக்டர்கிட்டே போய் சின்னதா ஒரு ஊசி போட்டுக்லாமா? போலாமா?' என்று ஜனனி கேட்கவும்.

'ஐயோ. நான் ஸ்கூலுக்கே போறேன். நீ வர்றியா. சாயங்காலம் கூப்பிட்டு வர?' என்றான்.

'முடிஞ்சா வரேன்.' என்று பையனை நகர்த்தினாள்.

பாபுவைப் பார்க்கும் போதும். அவனுக்கு வேண்டியதைச் செய்யும் போதும். அவள் முகத்தில் தோன்றுகிற கனிவுப் பார்வையைப் பார்த்து ரசித்துக் கொள்வான் அன்பழகன்.

வந்த புதிதிலிருந்து 'அறிவழகனுக்குப் பிறகு பாபுவா? இத்தனை நாள் கழித்துக் குழந்தையா?' என்ற கேள்வி அவளுக்குள் இருந்தது.

ஒரு நாள் செண்பகம்மாள் உண்மையைச் சொன்னாள். அவளுடைய தங்கையின் குழந்தையாம். தங்கை பிரசவத்தின் போது சரியான கவனிப்பில்லாமல் இறந்து போக. அவள் கணவன் வேறு கல்யாணம் செய்து கொண்டானாம். அன்பழகன் தான் ஊருக்குப் போயிருக்கிற போது. அந்த ஆறு மாதக் குழந்தை கவனிப்பில்லாமல் இருப்பதைப் பார்த்து எடுத்துக் கொண்டு வந்தானாம்.

அம்மா, அப்பாவை பற்றியே சொல்ல வேண்டாம் என்று சொல்லி விட்டானாம். பாதி நேரம் பாபு அவனோடுதான் இருப்பானாம். இப்ப அப்படியே கட்சி மாறி உன்கிட்டே ஒட்டிகிட்டான் என்று சிரித்தாள்.

அவளுக்கும் அந்தக் குழந்தையின் அருகாமை தேவையிருந்தது. அவன் பேசுகிற மழலையைக் கேட்டுக் கொண்டு தோட்டத்துப் பக்கம் ரோஜாப் பூக்களுக்கு நடுவில் காலம் கழிப்பதென்றால் அவளுக்கு மிகவும் விருப்பம்.

அறிவழகனுக்கும் ட்யூசன் போல மாலை நேரங்களில் சற்று நேரம் பாடம் சொல்லித் தருவாள்.

பொழுது அவனுக்குச் சரியாகவே இருந்தது. அப்படி இருப்பதுதான் அவனுக்கும் பிடித்திருந்தது. தன் மனைவி ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தின் செல்ல மகளாக வளர்ந்த போதும் சோம்பேறியாக வளர்க்கப்பட வில்லை யென்பது அன்பழகனுக்குப் பெரிய ஆறுதலாய் இருந்தது.

திடீரென்று தலைகீழாக மாறிப் போன தனது வாழ்க்கை நடைமுறையைப் பொறுத்துக் கொண்டு, அதிலும் மகிழ்ச்சி காண்கிற அவளது உயர்வான மனம்தான் தன்னை அவள்பால் ஈர்க்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

பதினோரு மணி வரை சிந்தனையிலேயே இருந்தான்.

ஜனனியின் கிண்டலுக்கும் கேலிக்கும் அவளுக்கு அதே போலப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாலும், உள்ளம் மட்டும் யோசனையிலேயே இருந்தது. பதினோரு மணி வாக்கில் முடிவெடுத்தான். நன்றாக ட்ரிம்மாக உடையணிந்து கொண்டு கைனடிக் ஹோண்டாவை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

'ஜனனி, அவசர வேலையிருக்கு.. வந்தர்றேன்..' என்று போனான்.

'ஜனனி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' என்று அந்தப் பெரிய பில்டிங்குக்குள் அவன் நுழைந்தவுடன், 'குட்மார்னிங் சார்..' என்று ரிசப்ஷனிஸ்ட் அரக்கப் பரக்க எழுந்து நிற்பதைப் பார்த்தவுடன், சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை.

'ஓ.. இந்தக் கம்பெனியின் முதலாளியின் மருமகன் அல்லவா, நான்!' என்று சிரித்துக் கொண்டான்.

'அம்மா, அன்பழகன் வந்திருக்கார்னு கொஞ்சம் ஐயாகிட்டே சொல்றீங்களா?' என்றான்.



தோரணையாய் ஆபிஸ் ஹாலில் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

அடுத்த ஒரு நிமிடத்தில் அழைப்பு வந்தது. போனான். பணிவாக வணக்கம் சொன்னான்.

'உட்காருங்க..!' என்று கைகாட்டினார். உட்கார்ந்தான். சுற்றிலும் பார்த்தான். கண்ணாடி அறை என்றாலும் ஸ்க்ரீன் இருந்தது. இருவரும் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார்கள். அவர் முதலில் ஆரம்பிக்கட்டும். அவர் பேசுகிற தோரணைக் கேற்பத் தான் பேசலாம் என்று அன்பழகன் நினைத்தான்.

அவன்தானே வந்திருக்கிறான். அவனே ஆரம்பிக்கட்டும் என்று அவர் நினைத்தார். என்னவோ தைரியமாகக் கிளம்பி வந்து விட்டான். ஆனால் ஆரம்பிக்கிற மனநிலைக்கு அவன் தயாராகவில்லை என்பதைப் புரிந்து கொண்டு அவரே ஆரம்பித்தார்.

'என்ன விஷயம்?' என்றார்.

அவன் ஒரு விதமாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு விட்டான். நேராக அவரைப் பார்த்தான்.

'நேற்று... நீங்க கோவிலில் அப்படி நடந்துகிட்டிருக்க வேண்டாம்..' என்றான். அவர் முகம் சிவந்து விட்டது. உள்ளூர அவரும் சற்று வேதனையோடுதான் இருந்தார்.

'நேற்றிலிருந்து ஜனனி படற வேதனையை என்னால கண் கொண்டு பார்க்க முடியல.. அப்படி அவ என்ன தப்பு செஞ்சா..?' என்றான் காட்டமாக.

'உங்களுக்கும் ஒரு குழந்தை பிறந்து, அதை உயிரா வளர்த்து, அவள் நாளைக்கு உதறிட்டுப் போகும்போது... அந்த வேதனை உங்களுக்குப் புரியும்..' என்றார், அவரும் காட்டமாக.

அவன் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்.

'ஜனனி உங்களை உதறி ஒதுக்கலை. நீங்கதான் அவளை வரக்கூடாதுன்னு சொல்லிட்டீங்க...!' என்றான் மீண்டும் கோபமாக.

'எனக்கு ஏன் கோபம்னு யோசிங்க. கல்யாணம் நின்னு போச்சு. ஏதோ தப்பாப் போச்சு. ஆனா மறுபடியும் நல்லவிதமா நடத்திக் குடுப்பேங்கற நம்பிக்கை அவளுக்கு இல்லாமப் போச்சே!' என்றார், வெகு வருத்தமாக.

அன்பழகன் அவரை நேராகப் பார்க்கவில்லை.

'சரி... என்னைப் பிடிக்கலைன்னா, உங்க கோபத்தை என்கிட்டே காட்டுங்க... உங்களுக்கு ஒன்னு தெரியுமா? ஜனனியும் ஒன்னும் உங்க மேலே நம்பிக்கையில்லாம என்னை மாப்பிள்ளையாய்த் தேர்ந்தெடுக்கலை. நானும் ஒன்னும் சான்ஸ் கிடைச்சதேன்னு உங்க குடும்பத்திலே நுழைஞ்சிடலை!' என்றான்.

அவர் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தொடர்ந்தான்.

'நம் ரெண்டு குடும்பத்துக்கும் வேண்டிய பெரியவங்க ஒருத்தர்... கட்டளைக்கு நாங்க ரெண்டு பேரும் கீழ்ப்படிந்தோம்... அவ்வளவுதான்,' என்றான்.

அவர் திகைத்துப் போனார். அன்றைக்கு அம்மாவும் இதையே சொன்னது நினைவுக்கு வந்தது.

'அது யாரு... அந்தப் பெரியவங்க. சொல்லுங்க,' என்றார்.

'அதைச் சொல்றதுக்கு எனக்கு அனுமதியில்லை. வற்புறுத்தாதீங்க,' என்றான், அழுத்தமாக.

அவர் சட்டென்று மௌனமாகி விட்டார்.

நிலைமையின் ஆதிக்கம் தன் கைக்கு மாறி விட்டதை உணர்ந்து அவன் தொடர்ந்தான்.



'இப்பவும் நான் நல்லவன்னு காட்டறதுக்காக உங்ககிட்டே பேச வரலை. ஜனனி உங்க மேலே வச்சிருக்கிற அன்பைக் குறைவா எடை போடாதீங்க. வீட்ல சுத்திச் சுத்தி உங்க பேச்சுதான் அப்பாவுக்கு அது... பிடிக்கும் இது பிடிக்கும்... அப்பா அப்படிச் சொல்வாங்க, இப்படிச் சொல்வாங்கன்னு, எப்பவும் உங்க பேச்சுத்தான்...' என்றான்.

அவர் முகத்தில் பாசத்தின் கனிவு ஏறியது.

'கேவலம்... பகையாளியா இருந்தாக் கூட வீட்டுக்கு வந்தா வாங்கன்னு சொல்லுவோம். அவ்வளவு பிரியமா ஓடி வந்தவளை நின்னு ஒரு வார்த்தை ஒரே வார்த்தை 'நல்லா இருக்கியாம்மா?'ன்னு கேட்டா எந்தப் பக்கம் குறைஞ்சு போயிடும்?' என்றான், கோபமாக.

தன் மனைவிக்காக வாதாடுகிற அவன் கோப முகத்தை அவர் ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

'அப்பாவுக்குப் பிடிக்காத கல்யாணம். அப்பா ஏத்துக்கற வரைக்கும் நமக்குள்ளே... எதுவும் வேண்டாம்னா, சரின்னு இது வரைக்கும்... அவள் சந்தோஷம்தான் என் சந்தோஷம்னு நான் அவளைப் பூப் போலப் பார்த்துகிட்டிருக்கேன்.'

சரசரவென்று பேசிக் கொண்டு போன அன்பழகன் தான் சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டதை உணர்ந்தான். முகம் சிவக்க நிறுத்தினான். பிறகு, 'அதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. ஆனா அதுக்காக எங்களுக்குள்ளே அன்பில்லேன்னு நெனச்சுக்காதீங்க. நா அவளை உயிருக்குயிரா நேசிக்கிறேன், தெரிஞ்சுக்கங்க,' என்று எழுந்தான்.

அவர் முகபாவம் முற்றிலும் மாறி இருந்தது.

'ப்ளீஸ். உட்காருங்க...' என்றார். பஸ்ஸரை அழுத்தினார். காபி வந்தது.

'முதல் முதலா... வந்திருக்கீங்க. சாப்பிடுங்க.' என்றார்.

அவன் மறுக்கவில்லை. மௌனமாகக் குடித்தான். பிறகு, 'மாமா, அவ உங்க வீட்டு மகாராணியாய் வளர்ந்தாள், ஆனா எங்களோட அந்தச் சின்ன வீட்டில் அத்தனை பேரோடவும் அட்ஜஸ்ட் பண்ணிகிட்டு இருக்கா. அற்புதமான பெண்... மாமா... இனி நான் உங்ககிட்டே எதுவும் கேக்கலே. அவளை வருத்தப்படுத்தாதீங்க. அதை மட்டும் என்னால தாங்க முடியாது...' என்ற போது அவன் கண்கள் லேசாகக் கலங்கின.

நாகமாணிக்கமே உள்ளூர நெகிழ்ந்து போனார். ஒரு பெருமூச்சு விட்டு, 'ஆமா... அந்தக் குழந்தையை நான் அப்படி நடத்தியிருக்கக் கூடாது. ஐ'ம்...சாரி!' என்றார்.

அவன் எழுந்தான். எச்சரிப்பது போல் ஆட்காட்டி விரல் நீட்டினான். 'இப்ப நான் இதை ஒரு ரிக்வெஸ்ட்டா வைக்கறேன். ஆனா இனியொரு முறை நடந்துதுன்னா, நான் தயங்காம உங்களை இன்சல்ட் செய்வேன்!' என்றான்.

அவர் கடகடவென்று சிரித்தார். 'மிஸ்டர். அன்பழகன், இப்ப நீங்க எது சொன்னாலும் கோபம் வராது. ஒரு விஷயத்துல நான் ரொம்பக் கர்வத்தோட... நிக்கறேன். எனக்கு விருப்ப மில்லேங்கறதுக்காகன்னு சொன்னீங்களே, அந்த பாயிண்ட்ல, என்ன இருந்தாலும்... என் மகளுக்கு நான்தான். முக்கியம்னு நிரூபிச்சுட்டா இல்லே...' என்றார்.

அந்த நேரத்தில் அன்பழகன் முகத்தில் ஒரு விசித்திரமான புன்னகை படர்ந்தது. அவரை ஆழமாகப் பார்த்தான்.

'ஆனா... மாமா, உங்க மகள் என்னை நேசிக்கிறா... அது எனக்குத் தெரியும். இன்னொண்ணு சொல்லட்டுமா? உண்மையான அன்பு எப்பவும் தானே ஜெயிக்கணும்னு வெறி பிடிச்சு அலையாது. தோற்கும். தன்னை... விட்டுக் கொடுக்கும்.



அதுல லேசா வலி இருக்கும். ஆனா... ஒரு சுகமும் இருக்கும். அது உங்களுக்குப் புரியாது... மிஸ்டர் மாமனார்!' என்று அடிக் குரலில் சிரித்தான்.

நகர்ந்து விட்டான்.

நாகமாணிக்கம் யாரோ கன்னத்தில் அறைந்தாற் போல் திகைத்துப் போனார். தன் மனைவிக்காக வந்து வாதாடி விட்டுப் போகிற அவன் சொன்ன உண்மை அவருக்கு வெகுவாகப் புரிந்தது.

சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். அடுத்த ஒரு மணி நேரத்துக்குச் சிலைபோல் சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவரை யாரும் நெருங்கவே அஞ்சினர்.

## 10

அன்று பிற்பகல்.

இரண்டு மணி யிருக்கும்.

'அம்மா... அம்மா..!' என்று சின்னப் பையனைப் போல், இளைஞனாக யிருக்கும்போது ஏதாவது விஷயம் பகிர்ந்து கொள்ள வேண்டுமானால் ஓடி வருவாரே. அதைப் போல் தன் மகன் தேடி வருவதை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'அம்மா...!' என்று ஒரு வித உற்சாகத்துடன் எதிர் சோபாவில் அமர்ந்து கொண்டார் நாகமாணிக்கம். ராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த அம்மா அதைப் பார்த்து விட்டுப் பத்திரிகையை மூடினார்.

'என்னப்பா..?' என்றார்.

'அம்மா. இன்னைக்கு அந்தப் பையன் ஆபிஸுக்கு வந்திருந்தான்..' என்றார்.

'எந்தப் பையன்..?' என்றார், ஆச்சரியமாக.

'மிஸ்டர் அன்பழகன்..!' என்று சிரித்தார்.

'எதுக்கு..?' என்றார் சற்றே கவலையுடன்.

'எதுக்கு..? மிஸ்டர் மாமனார்னு கூப்பிட்டு என்னை லெஃப்ட் அன்ட் ரைட் வாங்கறதுக்குத்தான்.'

'நாகு..!' என்று அம்மா உண்மையாகவே கவலையுடன் பார்த்தார்.

'ரொம்பக் கவலைப் படாதேம்மா.... நான் நல்ல விதமாகத்தான் எடுத்துக்கிட்டேன்.' என்று, முதல் நாள் தான் கோவிலில் நடந்து கொண்டதை, அன்பழகன் வந்ததற்குப் பிறகு நடந்த பேச்சு வார்த்தையைச் சுருக்கமாகச் சொன்னார்.

ஜனனி பட்ட வேதனையைச் சொல்லும் போது அம்மாவின் முகத்தில் வேதனையை, அன்பழகன் தன்னிடம் பேசியதைச் சொன்னபோது முடிவில் சிரிப்புடன் கூடிய முகமாக மாறுவதைப் பார்த்துக் கொண்டே, விவரமாகச் சொன்னார் நாகமாணிக்கம்.

'பரவாயில்லை.. உன்னைக் கேள்வி கேட்கவும் ஒரு ஆள் வந்தாச்சு..' என்று சிரித்தார்.

'கேள்வி கேட்கறதா...? ஆட்காட்டி விரல் நீட்டி மிரட்டறான்ம்மா..' என்று சிரித்தார். 'ஆனா அத்தனையும் 'என் மகளுக்காகத்தானே! அவள் சந்தோஷத்துக்காகத்தானே!' என்று, மெதுவாகச் சொல்லிக் கொண்டார்.

அம்மா சற்று நேரம் விஷயங்களை மனதில் போட்டு அலசிக் கொள்கிற பாவனையுடன் அமர்ந்து கொண்டிருந்தார்.



பிறகு சொன்னார். 'நாகு, ஒன்னு சொன்னா, கோபிச்சுக்க மாட்டியே..' என்றார்.

'சொல்லும்மா..' என்றார்.

'நீ இத்தனை வருஷம் உன் மகள் மேல் வச்ச அன்பை விட அவனோட அன்புதான் உசத்தி' என்றார்.

'அம்மா..!' என்று அவர் பார்க்க, 'ஆமாம்ப்பா.. இத்தனை நாள் நான் எம் மகளை மகாராணியா வளர்த்தேங்கற கர்வம் உனக்கு உள்ளுர. அந்த வசதிகளுக்காக அவள் உன்னைத் தேடி வருவாங்கிற நினைப்புக் கூட உனக்கு இருந்தது. இப்பவும் கூட அன்பழகன்.. அத்தனை பேசியும், உனக்குக் கோபம் வரலை. ஏன்.. தெரியுமா? உன்னோட அனுமதிக் கப்புறம்தான் நமக்குள் எதுவும்னு புருஷன்கிட்டேயே சொல்லிட்டாளே உன் மகள்னு.. ஒரு கர்வம் இல்லை..?' என்று புன்னகைத்தார்.

நாக மாணிக்கம் அதிர்ச்சியுடன் அம்மாவைப் பார்த்தார்.. அம்மா தன் உணர்வுகளைப் புட்டுப் புட்டு வைப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனார். தாய் அறியாத சூலா என்பது போல் பார்த்து அவர் சிரித்தார்.

'அதுக்கு இன்னொரு கோணமும் இருக்கப்பா. அவனோடு வாழ்ற வாழ்க்கையில எந்த விதமான உறுத்தலும் இல்லாம முழுமையா இருக்கணும்னு கூட உன் மக நினைச்சிருக்கலாம் இல்லை..?'

'ம்..!' என்று உள் வாங்கிக் கொண்டார். அம்மா கனவில் பேசுவது போல் தொடர்ந்தார். 'அவன் சொன்னான் பார்த்தியா.. அதுதான், உண்மை. உண்மையான அன்பு தன்னை விட்டுக் கொடுக்கும். தோற்கும். வலியையும் சுகமா எடுத்துக்கும். ஆனா நாணலைப் போல்.. வளைஞ்சு கொடுத்து.. நிமிர்ந்து நிற்கும்..' என்றார்.

'...'

'அந்தச் சின்னப் பையனுக்கு இந்த வயசில தெரிஞ்சது உனக்கு இன்னும் புரியலை பார்த்தியா? ஏன்னா அவன் வறுமையில அடிபட்டவன். குடும்ப பாரத்தைச் சுமக்கறவன். வாழ்க்கை அனுபவத்தில் உன்னை விடவும் கெட்டிக்காரன்...' என்றார். வாஞ்சையாய்ப் புன்னகைத்தார்.

நாகமாணிக்கம் அடிபட்டவரைப் போல் அம்மாவைப் பார்த்தார்.

இனி... நான் என்ன செய்யணும்மா...? என்றார்.

'உனக்கும் அவனுக்கும் நடக்கிற இந்தப் பந்தயத்துல அவன்தான் ஜெயிப்பான். ஆனா நீ உன்னைக் கொஞ்சம் மாத்திக்கிட்டின்னா. அட்லீஸ்ட் சமமான இடத்திலேயாவது நிக்கலாம்...!'

'... ...!'

'உன் பணங்காசையெல்லாம் அவன் பெரிதாகவே மதிக்க மாட்டான். ஆனால் உன் மருமகள் அன்புக்குக் கட்டுப்பட்டவள். அதைக் குடு. அதுவும் ஒரே நாள்ல திருந்திட்டேன்னா நம்ப மாட்டாள். முதல்ல... அவனுக்கு மரியாதை கொடு... ஒன்னு மட்டும் ஞாபகம் வைச்சுக்க. உன் மகள் பெரிய கண்டத்திலேயிருந்து தப்பியிருக்கா. ஆண்டவன்... அவளை நல்ல கைகள்ல கொண்டு போய்ச் சேர்த்திருக்காரு... அந்த வீட்டில் போய் அவங்க பேச்சையும் சிரிப்பையும் நீ பாக்கணும். அந்தச் சின்ன ரூமில... இங்க கிடைக்காத எல்லாம் அவளுக்குக் கிடைச்சுக்கிட்டுதான் இருக்கு.'

'...!'

ஆப்டர்ரால் உடல் சம்பந்தமான உறவுதானே... அது எப்ப வேணாலும்... கிடைச்சுடுங்கிற மிதப்பிலேதான்... அவனும்



விட்டுப் பிடிக்கறான். தெரிஞ்சுக்க...! அன்பைக் கொடுத்து அன்பை வாங்கு!' என்றார்.

அதற்குப் பிறகு இருவரும் பத்து நிமிடங்களுக்கு மேல் ஒன்றும் பேசவில்லை. 'உனக்கும் உன் மகளுக்கும் சமரசமாயிருச்சுங்கறதை இப்போது ஜெகதாவுக்குச் சொல்ல வேண்டாம்... சரியா?' என்றார்.

'அம்மா...' என்று வெகுநாட்களுக்குப் பிறகு தன் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொள்கிற அவர் தலையை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார். அம்மா முகத்தில் சிரிப்பு உறைந்திருந்தது.

- - - - -

அன்றிரவு

எட்டு மணி வாக்கில் செல் ஃபோன் ஒலித்தது.

'ஏங்க! அதைக் கொஞ்சம் எடுங்க.' என்றாள் ஜனனி, சமையலறையிலிருந்து.

'ஜனனி, ப்ளீஸ் நீயே வா... நா இங்க இப்ப வேலையா இருக்கேன்...!' என்று அவன் பதில் குரல் கொடுக்க, கரண்டியை மாமியார் கையில் கொடுத்துவிட்டு வந்தாள்.

எடுத்தாள், நம்பரைக் கவனிக்கவில்லை.

'ஹலோ, ஜானும்மா, நா அப்பா பேசறேன்,' என்ற நாகமாணிக்கத்தின் குரல் அந்தப்புறம் கேட்டது.

இதை எதிர்பார்க்காத ஜனனி சட்டென்று ஆஃப் செய்து விட்டாள்.

'பிரபு... அப்பா போன்ல...' என்று பதட்டமாக அவனைப் பார்த்தாள்.

அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

'இதென்னடா வம்பாப் போச்சு. அப்பாதானே. பேசு..!' என்றான் புன்னகையுடன்.

மறுபடியும் ஃபோன் ஒலித்தது.

'ஜனும்மா..' என்ற அப்பாவின் குரல் மீண்டும் கேட்டது. 'சாரிம்மா.. நான் உங்கிட்ட அப்படி நடந்திருக்கக் கூடாது. வெரி சாரி..' என்றார்.

சற்றும் எதிர்பாராத விதமாக.. 'அப்பா, இப்பத்தான் எங்கிட்ட பேச உங்களுக்கு மனசு வந்துச்சா?' என்று தேம்பி அழுதாள் ஜனனி. ஜனனி அழுவதைப் பார்த்தவுடன் ஃபைல்களை அடுக்கிக் கொண்டிருந்த அன்பழகன் சட்டென்று எழுந்து அவளருகில் வந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

ஒரு நிமிடம் அழுதவளாய்ப் பிறகுதான் தேற்றிக் கொண்டாள்.

'ஜனும்மா. அழாதேம்மா.. ஐயோ. நான் மடையன்மா..!' என்று அப்பா சொல்லிக் கொள்வது அவள் காதிலும் விழுந்தது. அவள் அழுகை மெதுமெதுவாக நின்றவுடன் 'பேசு!' என்பது போல் சைகை காட்டி விலகிக் கொண்டான்.

'அம்மா.. மாப்பிள்ளை நல்லாயிருக்காரா? எல்லாரும் நல்லா யிருக்கீங்களா..' என்றார்.

'நல்லாயிருக்கேன்ப்பா. நல்லாயிருக்கேன்!' என்றபடியே ஹாலுக்கு வந்தாள்.

அப்பா பேசுவது தெரிந்ததும் குடும்பமே வந்து நின்று வேடிக்கை பார்த்தது. வலது கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் மலர்ச்சியுடன் பேசுவதை அன்பழகன் அறைக்குள் நின்றபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் அன்பும் கனிவும் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.



'அப்பா.. ஒண்ணும் பிரச்சினையில்லப்பா. இங்க மாமா.. அத்தை எல்லாரும் ரொம்ப நல்லவங்கப்பா. ஐ லவ் தெம்.. உங்களை யெல்லாம் மிஸ் பண்றேங்கிறதைத் தவிர வேற ஒண்ணும் பெரிசா இல்லைப்பா.'

'மாப்பிள்ளைம்மா?'

'மாப்பிள்ளையா. ரொம்ப ரொம்ப நல்லவர்ப்பா. அவராட்ட மாப்பிள்ளை கிடைக்கறதுக்கு நாம ரொம்ப புண்ணியம் செஞ்சிருக்கணும்பா..!' என்றாள்.

'அப்படிதாம்மா பேசிக்கறாங்க...' என்று சிரித்தார். 'அப்புறம் கம்பெனியில எனக்குத் தனியா மேனேஜ் பண்றதுக்குக் கஷ்டமா இருக்கு... பழைய மாதிரி நீ வர்றியாம்மா?' என்றார்.

'அப்பா, அவரைக் கேக்கணும்பா..' என்றாள்.

'குடும்மா. மாப்பிள்ளைகிட்டே நான் கேக்கறேன்..' என்றார்.

அவள் தயக்கத்துடன் கொடுத்தாள். 'மாப்பிள்ளே, வணக்கம்.. நான் நாகமாணிக்கம்!' என்றார் சிரிப்புடன்.

அவன் சற்றே பதட்டமாகி விட்டான். அன்று தான் பேசியது சற்று அதிகமோ என்று கலக்கத்தில், இருந்தவன், இப்போது அவர் தன்னிடம் பேசக் கூடும் என்று எதிர் பார்க்கவில்லை.

'வணக்கம் மாமா..!' என்றான் பதட்டமாக.

'மாப்பிள்ளை, நல்லா இருக்கீங்கல்ல..' என்று புதிதாகப் பேசுவது போல அவர் பேசவும், அவனும் அதே போல நாடகம் தொடர்ந்தான்.

'மாப்பிள்ளை. நாளுக்கு நாள் வொர்க் அதிகமாய்ப் போயிட்டிருக்கு... ஜனனி ஆபிஸுக்கு வந்தா கொஞ்சம் ஹெல்ப்பா யிருக்கும்.' என்றார்.

'ஒரு நிமிஷம் மாமா!' என்றான். திரும்பி ஜனனியிடம், 'ஜனனி, உனக்கிஷ்டம்னா போ. என்னை ஏன் இதில மாட்டி விட்றே..' என்றான். கிசுகிசுப்பாக.

அவர் அந்தப் பக்கம், 'என்ன மாப்பிள்ளே?' என்றார்.

'இல்ல. ஜனனியைக் கேட்கணும். அவளுக்கு இஷ்டம்னா.. வரட்டும்' என்றான்.

'என்ன மாப்பிள்ளே இது. அவளைக் கேட்டா... உங்களைச் சொல்றா.. நீங்க அவளைச் சொல்றீங்க..!' என்று சிரித்தார்.

'சரி. மாப்பிள்ளே. ரெண்டு பேரும் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வாங்க.' என்றார்.

'சரிங்க மாமா..!' என்று ஆஃப் செய்யத் திரும்பியபோது, 'ஒரு நிமிஷம் மாப்பிள்ளே.' என்றார்.

'சொல்லுங்க.' என்றான்.

'ஆனாலும் ரொம்பத்தான் மிரட்டறீங்க!' என்று ஆஃப் செய்தார். அவனும் ஆஃப் செய்து ஜனனியின் மலர்ந்த முகம் பார்த்து மகிழ்ச்சியானான்.

அறிவழகன், 'ஹேய்..!' என்று குதித்தான். 'அண்ணி, ட்ரீட் குடுங்க,' என்றான்.

'போடா, அது வேற செலவு!' என்று அன்பழகன் மிரட்டவும், ஜனனி அன்பழகனை அறைக்குள் வரச் சொல்லிக் கண் காட்டி விட்டுப் போனாள்.

'என்ன ஜனனி..? என்றான்.

'என்ன நீங்க, எப்பப் பாரு சிக்கனம், காசன்னுகிட்டு.. குழந்தைகளுக்கும், கொஞ்சம் சந்தோஷம் கிடைக்கணு மில்லை..' என்றாள்.



'இப்ப என்ன, செய்யலாங்கறே?' என்றான்.

'எல்லாரும் சந்தோஷமா இருக்கோம். ஒரு நாள் செலவு ஆனாத்தான் என்ன. அன்னபூர்ணா போகலாம். பணம் எங்கிட்டே இருக்கு..' என்றாள்.

'உத்தரவு மேடம்! 'என்றான். அதற்குள் செண்பகம் தன் கணவருடன் ஆலோசனை நடத்தினாள்.

'சின்னதுங்க எல்லாம் கலாட்டாவா இருக்கும். நாம வீட்டில் இருக்கலாம்...' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்...

'அதுவும் சரிதான்.' என்றார் அப்பா.

சிரிப்பும் கலகலப்புமாகக் கழித்தார்கள்.

'இப்ப அண்ணி கிட்ட எது கேட்டாலும் கிடைக்கும் தெரியுமா?' என்று ஐஸ் வைத்தான் அறிவழகன்.

'என்ன வேணும்?' என்றாள்.

'மொபைல்... வேணும்', என்றான்.

'வாங்கலாம்.. கண்டிப்பாக வாங்கலாம். ஆனா.. நீ பிளஸ் டூவில நல்ல மார்க் எடு. வாங்கலாம்..' என்றாள், ஜனனி.

அப்படிப்போடு..! அது இப்போதைக்கு நடக்காது!' என்று சிரித்தான் அன்பழகன்.

'ஏன், நான் வாங்கிக் காட்டறேன். ஸ்கூல் ஃபர்ஸ்ட். ஓ.கே? என்றான்.

'அப்ப எனக்கு..?' என்றாள் கவிதா.

'நீயே சொல்லு..!' என்றாள், ஜனனி.

நான் எம்.பி.ஏ. போஸ்டல்ல படிக்கிறேன்..!' என்றாள்.

'வெரி குட். செய்,' என்றான், அன்பழகன்.

'எனக்கு?' என்றான் பாபு.

'உனக்கு?'

'குட்டி சைக்கிள்..?'

'சரி, குட்டி சைக்கிள்!' என்றாள் ஜனனி.

'ஹேய்' என்று அவன் குதித்த விதத்திற்குப் பக்கத்து டேபிளில் இருந்தவர்கள் முறைத்தார்கள்.

மகிழ்ச்சியாய் வீடு வந்து சேர்ந்தார்கள். மாமனாருக்கும் மாமியாருக்கும் மறக்காமல் பார்சல் வாங்கி வந்தார்கள்.

மாமியாரிடம் சற்றுப் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தங்கள் அறைக்கு வந்தபோது... அவன் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கும் தனக்கும் நியூட்ராமுல் கலந்து கொண்டு வந்திருந்தாள். அவளும் அருகில் அமர்ந்து பருகினாள்.

சோபாவில் அமர்ந்து ஏதோ பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தவன் திரும்பி,

'என்ன ஜனனி... இன்னைக்கு அம்மா ரொம்ப ஜாலியான மூடில் இருக்கீங்க. எல்லாருக்கும்... என்னென்னமோ சாங்ஷன் பண்ணியிருக்கீங்க. எனக்கு ஒண்ணும் இல்லையாக்கும்!' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் விரல் நகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவனைப் பார்த்து விட்டுத் தலை குனிந்தாள்.

அவன் புரிந்தும் புரியாமலும் பார்த்துக் கொண்டிருந்தான். 'என்ன ஜனனி என்ன இப்படித் தயங்கறே? எதுவானாலும் சொல்லு.' என்றான் கலவரமாக.

'அப்படிக் கவலைப் படற அளவுக்கு எதுவும் இல்லை.' என்று முணுமுணுத்தாள்.

'பின்னே என்ன சொல்லு...' என்றான்.

'எல்லாத்தையும் சொல்லணுமாக்கும்?' என்று அவன் மார்பில் முகம் பதித்தாள். அவன் லேசான புன்னகையுடன் அவளை இடக்கையால் லேசாக அணைத்துக் கொண்டான்.

அவன் முகத்தில் சிந்தனை ரேகைகள் ஓடின.



'நீங்க இப்ப என்ன சொன்னாலும்... எனக்குக் கோபம் வராது மிஸ்டர் அன்பழகன். நான் இப்ப ஒரு கர்வத்துல நிக்கறேன்!' என்று சொன்ன மாமனாரின் கர்வம் நிறைந்த முகம் அவனுக்கு எதிரே நின்றது.

அதே சமயம் 'உண்மையான அன்பு தன்னை விட்டுக் கொடுக்கும், தோற்கும்!' என்று தான் பதில் சொன்னதும் நினைவுக்கு வந்தது. அந்த ஒரு கணப் போராட்டம் நிறைவுற்றது. தோற்கத் தயாரானான்.

அவன் தயக்கம் பார்த்துச் சற்றே மிரட்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள். 'ஹேய்... அப்படிப் பார்க்காதே... கொஞ்ச நேரம் கனவா, நிஜமான்னு சந்தேகமாப் போச்சு..' என்று சிரித்தான்.

மெல்லச் சிரித்தபடி தன் கைச் சிறைக்குள் அடைத்தான்.

'ஜனனி, எல்லாம் உன் அப்பா மனசப்படிதானாக்கும்...' என்று கேட்க நினைத்தவன். அவள் ஏதோ சொல்ல, நிறுத்திக் கொண்டான்.

'பிரபு, நா இன்னைக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கிறேன். அப்பா இன்னிக்கு எத்தனை தடவை உங்களை மாப்பிள்ளை மாப்பிள்ளைன்னு சொன்னாரு தெரியுமா....' என்று மகிழ்ந்து கொள்கிற மனைவியை, 'ஐயோ பெண்ணே!' என்பது போலப் பார்த்தான்.

நான் பார்த்து அனுமதிச்சாத்தான் என்று அவர் சொல்லிச் சொல்லிச் சிரிப்பது போன்ற தோற்றம் அவன் மனதுக்குள் வந்து வந்து போனது.

ஆனால் தன் கைப்பிடிக்குள் வெட்கச் சிரிப்புடன் அடங்கிக் கிடக்கிற மனைவியின் முகம் பார்த்ததும்... அவன் மனத்தில் காதலும் கருணையும் பொங்கி வழிந்தது.

மற்ற எல்லாவற்றையும் மறந்து போனான்.

# 11

அன்றைக்கு அவள் விழிக்கும்போதே மணி ஏழாகி விட்டது.

அவளும் ஆறு மணிக்குத்தான் விழித்தாள். அடித்துப் பிடித்துக் கொண்டு குளித்து விட்டுச் சமையலுக்கு ஓடினாள்.

'ஏம்மா... நீ சமையலுக்கு வரலேன்னா என்ன... இப்ப நீ போய் அவனைக் கவனி' என்று செண்பகம் தேநீரைக் கையில் கொடுத்து அனுப்பினாள்.

அவளது சிவந்து கிடந்த முகம் பார்த்து ஓரளவு விஷயம் புரிந்து கொண்டாள். இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் கதவு திறந்திருக்கக் கண்டு பாபுவை எடுத்துவரப் போனவள், அவன் சோபாவை விரித்துப் போட்டு அதன் மேலும், அவள் கட்டிலின் மேலும் உறங்குவது கண்டு சற்றே கவலையானாள்.

கணவரிடம் அது பற்றிப் பேசினாள். மருதாசலம் அமைதியாகக் கேட்டுகொண்டு பிறகு சொன்னார். 'பாரு, செண்பகம்... அது அவங்க அந்தரங்கம். அவங்களா நம்ம ஆலோசனை கேட்கற வரைக்கும் நாம தலையிடக்கூடாது...' என்றார்.

அவரே அன்றைக்கு மாலை மறுபடியும், 'திடீர்க் கல்யாணம். அவங்களே... ஒரு அன்டர்ஸ்டேண்டிங்ல வரவரைக்கும் எதுவும் வேண்டாம்னு நெனச்சிருக்கலாம் இல்ல...?' என்றார்.

'விரிசல்... கிரிசல் எதுவும் இருக்காதே!' என்றாள் மீண்டும் கவலையுடன் செண்பகம்.



'சேச்சே, ரெண்டு பேரும் ரொம்ப பிரியமாத்தான் இருக்காங்க.' என்றார் மருதாசலம்.

இன்றைக்கு மருமகள் தயக்கமும் வெட்கமுமாய் வந்த விதம்... கூட மாட உதவி செய்து கொண்டிருந்த போது பளிச் பளிச்சென மின்னி மறைந்த உணர்வுகள்... தனக்குள் சிரித்துக் கொள்வது எல்லாவற்றையும் பார்த்தவுடன் நிம்மதியானாள். தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள். அதனால்தான் அனுப்பி வைத்தாள்.

அவள் டீயை எடுத்துக் கொண்டு வந்த போதுதான், அவன் புரண்டு படுத்துக் கொண்டு விழித்தான். 'ஹலோ' என்று புன்னகைத்தான்.

அவள் அவனை நேராகப் பார்க்கவில்லை. டீ என்று பக்கத்தில் இருந்த டீபாயில் வைத்தாள். நகர முற்பட்டாள்.

அவன் அவளைக் கையைப் பிடித்து இழுக்க, கோபித்துக் கொள்பவள் போல் பொத்தென்று கட்டிலின் மேல் அமர்ந்து கொண்டாள்.

'ஹேய், இங்க என்னைப் பாரு' என்று அவன் முகம் திருப்ப, அவள் பார்க்க மறுத்தாள். தலையைக் குனிந்து கொண்டாள். அவன் ரசனையுடன் அவளைப் பார்த்தபடி எழுந்து அமர்ந்தான். அடிக் குரலில் சிரித்தான்.

'சும்மாயிருங்க பிரபு. பேசறது வெளிய கேட்கப் போறது.' என்றாள் சற்றே கலவரமாக.

அவன் எழுந்து பல் துலக்கி வந்தான். தேநீரைப் பருகி முடிக்கும் வரை காத்திருந்தவளிடம் லேசாகக் குறும்புகள் செய்து கொண்டிருந்தான். சரியாக அந்த நேரம் பார்த்துப் பாபு 'அண்ணி' என்று ஓடி வந்தான்.

ஜனனியும் வாரி எடுத்துக் கொள்வதையும், முத்தமிட்டுக் கொஞ்சுவதையும் அவன் கண்கள் மின்னப் பார்த்துக்

கொண்டிருந்தான்.. அவள் அவனைக் கண்டு கொள்ளாத வனைப் போல நகர்ந்து விட்டாள்.

அந்த வீட்டில் டைனிங் டேபிள் போடுவதற்கு இடமில்லை என்பதாலோ என்னவோ, அவசரத்திற்கு இருவர் அமர்ந்து சாப்பிடுகிற மாதிரி ஒரு சின்ன டேபிள்... அல்ல.. அல்ல..பெஞ்ச் ஒன்று போட்டு வைத்திருந்தார்கள்.

அறிவழகனும் பாபுவும் புறப்பட்டுப் போயிருந்தார்கள். கவிதா மெஸ்ஸில் டிஃபன் தயாராவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கு அங்கே யிருந்தே இட்லியும்.. சட்னியும் கொண்டு வந்து கொடுத்த அம்மா...

'ஜனனி, நான் சித்த அங்கே யிருக்கேன். நீ அவனை அனுப்பி விட்டு நீயும் சாப்பிட்டுட்டு வா.' என்று கிளம்பியவள், கணவரையும் அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டு போய்விட்டாள்.

'ஜனனி, அம்மாகிட்டே எதுவும் சொன்னியா?' என்றான் அன்பழகன்.

அவள் அவன் முகம் பார்க்கவேயில்லை. இலையைப் பார்த்துக் கொண்டே பரிமாறியபடியே, 'இல்லையே'.. என்றாள்.

கண்களில் குறும்பு கொப்பளிக்க அவன் சிரித்தான்.

'அடடடா, முகத்தைக் கூடப் பார்க்கக் கூடாத அளவுக்கு நான் என்ன தப்பு செய்தேன், மேடம்..' என்று வம்பிழுத்தான்.

'சும்மா யிருங்க பிரபு,' என்று நகர்ந்து விட்டாள். அவன் கைகழுவி விட்டு வந்தான்.

'என்ன, என்ஜினியரம்மா பெரிய தைரியசாலியாச்சே நீங்க.. கம்பெனியையே கலக்கியவளுக்கு.. இப்படி வெட்கம்..' என்று கேலி செய்தான்.



அவள் அவனைத் தலை நிமிர்ந்து பார்த்து விட்டு.. 'அது வேற.. இது வேற..' என்றாள்.

'சரி..சரி..! என்று அவன் தேற்றினான். பிறகு சற்று நேரம் வேறு விஷயங்களைப் பேசி இயல்பாக்கினான்.

'சரி, நான் புறப்படட்டுமா..' என்று கிளம்பியவன், பிறகு மீண்டும் அறைக்குள் வந்து, 'பேசாம நான் லீவு போட்டுக்கட்டுமா..' என்று ஆர்வமாக அவள் முகத்தைப் பார்த்தான். மற்றுமொரு முறை அணைத்துக் கொண்டான். அவன் பார்வையாலும் தொடுகையாலும் உடல் சிலிர்த்துக் கொள்வதைக் கண்டு புன்னகைத்துக் கொண்டான், விடுவித்தான்.

'சரிம்மா.. நான் புறப்படறேன்..' என்று கிளம்பினான்.

கையசைத்து வழியனுப்பி விட்டு உள்ளே போனாள்.

கடைக்குப் போகும்போது மட்டும் அவன் சைக்கிளில் தான் போவான். அவன் அந்தப் பக்கம் போனவுடன் அவள் பாட்டிக்கு ஃபோன் போட்டாள்.

'பாட்டி, உங்களைப் பார்க்கணும் போல இருக்கு. வர்றீங்களா?' என்றாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் வந்த பாட்டி தன் கொள்ளுப் பேத்தியின் முகம் பார்த்து விஷயம் புரிந்து கொண்டார். சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு.

'பாட்டி அவர் இன்னும் அந்தக் கடைக்குப் போறது எனக்குப் பிடிக்கல.' என்றாள்.

'வேற என்ன செய்ய உத்தேசம்?' என்றார் பாட்டி.

'ஒரு சின்னக் கடையா இருந்தாலும், போதும் பாட்டி அவரே முதலாளியா இருக்கணும். ஒரு ரெண்டு மூணு

கட்டிடம் கிடைச்சாலும் போதும். எலக்ட்ரிகல் வொர்க் காண்ட்ராக்ட் எடுத்துச் செய்யலாம்.' என்றாள்.

'அது உண்மைதான்...' என்று சொல்லிக் கொண்ட பாட்டி, 'எதற்கும் அன்பழகன் கிட்டே பேசிப்பாரு...' என்று கிளம்பிப் போனார்.

அன்றிரவு பேசினாள்.

'இன்வெஸ்ட்மென்ட் வேணுமே. ஓரளவுக்காவது கடையில சரக்குப் போடணும். இப்ப ஒரு கட்டடத்துல வேலை முடிஞ்சா அவங்களே ஃப்ரண்ட்ஸுக்கு ரெகமண்ட் செய்யறாங்க. அதனால... தொடர்ந்து வேலை கிடைக்கும்னு நெனக்கிறேன்...' என்று நம்பிக்கையாகத்தான் பேசினான்.

'பிரபு! நீங்க உங்க கடை ஓனர்கிட்டே பேசுங்க. ஏதாவது ஏற்பாடு செய்யலாம்!' என்றாள்.

'என்ன, உங்க அப்பாகிட்ட பணம் கேட்கப் போறியாக்கும்?' என்றான் அவசரமாக.

'அப்பாகிட்டயா? நீங்களே கேட்கச் சொன்னாலும் கேட்க மாட்டேன்.' என்றாள். அவன் திருப்திப் பட்டுக் கொண்டான்.

மனைவியின் பக்கத்தில் படுத்துக் கிடந்த பாபுவை அம்மாவின் அருகில் கொண்டு போய்க் கிடத்தி விட்டு வந்தான்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் பேச்சுக்கு நடுவே சுவாரசியமாகக் கேட்பவன் போல்... 'ஏன் சொந்தத் தொழில் வேணும்னு இவ்வளவு ஸ்ட்ராங்கா ஃபீல் பண்றே?' என்றான்.

அவள் அவனிடம் ஒட்டிக் கொண்டாள். 'இல்லே... கடைக்குப் போறதினாலேதானே தினமும் நாலு மணிக்கும் ஐந்து மணிக்கும் ஓடறீங்க. கொஞ்சம் ஸ்ட்ரெஸ்ஸும்



கம்மியாயிருமே..! அப்புறம்... என் ஹஸ்பெண்ட் என் கூடக் கொஞ்ச நேரம் அதிகமாகச் செலவு செய்வாரே..!' என்றாள்.

'அதுக்கு அப்பாகிட்டே பர்மிஷன் வாங்கிட்டியா?' என்றான் சிரித்துக் கொண்டே.

'எதுக்கு?' என்றாள் வியப்பாக.

'இல்லை. உன் ஹஸ்பெண்ட் கூட நிறைய நேரம் செலவழிக்கலாம்ா. கூடாதான்னு கேட்டுக்கலையாக்கும்?' என்றான்.

'பிரபு..!' என்று அடிபட்டவள் போலப் பார்த்தாள். முகம் வாடி விட்டது. 'நான் உங்களைக் காயப்படுத்திட்டேனா என்ன?' என்றாள்.

'ஹேய்... நான் சும்மா கேலி செய்தேன். தப்பா எடுத்துக்காதே. என்ன இருந்தாலும்... அவர் கொஞ்சம் இறங்கி வந்த பிறகுதானே உங்களுக்கு என் மேல் கருணை வந்தது-அதுக்குச் சொன்னேன்.' என்றான்.

அவள் கட்டிலைப் பார்த்தபடி ஒருக்களித்துப்படுத்துக் கொண்டாள். கடந்த மாதங்களில் அவனது பண்பாடு, கம்பீரம், அழகு, பொறுப்பு எல்லாமும் பார்த்து அவனைத் தனக்கு மிகவும் பிடித்து விட்டது என்று ஒரே நாள் உறவுக்குப் பின்னால் சொன்னால் எடுபடுமா என்ற எண்ணம் தோன்றியது.

புரண்டு படுத்தாள். அவன் உறங்கிப் போயிருந்தான். முதல் நாள் நிகழ்வுகள் மனதில் தோன்ற, குழந்தை போன்ற முகத்துடன் உறங்குகிற தன் கணவனை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் கணத்தில் அவன் மேல் தனக்கு நேசம் முழுமையாக ஏற்பட்டிருப்பதை உணர்ந்தாள். திருமணமாகி வந்ததற்குப் பிறகு அப்பாவின் உதாசீனத்தைக் கூடத் தாங்குகிற

கொடுத்திருந்தது என்பதை சக்தியை அவன் அன்புதான் உணர்ந்தாள்.

அவன் நிழலில் இருந்ததாலோ என்னவோ, அந்த வீட்டில் வசதிகள் குறைவு என்ற உணர்வே ஒரு நாளும் தனக்கு வரவே இல்லை என்பதும், நிறைவாகத்தான் உணர்ந்தோம் என்பதும் புரிந்தது. ஆனால், அவனுக்குள் ஏதோ தயக்கம் இருப்பது புரிந்தது.

அவனிடம் ஒட்டிக் கொண்டாள். 'பிரபு, உங்களோடு ஆப்பிரிக்காவோ அலாஸ்காவோ, எங்கு வேண்டுமானாலும் நான் வரத் தயார்!' என்று சொல்லிக் கொண்டாள். தன்னையுமறியாது வாய் விட்டே சொல்லிவிட்டாள். அவன் லேசாகப் புரண்டு படுத்து அவளைத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தபடி 'என்னம்மா சொன்னே?' என்றான்.

அவள் புன்னகையுடன் திரும்பச் சொன்னாள். அவனுக்கும் லேசாக விழிப்பு வந்தது.

'இல்லையே, நாம போக வேண்டியது வேற இடமாச்சே..!' என்றான் அரைத் தூக்கத்தில்.

'எங்கே?' என்றாள்.

'சொல்லக் கூடாது... பெண்ணே... கூட்டிக் கிட்டுப் போறேன். இப்ப தூங்குவியாம் என்ன. யூ ஆர் ஆல்ரெடி டயர்ட்,' என்று உறங்கச் செய்தான்.

அவளும் புன்னகையுடன் உறங்கிப் போனாள்.

மறுநாள் மாலை.

கடையிலிருந்து வரும்போதே, 'ஜனனி...ஜனனி!' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தான்.

ஜனனி வெளியே போவதற்குத் தயாராயிருந்தாள். அவன் கேள்விக் குறியுடன் பார்க்க, 'கோயிலுக்குப் போலாமா?' என்றாள்.



அவன் புரிந்து கொண்டு புன்னகைத்துக் கொண்டான். அவள் தன்னோடு சற்று நேரம் தனியாகச் செலவழிக்க விரும்புவதைப் புரிந்தவனாய்ப் புறப்பட்டான்.

சற்று தூரத்தில் இருந்த இரத்தின விநாயகர் கோயிலுக்குப் போய்விட்டு, சந்தடி மிகுந்த தெருக்களை விட்டு விட்டுக் குறுக்குத் தெருக்களில் புகுந்து நடந்து வந்தார்கள். அவன், 'ஜனனி! கடையில பூரா உன் நெனைப்பாகவே இருந்தது,' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

'எனக்கும்தான்,' என்று சொல்ல நினைத்தாள். ஆனால் முடியவில்லை.

'சரி... சரி... இந்த டாபிக் வந்தா அம்மா அமுத்தமாகவே சாதிப்பீங்களே,' என்று கிண்டல் செய்தான்.

'ஜனனி, சாமிகிட்டே என்ன வேண்டிக்கிட்டே?' என்று பேச்சை மாற்றினான்.

அவள் குரலே எழும்பாமல், 'உங்களுக்காகத்தான்... வேண்டிகிட்டேன்...' என்றாள்.

'ம்...?'

'தேவையில்லாம என் பாரத்தைத் தூக்கித் தலையில போட்டுகிட்டு சக்திக்கு மீறி அலையறீங்களே, அந்த அலைச்சல் குறையணும்னு வேண்டிக்கிட்டேன்.'

அவன் சட்டென்று நின்றான், திரும்பினான்.

'ஜனனி, சக்திக்கு மீறி அலையறேன்னு சொல்லு... குறைச்சுக்கறேன்... ஆனா நீ தேவையில்லாத பாரம்னு சொல்லிக்கறயே... அதை இன்னொரு முறை சொல்லாதே...' என்றான் வேகம் நிறைந்த குரலில்.

அவள் திகைத்துப் போய் நின்றாள்.

'நம்ம கல்யாணம் எதிர்பாராததா இருக்கலாம். ஆனா நீ என் வாழ்க்கையில் வந்த தென்றல். என் கௌரவம். இனி மேல் உன்னைக் குறைச்சு எதுவும் சொல்லிக்காதே... என்ன?' என்று அவன் படபடவென்று பேசக் கண்டு அவள் நெகிழ்ந்து நின்றாள்.

'தேங்க்ஸ் பிரபு' என்றாள், கன்னக் குரலில். அவன் மறுபடியும் நடக்க ஆரம்பித்தான்.

'ஜனனி. நீ வீட்டுக்கு வந்ததிலிருந்தே எல்லாமே வளர்ச்சிதான். நம்ம வீட்டுல நம்மகிட்டே என்னென்ன அசெட்ஸ் இருக்குன்னு தெரிஞ்சுகிட்டு சரியாகத் திட்டம் போட்டு அதைப் பயன்படுத்தி எல்லா விதத்திலேயும் இம்ப்ருவ்மென்ட் காட்டியிருக்கே. இப்பப் பார், அடுத்த ஸ்டெப்புக்கு ஆர்டர் போட்டுட்டே. நீ சொன்ன ஒரே வார்த்தைக்குக் கட்டுப்பட்டு காலையில கடை ஓனர்கிட்டே சொல்லிட்டேன். ஒரு மாதத்தில நிக்கறேன்னு. அப்படி உன்னை நான் உயர்வா வச்சிருக்கேன். என்ன ஜனனி...?' என்றான், இரங்கிய குரலில்.

அவள் களுக் கென்ற குரலில் சிரித்தாள். அன்பழகன் புரியாமல் பார்க்கவும். 'ஆமாமா... ஆனா முந்தா நேத்திக்கு மட்டும்...!' என்று அவள் வெட்கத்துடன் சிரிக்கவும், அவன் முகமும் சிவந்தது.

'அது வேற...' என்றான் அவளுடைய அதே பாணியில். பிறகு... 'அங்கேயும் அதேதான். மேடம் ஆர்டர் போட்டா போதும்... எல்லாம் நடக்கும்.' என்றான்.

'நான் உங்கள் மனைவி என்ற காரணத்துக்காக நீங்க கடமையாக எதுவும் செய்ய வேண்டியதில்லை. நான் உங்களை நேசிக்கிறேன். புரிஞ்சுக்கங்க.' என்று சொல்ல நினைத்தாள். ஆனால், சொல்லவில்லை.



அன்று மட்டும்... அதைச் செய்திருந்தால் பின்னால் பல பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம் என்று அன்று அவளுக்குப் புரிந்திருக்கவில்லை.

- - - - -

செண்பகமும் கவிதாவும் வேகமாகப் பாத்திரங்களைக் கழுவிக் கொடுக்க, ஜனனி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள்.

அன்பழகன் மெதுவாக எட்டிப் பார்த்தான். கவிதா, 'சரி, நான் தூங்கப்போறேன்!' என்று போய்விட்டாள்.

'என்னப்பா தம்பி?' என்றாள் செண்பகம்.

'இல்லே... ஹோம் டிபார்ட்மென்ட்டே இங்கே இருக்கீங்க. ஒரு முக்கிய விஷயம் பேசணும்...' என்றான்.

செண்பகம் ஜனனியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'அம்மா, எங்க மாமனார் ஜனனியை வேலைக்கு அனுப்பறியான்னு கேட்டு நாலு நாளாச்சு. நாம ஒரு பதிலும் சொல்லலே...' என்றான்.

'ஜனனி என்ன சொல்றா?'

'ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறா...'

செண்பகம் ஜனனியைப் பார்த்தாள்.

ஜனனி அதற்குப்பதில் சொன்னாள். 'அத்தே... நாம இங்க வேற மெஸ், கிஸ்ன்னு ஆரம்பிச்சிருக்கோம். பூ வியாபாரம் வேற. அதுதான் என்ன பதில் சொல்றதுன்னு எனக்கும் ஒண்ணும் புரியலை.' என்றாள்.

'அதெல்லாம் விடு. உனக்குப் போகணும்னு எண்ணமிருக்கா இல்லையா?'

அவள் அன்பழகனைப் பார்த்தாள். அவன் புன்னகை யுடன் பார்த்தான். 'ஜனனி, நீதான் முடிவெடுக்கணும்.' என்றான்.

'போகப் பிரியந்தான். எனக்கு அப்பவே பதினைந்தாயிரம் சம்பளம் கொடுத்தார். இப்பவும் அதைவிட அதிகமாகத்தான்

கொடுப்பார். அதுவுமில்லாமல் அவருக்கு நம்பிக்கையான ஒரு ஆள் பக்கத்திலே வேணும் இல்லையா?' என்றாள்.

'அப்பா இவரைக் கூட நம்ப கம்பெனியிலேயே சேர்த்துக்கச் சொல்றார்.' என்றாள்.

'அது வேண்டாம் ஜனனி. அது சரி வராது.' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டான் அன்பழகன். அவளும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

செண்பகம் சற்று யோசித்து விட்டுச் சொன்னாள். 'சரி ஜனனி, நீ கம்பெனிக்குப் போ. நான் எங்க கிராமத்திலிருந்து ரெண்டு ஆளை நம்ம ஷெட்லயே தங்கிக்கிற மாதிரி கூட்டிட்டு வந்தர்றேன். கவிதா கணக்கு வழக்குப் பார்க்கட்டும்.... ஆனா ஒரு கண்டிஷன்,' என்றாள்.

என்ன என்றார்கள் இருவரும் கோரஸாக. 'இன்னும் பத்திருபது நாள்ல தீபாவளி வருது. தீபாவளி முடிஞ்சதுக் கப்புறம் போகலாம். என்ன. அப்பதான்..... ஆட்களும் வருவாங்க' என்றாள். ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேறியது.

அறைக்கு வந்தவுடன், 'ஜனனி, அதென்ன அம்மாகிட்டே என்னமோ.. சொன்னியே?' என்றான்.

'என்ன சொன்னேன்?' என்றாள், புரியாமல்.

அவன் கண்களில் குறும்பு மின்ன, பின்னந்தலைக்கு இரு உள்ளங்கைகளையும் அணையாகக் கொடுத்தபடி சாய்ந்து அமர்ந்து சிரித்து, 'இதையெல்லாமா போய் அம்மாகிட்டே சொல்வாங்க?' என்றான்.

அவளுக்கு நிஜமாகவே புரியவில்லை.

அவன், 'நாம வேற இப்ப மெஸ், கிஸ்னு ஆரம்பிச்சிருக் கிறோமேன்னு சொன்னியே! அதைச் சொன்னேன். மெஸ் சரி... அப்புறம் அதென்ன...' என்று குலுங்கிச் சிரித்தான்.



அவள் முறைத்தாள். ஆனால், சட்டென்று சிரித்து விட்டாள். 'சே.. நா என்னமோன்னு பயந்து போனேன்,' என்றாள்.

இருவரும் ஒரு பார்வைப் பரிமாறலுடன் மீண்டும் சிரித்துக் கொண்டார்கள்.

## 12

ரமாவுக்கு அன்று வளைகாப்பு.

எல்லாருக்கும் பழநிக்குப் போக வேண்டும் என்று ரொம்ப ஆசை என்று மாமியார் செண்பகம் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு, பாட்டியிடம் சொல்லியிருந்தாள் ஜனனி.

அன்றைக்குப் பாட்டி இரண்டு கார்கள் அனுப்பியதோடு பழநியில் தங்குவதற்கு வேண்டிய இடத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். அதனால் எல்லாரும் காலையிலேயே புறப்பட்டுப் போய் விட்டார்கள்.

மெஸ்ஸுக்கு அன்று லீவு கொடுத்து ஆட்களையும் கூட அழைத்துப் போய் விட்டார்கள்.

ரமாவின் வளைகாப்புக்குப் போக வேண்டும் என்று ஜனனி விருப்பப்பட்டதால் அன்பழகனும், அவளும் மட்டும் தங்கி விட்டார்கள்.

'காலை டிஃபனை முடித்துவிட்டுக் கிளம்பிவிடலாம்.' என்று ஜனனி எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்பழகன் வேலை நடக்கும் கட்டிடத்தைப் போய் ஒரு பார்வை பார்த்து விட்டு வருகிறேன் என்று போய்விட்டு வந்தான்.

அவசரமாகக் குளித்துவிட்டு வந்தான்.

'ஜனனி, இங்க வா.' என்று குரல் கொடுக்க –

'என்ன வேணும்?' என்று அவள் குரல் கொடுக்க, 'டிரஸ் எடுத்து வைக்கலையே.' என்றான்.

ஜனனிதான் இப்போது அவன் உடுத்திக் கொள்ள வேண்டிய உடைகளைப் பார்த்து எடுத்து வைப்பாள். என்ஜினியராம். ட்ரிம்மாகப் போக வேண்டுமாம். அப்போதுதான் போகிற இடங்களில் மரியாதை இருக்குமாம். ஒரே உபதேசந்தான். அவனும் சிரித்து ஏற்றுக் கொண்டான்.

அன்றைக்கு அவள் தேர்ந்தெடுத்துக் கொடுத்த உடையை அணிந்து கொண்டு கண்ணாடி முன் நின்று ஒழுங்கு படுத்திக் கொண்டு இருந்தான். டிஃபனை அங்கே எடுத்துக் கொண்டு வந்த ஜனனி, 'என்ன இப்படி லேட் பண்றீங்க? ஏதாவது கிப்ட் வாங்கணும். நான் இன்னும் ரெடியாகலே. சாப்பிட வாங்க..' என்று படபடத்தாள்.

'பேசாம ஒண்ணு செய்யேன். அப்படியே ஸ்பூன்ல குடுத்தீன்னா.. சாப்பிடுவேன்.' என்றான் விளையாட்டாக.

அவள் நிஜமாகவே இட்லியை விண்டு விண்டு எடுத்துக் கொடுத்தாள். அவன் பார்வை தன் மீது அழுத்தமாகப் படிவதை அவள் கவனிக்கவில்லை.

'வரவர நீங்க காலையில சரியா சாப்பிடறதில்லை. மார்னிங் ஃபுட் ரொம்ப அவசியம் தெரியுமா?' என்றாள்.

அவன் மௌனமாகச் சாப்பிட்டான். தட்டை அவன் கையிலேயே கொடுத்துவிட்டுப் புடவைக்கு மாறிக் கொண்டிருந்தாள். புடவைக்குத் திருத்தமாக மடிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கையில் சத்தமே இல்லையே என்று திரும்பிப் பார்த்தாள். அவன் பார்வை அவள் தோற்றத்தில் மலைத்துப் போயிருந்தது.



அவன் பார்வையின் ஆழம் கண்டு அவள் விக்கித்து நிற்கையில், அவன் எழுந்து அருகில் வந்தான்.

'ஜனனி.. ரொம்ப அழகா.. இருக்கே.. இந்தப் புடவையில்..' என்று அணைத்துக் கொள்ள, 'உங்களுக்குந்தான் இந்த கலர் காம்பினேஷன் நல்லா சூட் ஆகுது.' என்று வெட்கத்துடன் அவளும் முணுமுணுத்தாள்.

தன்னை மறந்து அவள் முகம் நோக்கிக் குனிந்து கொஞ்சி மகிழ்கிற விதம் பார்த்து அவள் பேச்சற்றுப் போய் நின்றாள். 'ஹேய் ஜனனி..!' என்று அவன் சற்றே எல்லை மீற..

'ஐயோ, விடுங்க! ஃபங்ஷனுக்குப் போகவேண்டாமா...?' என்று சமையலறை நோக்கி ஓட, அவன் பின்னாலே துரத்திக் கொண்டு வர, அறை வாசலில் நிழலாடத் திரும்பினார்கள்.

ஜெகதா நின்று கொண்டிருந்தாள். இருவரும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

'அம்மா!' என்று ஜனனி ஓடிப்போய்க் கட்டிப் பிடித்துக் கொள்ள, அதை வெறுமையாகப் பார்த்த அன்பழகன்.

'வா ஜெகதாக்கா..!' என்று சுருக்கமாக வரவேற்றான்.

சற்று நேரம் பேருக்காக அமர்ந்து பேசினாள். 'அவரு குடுத்தனுப்பிச்சாரு!' என்று ஒரு தாம்பாளத் தட்டில் ஜனனிக்கு ஒரு புடவை, ஜாக்கெட், அவனுக்கும் டிரஸ் என்று வைத்துக் கொடுத்தாள்.

'தீபாவளிக்கு நாலு நாள் முன்னாலேயே வந்துடணும்!' என்று அழைத்துக் கிளம்பிப் போனாள்.

ரமாவின் வளைகாப்புக்குப் போகிற வழியில், 'ஏன் ஜனனி.. உங்கப்பா நம்ம வீட்டுக்கு வரதில்லேன்னு பிடிவாதமா என்ன?' என்றான்.

'தெரியலையே.' என்றாள் ஜனனி. ஆனால், வளைகாப்பு நடக்கும் வீட்டில் வாசலிலேயே அவர்களை வரவேற்றார், அப்பா.

வளைகாப்பு நடைபெற்ற மண்டபத்தில் பாட்டியும் இருந்தார்.

ரமாவுக்குக் கணவன் மனைவி இருவரும் வந்தது ரொம்ப மகிழ்ச்சி. ஜனனி அலங்காரத்துக்கு உதவி செய்து ரமாவை அழகுபடுத்தி உறவினர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு வந்தபோது அந்தக் காட்சியைக் கண்டாள்.

அப்பா நகரின் பெரிய புள்ளி ஒருவரிடம் அன்பழகனை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார். ஜனனிக்கு உள்ளூரப் பயம் கிளம்பியது. அன்பழகன் எப்படி நடந்து கொள்வானோ, என்று. ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு மேலாக அவரிடம் கை குலுக்கிப் பேசிவிட்டு மார்பின் குறுக்காக லேசாகக் கைகளைக் கட்டியபடி பணிவும், அதே சமயம் கம்பீரமுமாக அவன் நிற்கிற விதம் பார்த்து அதிசயித்துக் கொண்டாள்.

அருகில் வர வர இன்னொன்றும் அவள் மனதில் வியப்பை ஏற்படுத்தியது. அழகான ஆங்கிலத்தில் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தான். பொதுப்படையான விஷயங்களையும் தெளிவாகவே பேசினான். சுந்தரலிங்கம் வெகுவாக மகிழ்ச்சியடைந்து பாராட்டிப் போனார்.

மாமனார் அறிமுகப்படுத்தியவர்களிடமெல்லாம் அவரவர்க்கேற்ற விதத்தில் அவன் நடந்து கொள்வது பார்த்து நாகமாணிக்கமும் மகிழ்ச்சியடைந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்றைக்கு அவன் படித்த பள்ளியின் தலைமையாசிரியரும் வந்திருந்தார். நாகமாணிக்கத்துக்கு மிகவும் வேண்டியவர்.



ஜனனி அவனை யாரிடமோ பேசுவதற்கு என்று அழைத்துப் போன இடைவெளியில் அவர் சொன்னார்.

'ரொம்ப வறுமையான பையன். ஸ்கூல்ல பர்ஸ்ட் வந்தான். ப்ளஸ் டூ படிக்கும்போதே எல்லா டீச்சருக்கும் பிடிக்கும். அமெரிக்காவில ஒரு ஓல்டு ஸ்டுடண்ட் எனக்கு. அவன்கிட்டே இவனைப் பத்தி சொன்னேன். அவன் இவன் படிப்புக்கு உதவி செய்றேன்னான். இவன்கிட்டேயும் என்ஜினியரிங் போப்பான்னு சொன்னேன். சார் இந்த வருஷம் எங்கப்பா ரிடையர் ஆகறாரு. கொஞ்சம் பெரிய குடும்பம். வேலைக்குப் போகணும்னான்,' என்று உருக்கமாகச் சொல்லச் சொல்ல நாகமாணிக்கமும் பாட்டியும் உருகிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'ரொம்ப வற்புறுத்தி டிப்ளமோ சேர்த்தேன். ஸ்ட்ரெயிட்டா செகண்ட் இயர் போனான். படிக்கும் போதே பார்ட் டைம் வேலை செஞ்சான். மூணு வருஷம் கழிச்சு அவன் கடை முதலாளி கிட்டே போய்ப் பேசி ஈவ்னிங் காலேஜ்ல சேர்த்தேன். கெட்டிக்காரன். ரொம்பப் பொறுப்பானவன். ஆனா ரொம்ப சுயமரியாதை பார்ப்பான். அன்புக்குக் கட்டுப்பட்டவன்.' என்றார்.

நாகமாணிக்கம் சற்று தூரத்தில் தன் மகளிடம் அவன் ஏதோ ஜோக் சொல்லிச் சிரிப்பதையும், அவளும் மனசு விட்டுச் சிரிப்பதையும் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். திரும்பி அம்மாவைப் பார்த்தார்.

அன்பழகனின் எளிமையான உடையையும் அழகாக கம்பீரமாக உடுத்திக் கொண்டு நிற்கிற பாங்கும் தோற்றமும் மனதைக் கவர்கிற விதமாகவே இருந்தது. நிறையப் பேருடைய பார்வை அந்த ஜோடியின் மீது பதிந்திருப்பதைப் பார்த்த அப்பா.

'அம்மா, உன் பேத்திகிட்ட சாயங்காலம் திருஷ்டி சுத்திப் போடச் சொல்லு...' என்றார்.

பாட்டி புன்னகைத்துக் கொண்டார்.

அப்பாடா... ஒரு வழியாக மகனுக்குக் கோபம் தணிந்து விட்டது என்று எண்ணிக் கொண்டார். அன்றைய ஃபங்ஷன் முடியும் வரை மருமகளைத் தன்னருகிலேயே அமர்த்திக் கொண்டார்.

புறப்படுகிற நேரத்தில் ரமா வேறு... 'உனக்கு எப்படி வளைகாப்பு?...' என்றாள். ஜனனியின் முகம் சட்டென்று சிவந்து விட்டது. அன்பழகன்தான் சிரித்துக் கொண்டு, 'ஆமாங்க, உங்க பிரண்டே இன்னும் குழந்தைதான். இப்ப எதுக்கு... கொஞ்ச நாள் போகட்டும்...' என்று சமாளித்தான்.

விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

- - - - -

அன்றிரவு

வீட்டில் முதன் முறையாக அப்படியொரு தனிமை அவர்களுக்குக் கிட்டியிருந்தது.

எட்டு மணி வாக்கில் அவள் சமையலை முடித்து விட்டு வந்து சோஃபாவில் அவன் அருகில் அமர்ந்து கொண்டாள். அவன் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவளைப் பார்த்தான். புன்னகைத்தான்.

'இன்றைக்கு... அம்மா நல்ல மூடில இருப்பீங்கன்னு னக்குத் தெரியும்.' என்றான்.

'ஏன் அப்படிச் சொல்றீங்க?' என்றாள் குழப்பமாக.

'ஏனா? இன்னிக்கு உங்கப்பா நம்மளை எல்லார்கிட்டயும் ருமகன்னு அறிமுகம் செய்து வைச்சிருக்காரு... அதற்காகத்



தேவியாரோட கருணைப் பார்வை நம்ம மேலே படியும்...' என்றான் குறும்பாக.

அப்போதுதான் சட்டென்று அவளுக்கு அது உறைத்தது. இதுவரையில் கணவன் தானாகத் தன்னை அணுகியதில்லை. தான் இளகிய போது மட்டுமே, அதிலும்... இரண்டு முறையும் அப்படித்தான் நேர்ந்தது என்பது...!

அவள் முகம் இறுகி விட்டது.

ஒவ்வொரு முறையும் அப்பா மகிழ்ச்சியுடன் பேசும் போது மட்டுமே... அவனை அனுமதிப்பதாக நினைக்கிறான் என்பது புரிந்தது. அவள் விறைப்பானாள்.

'பிரபு... நீங்க என்னைத் தப்பா நினைச்சிட்டீங்க...' என்றாள் சற்றுக் கோபமாக.

இதுவரை அவளைக் கோபமாகப் பார்த்திராத அவன் திகைத்துப் போனான்.

ஜனனியின் கண்களில் சரசரவென்று கண்ணீர் வழிந்தது. அவன் பதறிப் போனான்.

'ஹேய்... ஜனனி...!' என்று அருகில் நெருங்கி, அணைக்க முயன்றான். அவள், 'தொடாதீங்க பிரபு...!' என்று தள்ளி விட்டாள்.

அவன் மேலும் திகைத்துப் போய் அமர்ந்து விட்டான். 'ஹேய்! ப்ளீஸ்... அழாதே... ஜனனி... நீ அழுதால்... என்னால் தாங்க முடியாது. நா உன்னை உயிரா நேசிக்கிறேன். என்ன வருத்தம்னு சொல்லு,' என்று கெஞ்சினான்.

அவள் சற்றே அமைதியடைந்தாள். ஆனால், கோபம் தணியவில்லை.

'ஒவ்வொரு தடவையும் அப்பாவோட அனுமதி வாங்கிட்டுத்தான் தொட விடுவேன்னு நினைச்சுட்டீங்க. இல்லை, பிரபு. அப்பாவோட கோபம் ஆறட்டும்னு நெனச்சேன். ஏன்

தெரியுமா? என்னை உயிரா வளர்த்தவர். அவரோட மனசு ஆறட்டுமே.. முழுமையாக உங்களிடம் ஒப்புவிக்கலாம்னு நெனச்சேன்!' என்று படபடவென்று பேசியவள் ஒரு கணம் நிறுத்தினாள்.

அவன் மந்திரம் போட்டாற் போல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'எனக்குத் தெரியும்... பிரபு. நம்ம உலகத்துல நானும் நீங்களும் மட்டுந்தான். அங்க வேற யாருக்கும் இடமில்ல... அதுவும்... அதுவும்...உங்களோட பண்பாடு. பொறுப்பு... பொறுமை..சுயமரியாதை எல்லாம் பார்த்து. உங்களை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருச்சு. ஒரு பெண் இந்த மாதிரி இடம் கொடுக்கும்போது மனசாரத்தான் இடம் குடுப்பா... நீங்க புரிஞ்சுக்கலையே..' என்று குரல் தேய்ந்து கொண்டே வர. வருத்தத்துடன் முடித்தாள்.

அந்தக் கணம் அவன் தன்னை மறந்தான். ஜம்...சாரி என்று இறுக அணைத்துக் கொண்டு. முத்த மழை பொழிந்தான்.. அவளும் விருப்பத்துடன் அடைக்கலமாகிக் கொண்டாள்.

சற்றுக் கழித்து. 'விடுங்க... பிரபு.. யாரும் வரப்போறாங்க. மணி எட்டுதானே ஆச்சு..! அப்புறம்....' என்று விலகிக் கொண்டாள்.

'ஜனனி, இதற்கும் உன் அப்பாதான் காரணம். எப்படியும் என் மகள் என் கோபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள் என்று கர்வப்பட்டது என்னைக் காயப்படுத்தி விட்டது.' என்று சொல்லலாமா என்று நினைத்தான். ஆனால். தான் போய் அவள் அப்பாவிடம் பேசியது வெளியே வந்துவிடும் என்று அமைதியாகி விட்டான்.

அவளே எதிர்பாராத விதமாக... 'அப்பாவையே போய் மிரட்டினீங்களாம்!' என்றாள்.



'யார் சொன்னாங்க?' என்றான்.

'பாட்டி சொன்னாங்க. அப்பா சொல்லிச் சொல்லிச் சிரிச்சாராம்!' என்று புன்னகைத்துக் கொண்டாள்.

அவனும் புன்னகைத்தான். 'பின்னே... என்.. வைஃப்பை வெளியிடத்துல வைச்சு இன்சல்ட் செய்தா சும்மாயிருப்பேனா?' என்றான். தொடர்ந்து. தான் உளறி விட்டதையும் அவர் கர்வப்பட்டதையும் சொன்னான். அவள் ஆழமாய் அவன் முகம் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'அதுதான்... உங்க அப்பா அப்படிச் சொன்னதுதான் எனக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு. அன்றைக்குத்தான் நீயும் நெருங்கினியா...' என்று நிறுத்தி விட்டான்.

'அதுதானா? அன்பு தோற்கும்னு வேற சொல்லியிருக்கீங்க?' என்றாள். பிறகு. 'இதையும் யார் சொன்னாங்கன்னு கேட்காதீங்க. பாட்டிதான்.' என்றாள்.

இப்போது அவளே அவனிடம் நெருங்கி அமர்ந்தாள். அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு குறும்பாகச் சிரித்தாள்.

'ஐயோ. பிரபு ! இப்படி யாராவது இருப்பாங்களா? சொந்த மனைவிகிட்டே. நாகரிகம் பார்த்துட்டு...' என்று சிரித்தாள்.

அவனிடமிருந்து பதில் வரவில்லை.... நிமிர்ந்து பார்த்தாள். அவன் தாபத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் மீண்டும் தலை குனிந்து கொண்டாள்.

'ஜனனி. இன்னைலருந்து நீ பார்க்கப் போறது வேற அன்பழகன் !' என்று உணர்ச்சிவசமாக முணுமுணுத்தான்.

அடுத்து வந்த நாட்களில் அவன் அதை முழுமையாக நிரூபித்தான். ஆனால் பிரச்சினைகள் வேறு விதமாக முளைத்தன.

## 13

ஜனனி குனிந்து சங்கு சக்கரத்தைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் நிமிர்ந்து சற்று நகர்கிற நேரத்தில் அன்பழகன் சிறு பிள்ளையைப் போல 'ஹாய்' என்று சத்தம் கொடுத்துப் பயமுறுத்த, அவள் ஒரு கணம் பயந்தவளாய், மறுகணம் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

'போங்க பிரபு..' என்று கோபிக்க வேறு செய்தாள்.

சற்று நேரம் பட்டாசுகள் விட்டார்கள். அந்தக் காட்சியை எல்லாம் தன் அறையில் இருந்த பால்கனியில் இருந்து சுவாரசியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் நாகமாணிக்கம்.

அதே சமயம் அவருக்குச் சற்றுப் பின்னால் நின்றபடி ஜெகதா ஒரு விதக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

'பார்த்தீங்களா, நான் சொன்னேனே? ஜனனி ஒண்ணும் நம்மளைப் பிரிஞ்சு ரொம்ப வருத்தப்படலே... சந்தோஷமாத் தான் இருக்கான்னு.' என்றாள் ஜெகதா - ஏதோ பரிவாகச் சொல்வதைப் போல.

'இருக்கட்டுமே, அதனால் என்ன?' என்று நாகமாணிக்கம் அசுவாரசியமாகச் சொல்வதுபோலச் சொன்னார். 'சரி... நீ போய் அவங்களுக்குச் சாப்பிடக் குடு.' என்றார்.

ஜெகதா மேற்கொண்டு பேச்சை நகர்த்துவதற்கு வழி இல்லாமல் நகர்ந்து விட்டாள்.



சாப்பிட அமரும்போது, 'நாம பாபுவையும் கூடக் கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம்லே.' என்று ஜனனி சொல்லிக் கொண்டு அமர்ந்தாள்.

'ஆமா, பாவம். இதெல்லாம் அவனுக்கு அங்க கிடைக்குமா, என்ன?' என்றாள் ஜெகதா.

ஜனனி கண்டு கொள்ளவில்லை. ஆனால் அன்பழகன் ஜெகதாவைக் கூர்மையாகப் பார்த்தான்.

ஜெகதா அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு நின்றாள். அன்பழகன் பாட்டியின் முகத்தைப் பார்த்தான். பிறகு ஜெகதாவிடம்,

'எதெல்லாம்...ஜெகதாக்கா?' என்றான்.

அவன் கேள்வியில் ஏதோ ஒன்று தொக்கியுள்ளதை உணர்ந்த ஜெகதா சற்று அவசரமாக, 'பொதுவா சொன்னேன்...!' என்றாள்.

'ஆமாமா, நீ கூடத்தான் கிராமத்துல இருந்தப்ப பழகாததெல்லாம், இங்க வந்து பழகிக்கலையா...?' என்றான்.

ஜெகதாவுக்குச் சாட்டையடி பட்டாற் போலிருந்தது. 'எதெல்லாம்?' என்றாள், சற்றுக் கோபமாக.

'நீ எதெல்லாம் நினைச்சியோ, அதெல்லாம்தான்.' என்றான்.

அவள் அடங்கி விட்டாள். அன்பழகன் கண்களும் பாட்டியின் கண்களும் சந்தித்துச் சிரித்துக் கொண்டன.

மாமனார் வந்து அமர்ந்தவுடன் சூழ்நிலை மாறியது. ஜெகதா விழுந்து விழுந்து உபசரித்தாள்.

அன்றிரவு... ஜனனியின் அறையில் அவள் அருகில் கட்டிலில் அமர்ந்தபடி சுற்று முற்றும் பார்த்த அன்பழகன் ஒரு பெருமூச்சு விட்டான்.

'எவ்வளவு வசதியா இருந்திருக்கே.. என் வீட்ல வந்து.. அந்தச் சின்ன அறையில.. நீ ரொம்ப உயர்வானவ.. ஜனனி,' என்றான், நிறைந்த காதலுடன்.

அவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். 'இப்ப அதுதான்... நம்ம வீடு.. இங்கதான் நாம விருந்தாளிகள்!' என்றாள்.

அவன் ஒரு விதமான தாழ்மை உணர்வுடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

'ஆனா. அங்கயும் எனக்குப் பிடிச்சுதான் இருக்கு. அதுவும் பாட்டி அடிக்கடி சொல்றதைப் பார்த்தா ஏதோ ஒரு ஆபத்திலிருந்து என்னைக் காப்பாத்தியிருக்கீங்க.. கௌரவப் படுத்தியிருக்கீங்கன்னு.. புரியுது..' என்றாள்.

அவன் மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டான். 'காலம்.. என்னவெல்லாம்.. செய்யுது. ஜனனி. எவ்வளவு உயரத்தில் இருந்த உன்னை..!' என்ற அவன் வாயைப் பொத்தினாள்.

'சார்... சார்... சார்... நீங்களும் ரொம்ப உயரமான இடத்திலேதான்... இருக்கீங்க பிரபு. ஒண்ணு வேணா... செய்வோமா.. நீங்க பணத்தாலே உயரமாக முயற்சியுங்க.. நான் உங்களைப் போல மனசாலே உயர முயற்சி செய்யறேன்..!' என்று சிரித்தாள்.

'ஏன். இப்பவே என் அன்புக் காதல் மனைவி மனசிலே ரொம்ப உயரமானவள்தான்.' என்று அணைத்துக் கொள்ளவும். பாந்தமாய் அடங்கிக் கொண்டாள்.

மறுநாளும் ஜெகதாவின் சீண்டல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன.. அன்பழகனும் தக்க விதமாகப் பதில்கள் கொடுத்தான்.



பரிவும் அன்புமாகச் சொல்வது போலவே. அவள் அந்த வீட்டில் வசதிக் குறைவு என்பதைக் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

ஒரு நேரம் ஏதோ ஒரு நாற்காலியைக் காட்டி 'இதோட விலை பதினைந்தாயிரம் தெரியுமா!' என்றாள்... சமீபத்தில் வாங்கிய நகையைக் காட்டினாள்.

ஜனனி அதை யெல்லாம் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் அன்பழகனுக்குத்தான் பொறுமை எல்லை மீறிப் போய் விட்டது.

சமையலறையில் ஜெகதா ஏதோ கட்டளையிட்டு வெளியே வர. அங்கே வந்த அன்பழகன் சிரித்துக்கொண்டே.. 'என்னக்கா.. புதுப் பொண்ணு மாப்பிள்ளைக்கு.. என்ன ஸ்வீட் செய்யறதுன்னு சொல்லிட்டு வரயாக்கும்..' என்றான்.

'ஆமா,' என்றாள். மேலும் ஏதோ சொல்ல ஆரம்பித்த போது தடுத்த அன்பழகன், 'சரி.. சரி... என்ன சொல்லப் போறேன்னு.. தெரியும். இதெல்லாம் பழக்கமில்லேம்பே...' என்றான்.

அவள் திகைத்துப் போய் நின்றாள். அவன் ஒரு விதமாகச் சிரித்தபடி. 'எதுக்கும் நீலகண்டன் இந்த ஏரியாப் பக்கம் வராமப் பார்த்துக்க.. வந்தா... அப்புறம் உனக்கும் இந்த மாதிரி பழக்கமான விஷயங்கள் எல்லாம் இல்லாமப் போயிடும்,' என்றான்.

அவள் வெறித்துப் பார்த்தாள்.

'கல்யாணத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்னால... நீலகண்டன்... என்னைப் பார்க்க வந்திருந்தான். குடி போதையில எல்லாத்தையும் உளறிக் கொட்டிட்டான். அம்மா கிட்ட சொன்னேன். ஜெகதாவும் நம்ம வீட்டுப்

பொண்ணுதான்டா. உன்னால அவ வாழ்க்கை... கெட்டுப் போயிடக் கூடாதுன்னு அறிவுரை சொன்னாங்க.' என்று சொல்லச் சொல்ல, அவன் குரல் மாறியது. இரும்பாக ஒலித்த அந்தக் குரலைக் கேட்டு ஜெகதா பீதியடைந்து போனாள்.

'உன்னோட எல்லை தெரிஞ்சு நின்னுக்க. ஜனனி மேலே ஒரு துரும்பு படவிடமாட்டேன். ஜாக்கிரதை!' என்று விரல் நீட்டி எச்சரித்து விட்டு நகர்ந்தான்.

அதே சமயம் அந்தப்புறம் வந்து கொண்டிருந்த நாகமாணிக்கத்துக்கு. 'ஜனனி மேல ஒரு துரும்பு பட விட மாட்டேன்...!' என்று சொன்னது மட்டும் தெளிவாக விழுந்தது. அவர்கள் முகங்களைப் பார்க்கவில்லை என்பதால் யதார்த்தமாகவே எடுத்துக் கொண்டார்.

புன்னகைத்துக் கொண்டு நகர்ந்தார். அதற்குப் பிறகு ஜெகதா தன் வாய்ச் சவடாலை நிறுத்தி விட்டாள்.

அன்பழகனிடம் மரியாதையான தூரத்திலேயே நின்றாள்.

பாட்டி கூட விளையாட்டுப் போல் தனியாக... 'என்னப்பா மாமியாரையும் மிரட்டிப் போட்டாயாக்கும்...' என்றார்.

அவன் மந்தகாசத்துடன் புன்னகைத்ததைப் பார்த்து அவரே ஒரு கணம் ஈர்க்கப்பட்டார்.

இரண்டு நாள்.

கலகலப்பாகக் கொண்டாடி விட்டுப் புறப்படுகிற நேரத்தில்...

அன்பழகன் ஜனனியிடம் கண்ணைக் காட்ட, அவள் ஒரு தாம்பாளத்தில் ஒரு பட்டுப் புடவை, அப்பாவுக்குத் துணிமணிகள், பாட்டிக்கும் ஜெகதாவுக்கும் புடவை என்று அப்பாவின் கைகளில் வைத்துக் கால்களில் விழுந்தார்கள்.



அவர்கள் செய்ததற்கு மேலாகவே பதில் மரியாதை செய்திருந்ததைப் பார்த்து மாமனார் திகைத்தார்.

'தப்பா நினைக்காதீங்கப்பா... அவங்க அப்பா அம்மாவுக்கு எடுத்தப்பவே உங்களுக்கும் எடுத்துட்டோம். அம்மா வந்து கூப்பிடறதுக்கு முன்னாலேயே...' என்ற மகளிடம் தலையாட்டிக் கொண்டார்.

ஒன்றும் பேசவில்ல... அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். இன்னும் தன் மருமகன் மனம் முழுவதும் சமாதானம் ஆகவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

ஜெகதா வேறு, 'பார்த்தீங்களா... அன்பழகன் சுயமரியாதைக்காரன்ங்கிறதை நிரூபிச்சுட்டான்...!' என்று சுருதி கூட்டினாள்.

பாட்டி வெடுக்கென்று, 'ஏன் ஜெகதா, நீ யென்ன பாராட்டறியா? கிண்டல் செய்யறயா...' என்று கேட்டார்.

'ஐயய்யோ, பாராட்டினேன்...' என்றாள் ஜெகதா.

'அதானே பார்த்தேன். சொந்தக்காரங்க முன்னாலே அவமானப்படட்டும்னு விட்டுட்டு கல்யாணத்து முதல் நாள் ஓடிப்போறவனை விட இவன் எல்லா வகையிலும் உசத்திதான்!' என்று நகர்ந்து விட்டார்.

ஜெகதா உடனே பொலபொலவென்று கண்ணீர் விட்டாள்.

'பார்த்தீங்களா, நான் எது சொன்னாலும் தப்பாவே போகுது,' என்று தேம்பினாள்.

நாகமாணிக்கம் ஒரு வித உணர்வும் இல்லாதவரைப் போல் அவளைப் பார்த்தார். பிறகு, 'அம்மாவுக்குக் கோபம் வர்றதிலே நியாயமிருக்கு ஜெகதா... மகாராணி மாதிரி வளர்ந்தவ. இப்ப அந்த வீட்ல ஒரு கூட்டத்துக்கு நடுவே இருக்க வேண்டியிருக்கு. ஆனா அவ நல்லவ... அன்பானவ.

அதனாலே அங்கேயும் அவ சந்தோஷமாகத்தான் இருக்கா. ஆனா நீ.. பாராட்டற மாதிரியே.. கிண்டல் செய்யறியோன்னு எனக்கே தோணுது.. அது மட்டுமில்ல...' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவர் நிறுத்தி விட்டார். 'சரி.. விடு.. ஆளுக்காளு.. குத்தம் சொல்றதை விடுங்க.' என்று நகர்ந்தார்.

அவர் போன பாதையை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள் ஜெகதா.

- - - - -

'ஜனனி!' என்று உற்சாகமாக அறைக்கு வந்தான் அன்பழகன்.

'என்னவாம்..?' என்று அவளும் கைக்காரியத்தை விட்டு விட்டு வந்தாள்.

'ஜனனி. எங்க பழைய கடை முதலாளி இன்னைக்கு வரச் சொல்லியிருந்தாரு.. போனேன். அஞ்சு வருசம் வேலை பார்த்திருக்கேப்பா... வருசத்துக்குப் பத்தாயிரம்னு ஒரு தொகையா தரேன்னு ஐம்பதாயிரம் கொடுத்தார்.' என்றான்.

'நியமா?' என்று உற்சாகமானாள். 'அப்ப கடைக்கு பிளான் பண்ணிடுவமா?' என்றாள்.

'கடை?' என்றான்.

'பாருங்க பிரபு.. நம்ப வீட்டு சைட் சுவரிலிருந்து ரெண்டு பக்கமும் சுவரெழுப்பிட்டு வேலியை எடுத்து விட்டுட்டு ஷட்டர் போட்டா கடை..' என்றாள்.

அவன் சற்று நேரம் யோசித்தான்... 'ஆமா... நல்ல ஐடியாதான்.. ஆனா பணம்...' என்றான்.

'பிரபு!'

'ம்..'



'என் நகையெல்லாம் அடகு வைக்கலாம். பாட்டி குடுத்த இருபத்தஞ்சாயிரம் இருக்கு.. அப்புறம் நீங்க கவிதாவுக்காகச் செஞ்ச சேமிப்பு இருக்கு. இப்ப யூஸ் பண்ணிக்கலாம். அப்புறம் ரீப்ளேஸ் செஞ்சறலாம்..!' என்றாள்.

அவன் சோஃபாவில் அமர்ந்து நீண்ட யோசனையில் ஆழ்ந்தான். இப்போது மெஸ்ஸில் நல்ல லாபம் வர ஆரம்பித்திருந்தது. தினமும் முந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் நிகர லாபம் நின்றது. கைக்கும் வாய்க்கும் போராடிய நிலை என்பதைத் தாண்டியாகி விட்டது.

மின்சாரப் பொருட்கள் கடையிலேயே எடுத்துக் கொண்டால் காண்ட்ராக்ட் எடுத்துச் செய்யும் இடங்களில் இன்னும் கூட லாபம் கிடைக்கும். ஆனால், கவிதாவுக்காகச் சேமித்து வைத்திருந்த பணத்திலே கை வைப்பதா என்று யோசித்தான். அப்போது ஜனனி அவனிடம் நெருங்கி அமர்ந்தாள்.

'பிரபு, உங்ககிட்டே நான் ஒரு விஷயம் மறைச்சுட்டேன்.' என்றாள்.

அவன் கேள்விக்குறியுடன் பார்த்தான். 'நாம தீபாவளிக்கு வீட்டுக்குப் போனமில்ல.. அப்ப பாட்டி....' என்று எழுந்து போனாள். ஒரு சிறு மூட்டையைக் கொண்டு வந்து அவன் கையில் திணித்தாள். அவன் பிரித்துப் பார்த்தான். அதில் பவுன் காசுகள் நிறைய இருந்தன.

'இதெல்லாம் என் பர்த்டேவுக்கு... அந்த விசேஷம், இந்த விசேஷம்னு எனக்கு பிரசன்டா வந்தது. எல்லாம் பாட்டி தனியா எடுத்து வச்சு, இப்ப எனக்குக் கொடுத்தாங்க. அன்பழகனை எப்படியோ சமாளி.. ஆனா திருப்பி மட்டும் குடுத்திடாதே. அப்படின்னுட்டாங்க.' என்றாள்.

அவன் முகத்தில் கோபம் தெரிந்தது. ஆனால், ஒரு கணம் அவளை வெறித்துப் பார்த்தவன், அவள் முகம் பார்த்தவுடன் மனம் கனிந்து விட்டான். ஒரு பெருமூச்சு விட்டான்.

'ஜனனி. நீயும் உங்க பாட்டியும் பயங்கரமான ஆளுங்க!' என்று சிரித்தான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். 'நாப்பத்தைஞ்சு பவுன் இருக்கு. அதனாலே கவிதாவுக்கு நகை சேர்க்கணும்னு கவலைப்பட வேண்டாம்,' என்றாள்.

அவன் ஏதோ சொல்ல ஆரம்பிக்கும் முன், அவளே பேசினாள். 'சரி... சரி... திருப்பிக் குடுங்க. முதல்ல நம்ம பொறுப்புக்கள் எல்லாம் தீர்ந்தா, அதுக்கப்புறம் வாங்கிக் குடுத்தா... நான் வேண்டாம்னா சொல்லப் போறேன்,' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. படுக்கையில் சாய்ந்து கொண்டான். அவளும் சாய்ந்து கொண்டாள்.

'ஜனனி...! உனக்கென்ன இப்படி வாரிக்கொடுக்கணும்னு தலையெழுத்தா...!' என்றான்.

'எல்லாம் சுயநலம்தான்,' என்றாள். அவன் பார்வை மாறியது. முகத்தில் லேசாகக் கிறக்கம் ஏறியது.

'என்ன சுயநலம்...?' என்றான்.

'வயசுக்கு மீறிப் பொறுப்பு பொறுப்புன்னு அலையறீங்க. கொஞ்சம் சுமையைக் குறைச்சா ஃப்ரீயா... இருப்பீங்க... நீங்க சந்தோஷமா இருந்தா...' என்னும்போதே, அவன் லேசாகச் சிரித்து, அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.

'நீங்க சந்தோஷமா இருப்பீங்க...' என்று சிரித்தான். சற்று நேரம் அவளைக் கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு நிமிர்ந்து..

'அதென்ன எப்பப் பாரு, வயசுக்கு மீறி வயசுக்கு மீறி



அப்படிங்கிறே... என்ன அர்த்தம்? வயசுக்குத் தகுந்த மாதிரி இர்றா..ங்கறியா என்ன? என்றான், குழைந்த குரலில்.

அவள் குறும்பாகச் சிரித்தாள்.

'அப்படி யெல்லாம் நான் மரியாதைக் குறைவா சொல்லலை...!' என்றாள்.

பிறகு, 'இருங்கன்னு சொன்னேன்!' என்றாள்.

'ஜனனி...!' என்று குழைந்தபடி இழைந்தான். 'எப்படியும் நீ நெனச்சதை நடத்துவே... நடத்து. ஆனா என்னோட துறையிலே பயன்படுத்தற மாதிரி சர்க்யூட் சிஸ்டம் அது இதுன்னு நிறைய ஐடியாஸ் வச்சிருக்கேன்,' என்றான்.

'தாராளமா செய்ங்க,' என்றாள்.

'வெறும் காண்ட்ராக்ட் மட்டும் இல்லே. அதுக்கு மேலே போகணும்!' என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

அவனே தொடர்ந்து, 'சரி. என்னை முதலாளியாக்கிப் பார்க்கணும்னு முடிவு செஞ்சுட்டே,' என்றான்.

'அப்புறம்...' என்றாள்.

'எப்புறம்?' என்று அவன் கிண்டல் செய்வதையும் கவனிக்காதவள் போல் –

'நான் வர்ற திங்கட் கிழமையிலிருந்து... ஆபிஸ் போறேன்...' என்றாள்.

'போகலாம். இப்ப எல்லாத்தையும் விட்டு வேற இடத்துக்கு நம்ம உலகத்துக்கு வருவியாம்...' என்ற அவன் குரல் தேய்ந்து கொண்டே வந்தது.

அவளும் மௌனத்தில் கரைந்தாள். வேறொரு இடத்தில் எரிமலை ஒன்று குமுறிக் கொண்டிருக்கிறது என்பதை அறியாமலே.

## 14

ஜனனி அப்பாவின் அலுவலகத்துக்குப் போக ஆரம்பித்திருந்தாள்.

பாட்டி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அன்பழகனுக்குப் பெரிய இரண்டு காம்ப்ளெக்ஸ்களில் மின்சாரத் தொடர்புக்கான ஒப்பந்தம் வாங்கிக் கொடுத்தார். அதற்குப் பிறகுதான் கடையை ஆரம்பிக்க அன்பழகன் ஒத்துக் கொண்டான்.

கடை திறப்பு விழாவை மிகவும் எளிமையாக வைத்துக் கொண்டார்கள்.

நாகமாணிக்கம் அன்றுதான் முதன் முறையாக அவர்கள் வீட்டுக்கு வந்தார். தனது அடுத்த கட்டிடத்துக்கு அவர்கள் கடையிலேயே பொருட்கள் வாங்குவதாகச் சொல்லி முன் பணம் கொடுத்தார்.

பாட்டி பிற்பகலில் வந்தார். அவரும் வீட்டுக்குத் தேவை என்று பொருட்கள் வாங்கிக் கொண்டார்.

அன்பழகன் ஒரு பைக் தவணை முறையில் வாங்கிக் கொண்டான். தான் அலுவலகத்திலிருந்து கார் கொடுக்கிறேன் என்று சொன்னதை மறுத்துவிட்டுக் கணவனின் பைக்கிலேயே வந்து இறங்குகிற மகளைப் பெருமையாகவே எடுத்துக் கொண்டார், நாகமாணிக்கம். ஆனால் ஜனனியை அலுவலகத்துக்கு வரச்சொல்லி இருப்பதையோ, அன்பழகன் கடைத் திறப்பு விழாவிற்குத் தான் போய் வந்ததையோ அவர் ஜெகதாவுக்குச் சொல்லவில்லை... சொல்லக் கூடாது என்று



நினைக்கவில்லை. ஆனால் ஏனோ சொல்லவும் தோன்ற வில்லை.

- - - - -

ஒரு மாதம் போயிருக்கும்.

ஒரு நாள் மாலை...

நாகமாணிக்கம் தன் அறைக்கு வந்து உடை மாற்றிக் கொண்டிருக்கும் போது ஜெகதா வேகமாக வந்தாள்.

'ஜனனி... ஆபிசுக்கு வராளாமே!' என்றாள்.

'ஆமா..' என்றார், நாகமாணிக்கம் -அலட்டிக் கொள்ளாமல்.

'நீங்க அன்பழகனுடைய கடைத் திறப்பு விழாவுக்குப் போயிருந்தீங்களாமே!' என்று காட்டமாகக் கேட்டாள்.

'ஆமா..' என்றார் அலட்டிக் கொள்ளாமல்.

'ஏன் எனக்குச் சொல்லலை?' என்றாள் கோபமாக.

'சொல்லணும்னு தோணல்லை..' என்றார் நாகமாணிக்கம்.

'அதுதான்... ஏன்னு..கேக்கறேன்..?' என்றாள் ஜெகதா.

நாகமாணிக்கம் நின்றார். ஆச்சரியமாகப் பார்த்தார். ஜெகதா இதுவரை இப்படி யெல்லாம் பேசி அவர் பார்த்ததே யில்லை... அழுத்தமாகவே இருப்பவள் இன்றைக்கு ஏன் இப்படி வெடிக்கிறாள்?

'என்ன ஜெகதா, என்ன கேக்கறே நீ? ஜனனி முந்தியே ஆபிசுக்கு வந்துட்டிருந்தவதானே... மறுபடியும் வர்றா... மாப்பிள்ளை கடைத்திறப்பை ஒன்னும் ஒரு பெரிய விழாவா நடத்தலே. என்னை மட்டும்தான் கூப்பிட்டிருந்தார். எப்படி மறுக்கறது? போனேன்... இதிலென்ன இருக்கு?' என்றார்.

'குடும்பம் சம்பந்தப்பட்ட எதுவுமே எனக்குத் தெரியலே. அப்ப நான் யார் இந்த வீட்டிலே?' என்றாள் ஜெகதா.

நாகமாணிக்கம் அன்றைக்கு நல்ல மூடில் இருந்தார் போலும். அவள் கோபத்தைப் பார்த்துச் சிரித்தார்.

'நீ யார் ஜெகதா... நீதான் முடிவு பண்ணணும்...' என்றபடி நகர்ந்தார்.

'அப்ப ஜனனி என் மகள் இல்லையா?' என்றாள்.

நாகமாணிக்கம் நின்றார். அவளை நோக்கி நேர்பார்வை பார்த்தார். 'ம்ஹூம்... அப்படியா? ஜனனி உன் மகளா என்ன? அப்ப ஏன் நீ எனக்கும் அவளுக்கும் இடையே இருந்த விரிசலை பாட்ச் அப் பண்ண முயற்சிக்கவே இல்லை?' என்றார், கிண்டலாக! போய்விட்டார்.

ஜெகதா விக்கித்துப் போய் நின்றுவிட்டாள். ஆனால், அடங்கவில்லை.

- - - - -

அன்றிரவு.

பாட்டி ஹால் சோபாவில் அமர்ந்து ஏதோ படம் பார்த்துக் கொண்டிருந்தார்.

வேகமாக வந்து டிவியை ஆஃப் செய்தாள். பிறகு பாட்டியிடம், 'நான் இந்த வீட்டிலே யாரு?' என்றாள்.

பாட்டி திகைத்துப் போனார்.

'என்ன ஜெகதா, ஏன் இப்படிக் கோபப் படறே?' என்றார்.

ஜெகதா கேட்டுக் கொள்கிற மன நிலையில் இருக்கவில்லை. கையில் கிடைத்ததெல்லாம் வீசி எறிந்தாள். வெகுநேரம் கத்தினாள். கடைசியாக, 'எல்லா வீட்டுப் பொம்பளை மாதிரி... என்னை நிம்மதியா இருக்க விட்டியா... கிழவி... காட்டுக்குப் போக வேண்டிய வயசல... இன்னும் வீட்டு ராஜ்ஜியம் வேண்டியிருக்கா. இடுப்புல சாவிக் கொத்து... தேவையா? ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் உன் மகனுக்குச்



சோத்தில... விஷம் வச்சுக் கொன்னுடுறேன்... பாரு...' என்று கத்திய அவளைப் பாட்டி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிறகு சட்டென்று தன் இடுப்பிலே இருந்த சாவிக் கொத்தை எடுத்துத் தரையில் வீசினார்.

'இந்தா, வச்சுக்க... என் மகனை உயிரோட இருக்க விடு. ஜனனியை நிம்மதியா வாழ விடு!' என்று உச்ச ஸ்தாயியில் கத்தியவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தார்.

சரியாக அந்த நேரம் பார்த்து உள்ளே நுழைந்த நாகமாணிக்கம் ஓடிப்போய் அம்மாவைத் தாங்கிக் கொண்டார்.

இன்டென்சிவ் கேரில் வைத்தார்கள். இரண்டு நாள் கழித்து விழித்தாள்.

'என்னைப் பண்ணை வீட்டுக்குக் கொண்டுபோயிடு...!' என்றார். கொண்டு போனார்கள்.

ஜெகதா கூடப் பயந்து போனாள். பணிவிடை செய்ய முற்பட்டாள்.

'அவளை அந்தப் பக்கம் போகச் சொல்லு.' என்று டிரைவர் பாலையாவிடம் சைகையால் சொல்லி, அந்தப் பக்கம் போகச் செய்தார், பாட்டி.

ஜனனி விக்கி விக்கி யழுதவளாய்ப் பாட்டிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள்.

அன்பழகனும் உடன் இருந்தான். நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்வதற்கு முன் நடந்த எதையும் ஜெகதா முழுமையாகச் சொல்லவில்லை. திடீரென்று நிகழ்ந்த மாதிரியே சொன்னாள். பேச முடியாமல் இருந்த பாட்டி தன் அந்திம நேரத்தைச் சரியாக உணர்ந்து கொண்டு மகனைச் சைகையால் அழைத்தார்.

அவர் கையைப் பிடித்து அன்பழகனின் கையில் வைத்துக் கொடுத்துவிட்டுக் கண்களை மூடினார்.

ஜனனிக்கும் அப்பாவுக்கும் அதன் பொருள் புரியவில்லை என்ற போதும். அன்பழகனுக்கு முழுமையாகப் புரிந்தது.

'என்னமோ.. தெரியல.. சாவிக் கொத்தை நீட்டினாங்க. என்னமோ சத்தினாங்க... நான் போறதுக்குள்ளே விழுந்திட்டாங்க.' என்று ஒரேயடியாக அடித்து விட்டாள் ஜெகதா.

பாட்டி இறந்ததை விட. கைக்குச் சாவிக் கொத்து வந்ததுதான் அவளை 'ஆட்டி வைத்தது.

சடங்குகள் ஆரம்பிக்கும்போதே மெதுவாக ஜனனியை ஓரம் கட்ட ஆரம்பித்தாள். இது எதையும் கவனிக்கிற மனநிலையில் ஜனனி இருக்கவில்லை. துக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தாள்.

அதோடு நில்லாமல் ஜெகதா. ஒரு காரியம் செய்தாள். அன்பழகனை அழைத்தாள்.

'ஏனுங்க மாப்ளே! இழவுக்கு நீங்க நெறய சடங்கு செய்யணுமே. செலவு நிறைய ஆகுமே! நா வேண்ணா எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லிக் கொஞ்சம் பணம் வாங்கித் தரட்டுமா?' என்றாள்.

அன்பழகன் பதில் சொல்ல வாயெடுக்கும் முன். அங்கே வந்த செண்பகம் கண்கள் சிவக்க அவளைப் பார்த்தாள்.

'பாரு ஜெகதா.. நம்ம ஊருல கேக்கறதுக்கு நாதியில்லாம இருந்தவ நீ. அப்ப பாட்டிதான் உன்னையும் கொண்டு வந்து இந்த வீட்ல மனுஷியாக்கினா. ஆனா நீ உண்ட வீட்டுக்கே ரெண்டகம் செஞ்சுட்டே.. பாட்டி சாவுக்கும் நீதான் காரணம்ன்னு



நா நெனைக்கிறேன். பாரு ஜெகதா. சாது மிரண்டா காடு கொள்ளாதுன்னு கேள்விப் பட்டிருக்கியா. என் மருமகளையோ என் மகனையோ ஏதாவது அவமானப்படுத்த முயற்சி பண்ணினே. நான் சும்மா இருக்க மாட்டேன். அப்புறம் உன் இடுப்பில சாவிக் கொத்து தொங்க முடியாம போகும். ஜாக்கிரதை!' என்றாள்.

ஜெகதா அதிர்ந்து போய் நின்றாள்.

அதற்குப் பிறகு செண்பகம் முழுமையாக முன்னின்று சடங்குகளை மேற்பார்வையிட்டதோடு. ஜனனிக்கு எந்தத் தொந்தரவும் இல்லாமல் அனைத்துச் சடங்குகளுக்கும் தாராளமாகச் செலவு செய்து தன் மனைவியின் மானம் காப்பாற்றுவதைப் பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அன்பழகன்.

- - - - -

பாட்டியின் மறைவு எல்லாரையும் வெகுவாகப் பாதித்திருந்தது.

ஜனனி நினைத்து நினைத்து அழுதாள். அன்பழகனே கூட அவர் மறைவைப் பெரிய இழப்பாக உணர்ந்தான். ஒரு தாயாகத் தன் மனைவியை வளர்த்தவர் என்பதை அறிந்திருந்ததால், ஜனனியின் துக்கம் முழுமையாகப் புரிந்தது. அவளைத் தேற்றுவதற்கான எல்லா முயற்சிகளும் செய்தான்.

தினமும் மாலையில் மாமனார் வீட்டுக்குச் சென்று அவரைப் பார்த்து வந்தான். 'சீக்கிரம் ஆபிஸுக்குப் போக ஆரம்பியுங்க மாமா.. அப்பதான்.. மனசு கொஞ்சம் தேறும்..' என்று அலுவலகம் வரச் செய்தான். ஜனனியையும் அனுப்பி வைத்தான்.

'மாமா சாப்பிட்டீங்களா?' என்று அடிக்கடி போன் செய்து கேட்டுக் கொண்டான். இன்னொரு வேலையும் செய்தான்.

'ஜனனி, நீ இனிமே பகல் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வரவேண்டாம். அங்கயே மாமாவோட சாப்பிடு. நானும் முடிஞ்சா வரேன்' என்று ஒரு ஏற்பாடு செய்தான். இதனால் அவர் சரியாகச் சாப்பிடுகிறாரா என்று கவனித்துக் கொள்ள முடியும் என்று நினைத்தான். அதையே செயல்படுத்தினார்கள்.

நாகமாணிக்கம் மெதுவாகத் தேறிக் கொண்டிருந்தார். இத்தனை துக்கத்திலும் இவர் இன்னொரு விசித்திரமான எண்ணத்துக்கு ஆட்பட்டவராய் இருந்தார். அது தன் மனைவி ஜெகதாவுக்குப் பாட்டியின் இழப்பில் பெரிதாகத் துக்கம் ஏற்படவில்லை என்பதுதான். ஒருவேளை வீட்டு நிர்வாகம் தன் கைக்கு வந்து விட்டது என்ற திருப்தியாயிருக்கும் என்று எண்ணிக் கொண்டார்.

அன்று...

அலுவலகத்திலிருந்து டிரைவர் பாலையாவிடம் அம்மாவைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டு வந்தார். இறுதியாக ஒரு பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

'எல்லாம் சரி. எல்லாத்தையும் சொன்ன அம்மா... இந்த அன்பழகனுக்கு ஏன் ஜனனியைக் கொடுக்கனும்னு யார் முடிவு செஞ்சாங்கறதை மட்டும் சொல்லாமலேயே போயிட்டாங்க...' என்றார்.

'அது யாரும் முடிவு செய்யலீங்க. பாட்டியம்மாதான். மாப்பிள்ளையைத் தனியாகக் கூட்டிட்டுப் போயிக் கெஞ்சிக் கேட்டுக் கல்யாணத்துக்கு ஒத்துக்க வைச்சாங்க!' என்றார் பாலையா.

'அதுதான் ஏன்னு புரியலை?' என்றார், நாகமாணிக்கம்.

'அது ஏன்னு தெரியலை. ஆனா நாந்தான் இந்த ஏற்பாடு செஞ்சேன்னு மகன்கிட்டே என் காலம் உள்ளவரைக்கும் சொல்லக் கூடாதுன்னு எங்கிட்டே சத்தியம் வாங்கிட்டாங்க. மகனுக்குக் காரணம் தெரிஞ்சா அவன் வாழ்க்கை பாழாயிடும்னு சொன்னாங்க. அதுவும் ஏன்னு தெரியலே...' என்றார், பாலையா - யதார்த்தமாக.



நாகமாணிக்கம் அன்றிரவெல்லாம் சிந்தனையிலாழ்ந்தார். அதிகம் பேசவில்லை... அன்றொரு நாள், அம்மாவிடம்,

'ஏம்மா சும்மா ஜெகதாவைக் கரிச்சுக் கொட்டறே? அவ பார்த்த மாப்பிள்ளை அப்படிச் செய்தால் அதுக்கு அவ என்ன செய்வா?' என்றார்.

எப்போதும் அமைதியாகப் பேசுகிற அம்மா... அன்றைக்கு -

'அவளா? அவ யாருன்னு நெனச்சே? ஒரு கேள்வி அவகிட்டே கேளு. ஜனனிக்குப் போட்டமே ஒரு மூணு லட்ச ரூபா. அது மாதிரி இவளுக்கும் போட்டமே. அது என்னாச்சுன்னு கேளு!' என்றார்.

அவர் அலட்டிக் கொள்ளாமல், 'அட போம்மா. ஒருத்தருக்குக் கொடுத்ததுக்கப்புறம் அதைப் பத்திக் கேக்கறது நாகரீகமில்லை...!' என்றவுடன் அறைக்குப் புறப்பட்டவர், திரும்பி... 'ஏம்மா அப்படிச் சொல்றே?' என்றார்.

அதற்குள் பாட்டி சுதாரித்துக் கொண்டார். மகனுடைய வாழ்க்கையைக் கெடுக்கவா நான் இத்தனை பாடுபட்டேன் என்று சொல்லிக் கொண்டார் போலும்.

'ஒண்ணுமில்லடா.' என்று சொல்லி விட்டார்.

நாகமாணிக்கத்துக்கு அது நினைவுக்கு வந்தது. மனதுக்குள் ஒரு தீர்மானம் செய்து கொண்டார். அந்தத் தீர்மானத்தால் அவருக்கு எவ்வளவு வேதனைகள் காத்திருக்கின்றன என்று அன்று அவருக்குத் தெரியவில்லை.

## 15

'உங்களுக்குப் பிடித்த கொத்துமல்லிச் சட்னி...' என்று புன்னகையுடன் தனக்குப் பரிமாறுகிற ஜெகதாவை நிமிர்ந்து பார்த்தார்.

'அம்மாவுக்குக் கூட ரொம்பப் பிடிக்கும்!' என்றார் ஆழ்ந்த குரலில்.

ஜெகதா அவரிடம் நேருக்கு நேராக முகம் காட்டாமல், திரும்பியபடி 'ஆமா... பாட்டிம்மாவுக்கு ரொம்பப் பிடிக்கும்...' என்றாள்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் நடுவில் நாக மாணிக்கம், 'ஜெகதா...' என்றார்.

'ம்...'

'நமக்கு ஒரு பெரிய காண்ட்ராக்ட் வந்திருக்கு. கோடிக் கணக்கில் இன்வெஸ்ட்மென்ட்... நிறையப் பணம் தேவைப்படுது. உனக்கென்று ஒரு மூணு லட்ச ரூபாய் டெபாசிட் போட்டமே. அதைக் கூட வித்ட்ரா பண்ண வேண்டியிருக்கும் போல இருக்கு.' என்றார்.

ஜெகதா ஒரு கணம் விக்கித்துப் போய் நின்றாள். பிறகு மெதுவாக மீட்டுக்கொண்டு, 'ஏங்க, நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க. நம்ம மருமகனும் பெரிய அளவிலே சொத்துக்கு ஆசைப்படறவனா இல்லை. யாருக்காக இனி நீங்க அலைஞ்சு... அலைஞ்சு... சம்பாதிக்கணும்...?' என்றாள்.

'ஏன் அப்படி சொல்றே... நாளைக்குப் பேரன் பேத்திகளுக்குக் கொடுக்கலாமே!' என்றார். 'அதை விடு... நீ அமௌன்ட் தரியா... என்ன...? அதைச் சொல்லு.' என்றார்.



'அது... அது...' என்று தடுமாறினாள்.

'செலவு பண்ணிட்டியோ...?'

'ஆமாங்க... அப்பப்ப கொஞ்சம் கொஞ்சமா... எடுத்துச் செலவு செஞ்சுட்டேன். எனக்கென்று குடுத்ததாச்சே. கேட்க மாட்டீங்கன்னு நெனச்சேன்.' என்று தடுமாறினாள் ஜெகதா.

நாகமாணிக்கம் பெரிதாக ஒன்றும் கண்டு கொள்ளாதவர் போல், 'சரி சரி, விடு... நான் வேற ஏற்பாடு செஞ்சுக்கறேன்.' என்று புறப்பட்டார்.

ஜெகதா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

- - - - -

அன்று மாலை

இன்னொரு விஷயமும் நடந்தது.

ஜெகதா கோவிலுக்குப் போகிறேன் என்று போயிருந்தாள்.

நாகமாணிக்கம் தோட்டக்காரனிடம் பூவாளியை வாங்கிச் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்.

அவர் நிற்பதை அறியாத இரண்டு வேலைக்காரப் பெண்கள் சுதந்திரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'என்ன இருந்தாலும்... பெரியம்மாவும் ஜனனியம்மாவும் இல்லாம வீடே நல்லால்லே...!' என்றாள் ஒருத்தி.

'ஆமா, இந்தச் சின்னம்மா நாட்டாமை தாங்க முடியல... பெரியம்மா ஒரு நேரம் திட்டினாலும் நம்ம நல்லது கெட்டதுக்குக் கை கொடுப்பாங்க. இன்னொண்ணு தெரியுமா? பெரியம்மாவுக்கு உடம்பு சரியில்லாமப் போன அன்னைக்கு இந்த ஜெகதாம்மா ஒரே சண்டை. தெரியுமா?' என்றாள் மற்றவள்.

'ம்... அப்படியா? அந்த நேரம் நான் ஏதோ எடுக்கப் போயிருந்தேன்.'

'அட... ஆமாங்கரேன்... கிழவி கிழவின்னு இந்த ஜெகதாம்மா பெரியம்மாவை என்ன பேச்சுப் பேசிடுச்சு தெரியுமா? ஒரு நாளைக்கு இல்லாட்டா ஒரு நாளைக்கு உன் மகனுக்குச் சோத்தில விஷம் வைக்கரேன்னு சொல்லிச்சு, இந்தம்மா.'

இந்த வார்த்தைகள் காதில் விழுந்தவுடன் நாகமாணிக்கம் வெருவாகத் திடுக்கிட்டுப் போனார். கவனிக்கத் தொடங்கினார்.

'அப்புறம்?' என்றாள்.

'அப்புறம் என்னத்தை? 'என்ற மகனை உசிரோட இருக்க விடு. என்ற பேத்தியை நிம்மதியா வாழ விடு. இந்தச் சாவிக் கொத்துதானே வேணும். வச்சுக்க!'ன்னு வீசினவங்கதான். நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு சாஞ்சாங்க!' என்றாள்.

அதிர்ச்சியில் தாக்கப்பட்ட நாகமாணிக்கம் சுவடே இல்லாமல் நகர்ந்தார். அறைக்குப் போய் வெகு நேரம் வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

ஜெகதாவிடமும் பேசவில்லை. ஜெகதாவுக்கு அவரிடம் எதுவும் கேட்கப் பயமாய் இருந்தது. பண விஷயமாய்க் காலையில் அவர் கேட்டதில் இருந்தே சற்றுப் பயந்து போயிருந்தாள். அதனால், அவரைத் தொந்தரவு செய்யாமல் சற்று ஒதுங்கி இருந்து கொண்டாள்.

இரவு ஒன்பது மணிவாக்கில் டிரைவர் பாலையாவை வரவழைத்த நாகமாணிக்கம் தனியாகப் பேசினார்.

'பாலையா... அந்த பிரைவேட் டிடெக்டிவ் ராகவேந்திரனைக் கூட்டிட்டு வா...' என்றார்.

பாலையா அழைத்துக் கொண்டு வந்தார்.



'பாருப்பா, எவ்வளவு செலவானாலும் சரி, என் பொண்ணுக்குன்னு நிச்சயம் செய்து கல்யாணத்தன்னிக்குக் காணாமல் போனானே நீலகண்டன்... அவனைக் கண்டு பிடிச்சுக் கொண்டு வா!' என்றார்.

அதற்குப் பிறகுதான் படுக்கைக்கு உறங்கச் சென்றார்.

- - - -

பிற்பகல்...

உணவு நேரத்திற்கு முன்பு மகளை அழைத்து நாகமாணிக்கம்,

'அம்மா, மாப்பிள்ளையையும் வரச் சொல்லு எல்லாரும் ஒண்ணாச் சாப்பிடலாம்,' என்றார்.

'சரிப்பா!' என்று சந்தோஷமாகப் போகிற மகளை ஆழமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்பழகன் இப்போதெல்லாம் அவரிடம் இயல்பாகப் பேசத் துவங்கியிருந்தான். ஜனனியை அவன் கிண்டல் செய்வதையும், அவள் திரும்பக் கிண்டல் செய்வதையும் அவர் ரசித்துக் கொள்வார்.

'மாமா, நேத்திக்கு உங்க மக, 'இத பாருங்க, அல்வா செஞ்சேன்!'னு கொண்டு வந்து கொடுத்தா. நானும் அவ முகத்தைப் பார்த்துகிட்டே முழுங்கித் தள்றேன். பாதியில சந்தேகம் வந்துடுச்சு... ஏன்னா... அதில வெங்காயம், மிளகாய் எல்லாம் இருந்தது. என்ன ஜனனி இது...ங்கறேன். ஓ சாரி! இது அல்வா இல்லை உப்புமாங்கறா.

'நானும் சரி சரி ரெண்டுக்கும் ஒண்ணும் பெரிய வித்தியாசமில்லை. நீ செஞ்சிருக்கேன்னா எனக்கு ஒண்ணும் தெரியப் போறதுமில்லேன்னேன். அதுக்கு எதுக்கு முறைக்கறா?' என்று இடிஇடியென்று சிரித்தான்.

ஜனனி இப்போது நிஜமாகவே முறைத்தாள். 'ஏய்... முறைக்காதே... எங்க மாமனார் இருக்கும்போதே இப்படி முறைக்கிறயே. இது நியாயமா?' என்று அவன் செய்கிற கிண்டலை அவரும் ரசித்துக் கொண்டார்.

'பாவம்மா. மாப்பிள்ளை ரொம்ப பயப்படறார். விட்டிரும்மா!' என்று அவரும் சேர்ந்து கொள்வார்.

'அப்பா. நீங்களுமா!' என்று சிரிக்கிற மகளை மருமகன் சமாதானம் செய்ய விட்டு விட்டு. அந்தப் பக்கம் நகர்ந்து விடுவார்.

மனைவியை லேசாகத் தோளில் இடித்துவிட்டுப் போவது. கன்னத்தைக் கிள்ளி விடுவது என்று அவனது ரகசியச் சீண்டல்களைக் கண்டும் காணாதவர் போல் போய்விடுவார். முகம் சிவக்க அவனுக்கு விடை கொடுத்து விட்டு வருகிற மகளைப் பார்க்கும்போதெல்லாம் மனசு நிறைந்து விடும் அவருக்கு.

இன்றைக்கு எதையும் ரசிக்கிற மன நிலையில் அவர் இருக்கவில்லை. அன்பழகன் அதைக் கவனித்தான். ஆனால். சாப்பிட்டு முடித்தவுடன்...

'மாப்பிள்ளே. ஜனனிக்கு ஒரு நாலு நாள் லீவு கொடுக்கறேன். நீங்களும். ஜனனியும் கொடைக்கானல் போயிட்டு வாங்க.' என்றார்.

'அப்பா...' என்று இழுத்த மகளிடம். 'போயிட்டு வாம்மா!' என்றார்.

அன்பழகன் ஏதோ சொல்ல வாயெடுக்க. 'ஒண்ணும் பேச வேண்டாம் மாப்பிள்ளை. போயிட்டு வாங்க.' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

அவர்களுக்கும் அதற்குப் பிறகு பேச ஒன்றுமேயிருக்க வில்லை. அன்று மாலையே கிளம்பினார்கள்.



அடுத்த நாள் காலை

பத்துமணியளவில் அவருக்கு ராகவேந்திரனிடமிருந்து ஃபோன் வந்தது.

'ட்ரேஸ் பண்ணிட்டோம் சார்... எதுவும் விசாரிக்கணுமா?'

'வேண்டாம். அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் கூட்டிட்டு வந்துடுங்க. எப்ப இங்க வருவீங்க?'

'இன்னைக்குச் சாயங்காலம் சரியா ஏழு மணிக்கு வந்திடுவோம்,' என்றான்.

'நம்ம கெஸ்ட் ஹவுஸ் வந்துடுங்க.' என்று ஃபோனை வைத்தார்.

\- - - - -

கொடைக்கானல்...

கெஸ்ட் ஹவுசில்...

அன்பழகன் தன் மனைவியின் அருகாமையின் இனிமையை உணர்ந்தவனாக அவளருகில் ஒண்டிக் கொண்டான்.

'நம்ம மாமனார் ரொம்ப மோசம். ஜனனி. இவ்வளவு லேட்டா ஹனிமூன் அனுப்பறார்.' என்று சிரித்துக் கொண்டிருந்தான்.

ஜனனி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

'நீங்க வேற. அன்பு. அப்பா பிடிவாதம் உங்களுக்குத் தெரியாது. ஆனா இவ்வளவு தூரம் மனசு மாறி உங்களை... நம்ம கல்யாணத்தை ஏத்துக்கிட்டதே பெரிய விஷயம்.' என்றாள்.

'அதென்னமோ அப்படித்தான். அது கிடக்கட்டும். ரொம்ப நாள் கழிச்சு நிம்மதியா பிரைவசி கிடைச்சிருக்கு. இல்லாட்டா பேச்சு சத்தம் வெளியே கேட்டுடுமோ... சிரிப்புச் சத்தம்

கேட்டுடுமோன்னு நீ நடுங்கிட்டிருப்பே. இங்க எந்தப் பயமும் இல்லை.' என்று சொல்கையில்..

'இன்னொன்னை விட்டுட்டீங்களே!'

'எதை..'

'எப்ப இந்த பாடிப் பய ஓடி வருவானோ..ன்னு. அந்தப் பயம் வேற!' என்று ஜனனி சிரித்தாள்.

'ஆமா, அவன் வேற!' என்று அன்பழகன் சிரித்தான். பிறகு மனைவியை இறுக அணைத்துக் கொண்டு, 'இங்க எந்தப் பயமும் இல்லாமல் ஜனனி தேவியார்.. முழுக்க முழுக்கக் கருணை வைக்கணும்!' என்று முத்திரைகள் பதிக்கிற அவனிடம் ஜனனி விருப்பத்துடன் அடைக்கலமாகிக் கொண்டாள்.

நள்ளிரவில் விழித்தாள். கணவனைக் காணாமல் திகைத்தாள்.

அவன் ஜன்னலருகில் நின்று இருளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். 'என்னடீங்க?' என்றாள்.

'ஜனனி, என் உள் மனசு சொல்லுது. உங்கப்பா ஏதோ காரணமாத்தான் நம்மளை வெளியூர் அனுப்பிச்சிருக்கார்னு..'

'ஐயோ, சார், சும்மா ஏதாவது கற்பனை பண்ணிக்காதீங்க. வந்து படுங்க.' என்று இழுத்துக் கொண்டு போனாள் அவள்.

அந்த நான்கு நாட்களும் உலகம் மறந்து தங்களுக்காகவே செலவழித்து விட்டுப் புறப்பட்டார்கள் - என்ன காத்திருக்கிறதென்று அறியாமல்..



# 16

நாகமாணிக்கம் அதிர்ச்சியின் எல்லைக்கே போய் விட்டார்.

நீலகண்டன் முதலில் எதுவும் சொல்ல மறுத்தான். நாகமாணிக்கம் சற்றுத் துருவி விசாரித்துப் பார்த்துவிட்டுக் கோபத்தின் உச்சிக்கே போனார். அதைப் பார்த்துப் பயந்த அவன் -

'இல்லை, நான் ஏற்கெனவே ஒரு பெண்ணை விரும்பினேன். அதனால்தான். அப்படி ஓடிப்போனேன்.'

என்றவன், பொறி கலங்கினாற் போல் நின்றான். நாகமாணிக்கம் அப்படி ஒரு அறை விட்டார்.

'ஏண்டா, அதுக்குப் பலிகடா ஆகறதுக்கு நானும் என் மகளும்தான் கிடைச்சமா.. என்னடா நினைச்சே என்னை? இனிப் பாரு, நான் யாருன்னு காட்டறேன். நிம்மதியா இருந்துடுவியா நீ..' என்று அவர் பொருமிய பொருமலைக் கண்டு வெகுவாகப் பயந்து போனான். உள்ளடங்கிய குரலில்-

'உங்க குடும்பத்துலயே உங்களுக்கு எதிரியை வச்சுட்டு என்னை ஏன் மிரட்டறீங்க?' என்றான்.

அவர் திகைத்தார்.

அதற்குப் பிறகு அவன் சொன்ன விஷயங்களைக் கேட்டுத்தான் அவர் திகைத்துப் போனார். நடைபிணம் போல் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

வழக்கம் போல் அவரது ஷூவைக் கழற்ற வந்த ஜெகதாவிடமிருந்து விலகிக் கொண்டார்.

'மேல வா.. உங்கிட்ட பேசணும்.' என்றார், இரும்புக் குரலில்.

என்னவாக இருக்கும் என்ற பார்வையுடன் வந்த அவளிடம் சொன்னார்.

'ஜெகதா, ஊருக்காக, உற்றாருக்காக நீ இந்த வீட்டிலே இருக்கலாம். உனக்கும் எனக்கும் எல்லாம் முடிஞ்சு போச்சு.'

'ஏன் அப்படிச் சொல்றீங்க?' என்று பதட்டமான ஜெகதாவிடம் கை உயர்த்திக் காண்பித்தார் - போதும் என்பது போல.

'நீலகண்டனை வரவழைச்சு எல்லாம் தெரிஞ்சுக் கிட்டேன்.' என்றார்.

ஜெகதா நிஜமாகவே அச்சத்தின் விளிம்புக்கே சென்றாள். தன்னைக் கடந்து போகிற அவர் முதுகை வெறித்தபடி நடந்தாள். அறைக்குள் நுழைய முயன்றபோது, 'உன்னோட பொருட்களை யெல்லாம் எடுத்துகிட்டு அந்தப்புற அறையில தங்கிக்கோ. அவசியப் பட்டாலொழிய என் எதிரே வராதே.' என்றார்.

ஜெகதா ஒன்றும் பேசாமல் அறைக்குச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். நாலடி எடுத்து வைத்த ஜெகதா திரும்பி அவரைப் பார்த்து ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது, 'வேண்டாம் ஜெகதா. இந்த வீட்டில உனக்குக் கிடைச்ச தெல்லாம் அமுதம். அத்தனையும் நீ விஷமாக்கிக்கிட்டே' என்று முதுகைக் காட்டித் திரும்பிக் கொண்டார்.

அன்றையிலிருந்து நடக்கப் போகிற ஒவ்வொரு நடப்பும் மெது மெதுவாகத் தன்னை நடைபிணமாக ஆக்கப் போகிறது என்று ஜெகதாவுக்கு அன்றைக்குப் புரியவில்லை.

- - - - -



மறுநாள் காலை...

சமையலறைக்குள் நுழைந்த ஜெகதாவைச் சமையல்காரர் தடுத்தார்.

'அம்மா! உங்களுக்கு ஹை பிபியாம்.. ஒரு வேலையும் செய்யக் கூடாதாம். ஐயாவோட கட்டளை.' என்றார்.

சரியாக அந்த நேரம் நாகமாணிக்கம் இறங்கி வந்தார்.

'என்ன ஜெகதா, உன்னை நான் ரெஸ்ட் எடுக்கச் சொன்னேனே. இங்க வந்து என்ன பண்றே?' என்று லேசான புன்னகையுடன் சொல்லிவிட்டுக் காரை நோக்கிப் போனார்.

வேலைக்காரர்கள் காதுக்குப் பேச்சு எட்டாத தூரம் போனவுடன், ஜெகதா, 'என்னங்க சாப்பிடலயா?' என்றாள்.

'சாப்பிட்டாச்சே.. சமையல்காரர் பரிமாறச் சந்தோஷமாச் சாப்பிட்டேன்.'

'ஏங்க, நான் செஞ்சது தப்புதான். உட்கார்ந்து பேசுவோம்.. திருந்திக்க ஒரு வாய்ப்புக் குடுங்க.' என்றாள்.

அவர் திரும்பிப் பார்த்தார். அவர் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. 'திருத்திக்கற தப்பா நீ செஞ்சிருக்கறே? நீ எதுக்கு ஆசைப்பட்டே? சாவிக் கொத்துக்கு. அது கிடைச்சிடுச்சில்லே? வச்சுக்க.. சந்தோஷமாயிரு.' என்றார்.

அவள் விக்கித்துப் போய் நின்றாள். மறுபடியும் இரண்டு எட்டு வைத்தவர் திரும்ப வந்தார்.

'இனிமே பரிமார்றேன் கிரிமார்றேன்னு வந்து நிக்காதே. உன் கையால சாப்பிடறதுக்கு எனக்குப் பயமாயிருக்கு. ஏன்னா ஒரு நாளைக்கில்லா விட்டாலும் ஒரு நாள் எனக்கு விஷம் வைக்கிறவளாச்சே!' என்றார். நிற்காமல் நடந்து அந்தப் பரந்த லானைக் கடந்து அந்தப்புறம் பாலையா கொண்டு வந்து நிறுத்தியிருந்த காரில் ஏறிக் கொண்டார்.

எப்படி அறைக்கு வந்து சேர்ந்தோம் என்பதே ஜெகதாவுக்குப் புரியவில்லை. கடுமையான கோபத்தோடு நீலகண்டனுக்கு ஃபோன் செய்தாள்.

'அடப்பாவி! மூனு லட்ச ரூபா பணத்தையும் வாங்கிட்டு இப்படிக் காட்டிக் கொடுத்துட்டியே!' என்று கோபித்தாள்.

'அக்கா, நான் அப்பவே சொன்னேன். என்னை இதிலே இழுக்காதேன்னு. ஆனா நீ கேக்கலை. உங்க வீட்டுக்காரர், உயிரோட இருக்கனுமா வேண்டாமான்னு மிரட்டறார்... நான் என்ன பண்ண?' என்றான்.

---

'அக்கா, நான் இன்னொண்ணும் சொல்றேன். கேட்டுக்க. உங்க வீட்டுக்காரர் சாது மிரண்டா காடு கொள்ளாதுங்கற டைப்பா இருக்கிறார். மோதிக்காதே... பணிஞ்சு போ. அவ்வளவுதான். சொல்வேன்!' என்று எச்சரிக்கை வேறு செய்தான். ஜெகதா நொந்து போய் அமர்ந்தாள்.

அதற்குப் பிறகு வேலைக்காரர்கள் முன்னிலையில் அவரோடு பேசக் கிடைப்பதே பெரிய விஷயம் என்று அடங்கிக் கொண்டாள். அவருடைய அம்மா இருந்திருந்தால் அவரிடம் உண்மையைச் சொல்லி மன்னிப்பு வாங்கி யிருக்கலாம் என்றுகூடத் தோன்றியது.

ஒரு நாள் நாகமாணிக்கத்தின் அறை வாயிலில் இரவு ஒன்பது மணிக்கு மேல் நிழலாடக் கண்டு திரும்பினார்.

'என்ன?' என்றார் கடுமையாக.

'எனக்கு யாரிருக்கா? என்னோட சுகதுக்கங்களைப் பங்கு போட யாரு இருக்காங்க.. பாட்டியம்மா இருந்திருந்தா... கால்ல விழுந்து கதறியாவது மன்னிப்பு வாங்கியிருப்பேன். அவங்க நம்ம குடும்பம் இப்படி உடைபடறதைப் பார்த்துட்டு சும்மா



இருந்துருக்க மாட்டாங்க...!' என்று வெடித்து அழுகிற மனைவியைப் பார்த்தார்.

ஒரு கணம் முகத்தில் கனிவு தோன்றியது.

'உன்னோட பாட்டியம்மாவைப் பரலோகம் அனுப்பினதே நீதானே! இன்னைக்கு நம்ம குடும்பம்னு பேசறயே. அன்னைக்கு நம்ம குடும்பம்னு நெனச்சிருந்தா.. என் மக ஏதோ அநாதை மாதிரி எல்லாத் தப்பையும் தன் மேல சுமத்திக்கிட்டு வெளியே போக வேண்டி வந்திருக்குமா? எங்கம்மாவுக்கு எல்லாமே தெரிஞ்சதான் இருந்திருக்கு.. இன்னைக்கும் நான் ஏன் உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளிய தள்ளாம வச்சிருக்கேன் தெரியுமா? எல்லா உண்மையும் எனக்குத் தெரிஞ்சா நம்ம ரெண்டு பேரும் பிரிய வேண்டி வந்துரும்னு அம்மா ரொம்பக் கவலைப்பட்டிருக்காங்க.. அந்த ஆத்மா சாந்தி யடையட்டும்னுதான் வீட்டுக்குள்ளே எஜமானியா வச்சிருக்கேன்..' என்றார்.

ஜெகதா ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். பிறகு கசப்புடன் புன்னகைத்தாள். 'இதுக்கு நீங்க என்னை வெளியவே அனுப்பியிருக்கலாம்.' என்றாள்.

அவர் சற்றும் அலட்டிக் கொள்ளவில்லை. 'இருக்கறதும் போகறதும் உன் இஷ்டம்.' என்று சொல்லிவிட்டு, முகம் திருப்பிக் கொண்டார்.

வெகு நேரம் மௌனத்தில் கழிந்தது.

ஜெகதா நின்று பார்த்து விட்டுத் தனது அறைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

படுக்கையில் படுத்துக் கொண்டு கண்ணீர் விட்டபடி இருந்தாள். 'என்ன ஜென்மம் இந்தப் பெண் ஜென்மம்!' என்று விக்கி அழுத க்ஷணத்தில் உண்மையாகவே மயங்கி விழுந்தாள்.

தடாலென்று கட்டிலில் இருந்து அவள் விழுகிற சத்தம் கேட்டு நாகமாணிக்கம் எட்டிப் பார்த்தார்.

மனைவி பேச்சு மூச்சற்றுக் கிடப்பதைப் பார்த்துத் திகைத்துப் போய் விட்டார்.

\- - - - -

இரண்டு நாட்கள்...

ஐ.சி. யூனிட்டில் வைத்திருந்தார்கள். பிறகுதான் அறைக்குக் கொண்டு வந்தார்கள்.

'ஜெக்கிம்மா! ஜெக்கிம்மா!' என்று மகள் தவிப்பதைப் பார்த்து அவருக்கே பாவமாகிப் போனது.

அவருக்கும் மனது இளகிப்போனது. சற்றே இயல்பாகப் பேச ஆரம்பித்தார்.

வீட்டுக்கு வந்ததற்குப் பிறகும் இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தார். ஆனால் பழைய ஒட்டுதல் விட்டுப் போனது போனதுதான் என்பது ஜெகதாவுக்குப் புரிந்து விட்டது.

தினமும் ஒரு நடை அன்பழகனாவது ஜனனியாவது வந்து பார்த்துப் போனார்கள்.

ஒரு நாள் தங்கள் பங்களாவுக்கு முன்னால் இருந்த பச்சைப் புல்வெளியைப் பார்த்தபடி அமர்ந்திருந்த ஜெகதாவை ஆழமாகப் பார்த்தபடி அன்பழகன் எதிரில் வந்து அமர்ந்தான்.

'ஜெகதாக்கா, உன்னை என்னவோ அரிச்சுத் தின்னுட்டிருக்கு. ஒரு வேளை நீலகண்டன் பிரச்சினையை நான் மாமாகிட்டே சொல்லிடுவேனோன்னு பயப்படறியா? சொல்ல மாட்டேங்கா... பயப்படாதே' என்றான், பரிவுடன்.

ஜெகதா குலுங்கி யழுது விட்டாள். 'அன்பு, நீதான் எவ்வளவு பெருந்தன்மையானவன். பாட்டியம்மா எவ்வளவு



நல்லவங்க... இந்த ஜனனிதான் எவ்வளவு நல்ல பொண்ணு. நான் புரிஞ்சிக்காம போயிட்டேனே.' என்ற புலம்பினாள்.

அன்பழகன் முகம் இளகியது.

'போகட்டுங்கா... விடு. நான்தான் எல்லாப் பிரச்சினையையும் என் தோள்ல போட்டுக்கிட்டேனே... அம்மா சொன்ன மாதிரி நீயும் எங்க வீட்டுப் பொண்ணுதான். நான் உன்னை என் சொந்த அக்காவாத்தான் நெனைக்கிறேன்.' என்றான்.

அவள் முகம் இளகியது... 'செண்பகா சித்தி அப்படித்தான் சண்டையும் போடுவா... அன்பாவும் இருப்பா!' என்றாள்.

அன்பழகன் புன்னகைத்தான்.

'சரி சரி, பேச்சை மாத்தாதே...! நாங்க கொடைக்கானலுக்குப் போயிட்டு வந்ததுக்கப்புறமா... இங்க ஏதோ மாற்றம் தெரியுது. என்னக்கா விஷயம்? என்றான் வாஞ்சையாக.

அந்தக் கணம் ஜெகதா உடைந்தாள். மீண்டும் அழுதாள்.

அன்பழகன் மீண்டும், 'ஜெகதாக்கா, நா உனக்கு நன்றிக் கடன்பட்டிருக்கேன்க்கா. நீ ஏதேதோ... திட்டம் போடலேன்னா ஜனனி என் வாழ்க்கையில வந்திருப்பாளா? எனக்கு இவ்வளவு சந்தோஷம் கிடைச்சிருக்குமா?' என்றான்.

ஜெகதா முகம் துடைத்துக் கொண்டாள். பிறகு முகத்தை விரைப்பாக வைத்துக்கொண்டு -

'வேண்டாம் அன்பு, உனக்குத் தெரிஞ்சதுன்னு தெரிஞ்சா, இன்னும் நிலைமை மோசமாயிரும்.' என்றாள்.

'பரவாயில்லை, சொல்லு.' என்றான்.

அவள் மெல்லிய குரலில், 'உங்க மாமனாருக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு!' என்றாள்.

'ஓ...!' என்று அன்பழகன் ஒரு நிமிடம் திகைத்தான்.

பிறகு, 'எப்படி?' என்று கேட்டான்.

'நீலகண்டனைத் தேடிக் கண்டு பிடித்து விசாரிச்சிருக்காரு அவன் காட்டிக் கொடுத்துட்டான்.' என்றாள்.

அன்பழகனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. சங்கடமான அமைதியில் சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

'எல்லாம் விதி. சேரக் கூடாதவனோடு சேர்ந்து போடக் கூடாத திட்டம் போட்டு... எல்லாம் எதுக்கு? கடைசியில இதுக்குத்தான்... அவர் என்கூடப் பேசறதுகூட இல்லை.' என்றாள்.

'இல்லையே. நல்லாத்தானே பேசறாரு.' என்றான் வியப்புடன்.

'அதெல்லாம் மகள் முன்னாடி நாடகம். அவரைப் பொறுத்தவரை...' என்று மீண்டும் அழுதாள்.

'பொறுத்தவரை...?' என்று கேள்விக் குறியுடன் பார்த்த அன்பழகனிடம் -

'நான் செத்துப் போய் ரொம்ப நாளாச்சு...' என்று சொல்லிவிட்டுச் சரேலென்று எழுந்து போய்விட்டாள்.

அந்தக் கடைசி வாக்கியத்தைச் சொன்னபோது, ஜெகதாவின் குரலில் ஒலித்த எல்லையில்லாத் துக்கத்தை உணர்ந்தவனாய், கவலை தோய்ந்தவனாய்த் திகைத்து அமர்ந்து விட்டான் அன்பழகன்.

## 17

அன்பழகனுக்கு உறக்கம் வரவில்லை.

இரவு இரண்டு மணிக்கு மேலாகி விட்டது. எழுந்து அறையில் குறுக்கும் மறுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.



ஜனனியின் அப்பா அவர்களது திருமணத்தை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு அவர்களுக்கு நிறையச் செய்வதற்கு விருப்பப்பட்டார். அவன் எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில் ஒரு நாள் -

'மாப்பிளே, இந்த காம்ப்ளெக்ஸ் ப்ராஜெக்ட்ல வாங்கின பொருட்கள் நிறைய மிச்சம் இருக்கு. அதுங்களை யூஸ் பண்ணி உங்க வீட்டுல ரெண்டு மூணு ரூம் போட்டுத் தர்றேன். அதுக்காவது பர்மிட் செய்ங்க. எல்லாத்துக்கும் பிரைவஸி கிடைக்கும்.' என்றார்.

அன்பழகன் யோசித்தான். இரவு நேரங்களில் தன் மனைவி சிரிப்பதற்குக் கூட யோசிப்பதும், 'என்னங்க, வயசுப் பொண்ணு ஒருத்தி இருக்கா... நீங்க இப்படி எதையாவது உளறி வெளியே கேட்கப் போகுது...' என்று தயங்குவதும், நினைவில் ஆடச் சம்மதம் கொடுத்தான்.

கீழே கூடுதலாக இரண்டு அறைகளும் வீட்டுக்குள் படிகள் போகிற மாதிரி அமைத்து அவர்கள் இருவருக்கும் முதல் தளத்தில் இரண்டு அறைகள், ஒரு சின்ன ஹால் என்று கட்டிக் கொடுத்தார். அதனால் இப்போது அவர்கள் தனிமைக்கும் எந்த இடையூறும் இருக்கவில்லை. மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்கள். ஆனால் பிரச்சினை இப்படி வேறு விதமாகக் கிளம்பி விட்டதே என்று வெகுவாக வருத்தப்பட்டுப் போனான்.

இதுமாதிரி எதுவும் நடக்கக் கூடாது என்பதற்காகத்தானே பாட்டியம்மா அவ்வளவையும் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். ஜனனியை அத்தனை பாரத்தையும் சுமக்கச் செய்தார் என்று எண்ணியபோது மேலும் குழப்பம்தான் மிஞ்சியது.

அம்மாவிடம் பேசலாமா என்று யோசித்தான். வேண்டாம். என்ன இருந்தாலும் சம்பந்தியின் சொந்த விவகாரத்தில் அவன் தலையிடுவது நன்றாக இருக்காது. அதுவும் கணவன், மனைவி பிரச்சினை வேறு.

ஜனனியிடம் பேசலாமா? பேசலாம். ஆனால், இதுவரை அவளைக் கவலைப்படச் செய்கிற எந்தப் பிரச்சினையையும் அவளிடம் பேசவில்லை. அவளை வருத்தப்படுத்தலாமா என்ற தயக்கம் ஏற்பட்டது.

தலையே வெடித்து விடும் போல் இருந்தது. நடந்து களைத்துப் போய் சோபாவில் அமர்ந்தான். அசைவுச் சத்தம் கேட்டு ஜனனி விழித்துக் கொண்டு படுத்திருந்தாள்.

'என்னங்க, தூக்கம் வரலையா என்ன?' என்றாள்.

'ம்....'

'என்ன, ஏதாவது பிரச்சினையா?' என்றாள்.

அவன் மௌனம் சாதித்தான்.

ஜனனி எழுந்தாள். 'அப்ப ஏதோ பிரச்சினைதான்,' என்று முணுமுணுத்தபடி எழுந்து வந்தாள்.

'என்ன அன்பு, ஏன் இப்படி ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கீங்க?' என்றாள்.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

'ஜனனி, நம்ம கல்யாணம் பிரச்சினைக் கல்யாணமா இருந்தாலும், வாழ்க்கை பிரச்சினை இல்லாமல் சந்தோஷமா ஓடிடும்னு நெனச்சேன்... ஆனா அது நடக்காது போலிருக்கு,' என்றான், ஆழ்ந்த குரலில்.

ஜனனி திடுக்கிட்டுப் போனாள். 'அன்பு, அந்த மாதிரி விளையாட்டுக்குக் கூடப் பேசாதீங்க நமக்குள்ளே எப்பவும் பிரச்சினை வராது, வர விடமாட்டேன்,' என்றாள் பதட்டமாக.



அவன் அவளைக் கனிவாகப் பார்த்தான்.

'அடடா, நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை,' என்று லேசாகப் புன்னகைத்தபடி, வலது கையால் அணைத்துக் கொண்டான்.

'நமக்குள்ளே எதுக்குப் பிரச்சினை வருது? எப்பவும் வராது,' என்றான் மீண்டும்.

'அதுதானே பார்த்தேன்,' என்று அவள் நிம்மதியானாள்.

அவன் மறுபடியும் சிந்தனையில் ஆழ்ந்தபடி, 'ஆனா நம்மைச் சுத்தி இருக்கிறவங்க சந்தோஷமா இல்லாதப்ப நாம எப்படிச் சந்தோஷமா இருக்கிறது?' என்றான்.

அவள் அவனைக் கேள்விக் குறியாய்ப் பார்த்தாள். 'யார் சந்தோஷமா இல்லை?' என்றாள்.

'உங்க அப்பா!' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். அவள் ஏதோ சொல்ல வாயெடுக்கையில் அதைக் கவனிக்காதவனாய், 'ஜெகதா அக்காவுந்தான் சந்தோஷமா இல்லை... செஞ்ச தப்புக்கு ரொம்ப வருத்தப் படறா,' என்றான்.

ஜனனியின் பார்வை தீவிரமாகியது.

'அப்படி என்ன தப்புச் செஞ்சாங்க?' என்றாள். அன்பழகன் அவள் கண்களை நேராகப் பார்த்தான். பிறகு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து தன் வலக் கையால் தனது வலது தொடையை நீவிக் கொண்டே கண்களைத் தாழ்த்திக் கொண்டவனாய், 'ஜனனி, உனக்கு எல்லாம் தெரிய வேண்டிய நேரம் வந்துடுச்சு..!' என்றான்.

- - - - -

ஒரு நாள்.

இரவு எட்டு மணி யிருக்கும்.

அன்பழகன் கடையில் வேலை முடித்து விட்டு வந்து கொண்டிருந்தான். வரும் ஞாயிற்றுக் கிழமையன்று ஒரு வீட்டில் டிவி. ஃபேன் இரண்டுமே சர்வீஸ் செய்து தர ஒப்புக் கொண்டிருந்தான்.

அதைப் பற்றி யோசித்துக் கொண்டே வருகையில் அந்தத் தெருமுனையில் நீலகண்டன் நின்று கொண்டிருந்தான். லேசான போதையில் இருந்தான்.

நீலகண்டனுடைய தாயாரும், அன்பழகனுடைய தாயாரும் சொந்தச் சகோதரிகள். ஜெகதா செண்பகத்தின் பெரியம்மாவின் பேத்தி. நெருங்கிய உறவு கொண்டாடிக் கொள்ளவில்லை. என்றாலும் திருமணங்களில் பார்க்கும் போது உறவு பாராட்டிக் கொள்வார்கள்.

அன்பழகன் ஜெகதாவின் வீட்டுக்குச் சென்றதில்லை. ஆனால் நீலகண்டன் எப்போதாவது ஒரு முறை போய் வருவான்.

குழறலாக, 'ஜெக்கிக்கா... வீட்டுக்குப் போயிருந்தேன்பா,' என்றான்.

'சரி... அதுக்கு என்ன இப்போ? அதை நடுரோட்டில் நின்னுகிட்டு போதையில வந்து சொல்லணுமா?' என்றான்.

'அதில்லைடா விஷயம்... எனக்குப் பெரிய ஜாக்பாட் அடிச்சிருக்குடா. ரெண்டு லட்ச ரூபா தர்றேங்கறா,' என்றான்.

அன்பழகன் உஷாரானான்.

'டேய்... நீ ஏதோ சிக்கல்ல சிக்கிக்கப் போறே?' என்று எச்சரித்தபடி தங்களுடைய வீட்டு முன்புறத்தில் காம்பவுண்ட் ஓரமாக ஒரு டாப் இறக்கி அப்பா தனக்குப் படிப்பதற்காக அமைத்துக் கொடுத்திருந்த குடில் மாதிரியான அறைக்கு அழைத்துப் போனான்.



'என்னடா... நடந்துச்சு... சொல்லு,' என்றான்.

நீலகண்டன் விவரித்தான். ஒரு நாள் ஜெகதா ஃபோன் செய்து வீட்டுக்கு வரவழைத்தாளாம். அன்றைக்கு அவளுடைய வீட்டில் பாட்டி ஜனனி அப்பா யாரும் இல்லையாம்.

தங்கள் பங்களாவுக்கு முன்னாலிருந்த அந்த லானில் அமர்ந்து கொண்டு அவள் சொன்னாள்.

''ஜனனிக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். நா உன்னை மாப்பிளையா சஜ்ஜஸ்ட் செய்யலாம்னு இருக்கறேன்,' என்றாள்.

நீலகண்டன் ஒரு கணம் திகைத்தான். ஆனால், மறுகணம், 'அக்கா! உனக்குத்தான் தெரியுமே.... நான் ஏற்கெனவே ஒரு பொண்ணை லவ் பண்ணிக் கல்யாணம் செஞ்சுகிட்டேன்னு,' என்றான்.

'தெரியும்டா.... அதுவும் தெரியும்... ஆனா... அந்தக் கல்யாணத்தை நீயும், உங்கப்பாவும் ஊரில யாருக்கும் சொல்லலைங்கறதும் தெரியும். அது மட்டுமில்லே. உங்கப்பா உன் பொண்டாட்டி வீட்டுல இருந்து ரெண்டு லட்ச ரூபா கொண்டு வந்தாத்தான் ஒத்துக்குவேங்கறாருங்கறதும் தெரியும்...' என்றாள்.

'அப்புறம்... எப்படி என்னை மாப்பிள்ளைம்பே?'

'இங்க பாரு, கல்யாணம் பேசுவோம். ஆனா கல்யாணம் நடக்காது...'

'புரியலை...'

'பார்றா நீலகண்டா, கல்யாண ஏற்பாடெல்லாம் நடக்கும். ஆனா கல்யாணத்துக்கு முதல் நாள் நீ ஓடிப் போயிடணும்!' என்றாள்.

அவன் வாயைப் பிளந்து கொண்டு கலக்கமாய்ப் பார்த்தான். அவள் கலங்காமல் தொடர்ந்தாள்.

'ஆமா, உனக்கு ரெண்டு லட்ச ரூபா குடுத்துருவேன். அது மட்டுமில்லாம நீயும் கிளம்பும் போது கடுதாசி எழுதி வச்சுட்டுப் போனா உன்னோட லவ் மேட்டரும் எல்லாருக்கும் தெரிஞ்சுடும். உங்கப்பாவும் வேற வழியில்லாம அதை ஏத்துக்குவாரு. எனக்கும் நா நெனச்சது நடந்துரும்,' என்றாள்.

நீலகண்டன் யோசனையுடன், 'அக்கா, என்ன இருந்தாலும் ஜனனி கல்யாணம் நின்னா உனக்கு அவமானம் தானே' என்றான்.

'எனக்கு என்னடா அவமானம்? இப்படி ஏதாவது அடி விழுந்தாத்தான் அந்தப் பாட்டியம்மாவோட கொட்டம் அடங்கும்,' என்றவள், 'சரி அதெல்லாம் உனக்கெதுக்கு? நீ ஒத்துக்கறியா இல்லையா?' என்றாள்.

நீலகண்டன் சற்றும் யோசிக்காமல் ஒத்துக் கொண்டான், அப்போதே கையில் ஒரு தொகை கொடுத்தாளாம்.

அன்பழகன் பெரிதும் சிந்தனையில் ஆழ்ந்தான். முகந் தெரியாத அந்த ஜனனியின் மீது அவனுக்கு இரக்கம் பிறந்தது.

'வேண்டாம்டா நீலகண்டா, பெண் பாவம் பொல்லாத தும்பாங்க,' என்றான்.

நீலகண்டன் போதையில் சிரித்தான். 'போடா! பொண்ணுக்குச் சின்னம்மாக்காரியே வேட்டு வைக்கிறா! எனக்கென்னடா?' என்றான்.

அன்பழகன் மீண்டும், 'ஏண்டா, ஜெகதாவுக்கு அந்தப் பொண்ணு மேல இவ்வளவு வன்மம்?' என்றான்.

'அது தெரியலடா. ஆனா 'எழுந்திருச்சுப் போறதுக்கு முன்னால எப்பவும் மகதான் ராசியானவள்ங்கறாரு இல்லே. இனிமே எப்படி அப்படிச் சொல்வாருன்னு பார்க்கறேன்,' என்று முணுமுணுத்து விட்டுப் போனாள்,' என்றான்.



அதற்குப் பிறகு அன்பழகன் அம்மாவிடம் லேசாகக் கோடி காட்டி விட்டுத்தான் கல்யாண முயற்சிகளைத் தடுக்கும் விதமாகப் பாட்டியையும், ஜனனியையும் போய்ப் பார்த்தான். இருவரிடமும் முழுமையாகச் சொல்ல முடியாததால் அவர்கள் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி முடித்த பின் ஜனனியின் முகம் பார்த்தான். பெரிதும் முகம் வாடிப் போயிருந்த ஜனனியின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

'ஹேய் ஜனனி, இப்ப என்ன ஆச்சு... எல்லாம் சரி செஞ்சுர்லாம்,' என்று இறுக அணைத்துக் கொண்டான்.

'அதில்லை அன்பு, இத்தனை நாள் பழகிச் சித்தி என்னை இவ்வளவுதானா புரிந்து கொண்டாள்?' என்று மீண்டும் அழுதாள்.

அவன் பெருமூச்சு விட்டான். 'அதுக்குத்தான் இப்ப அனுபவிக்கிறா!' என்றான்.

ஜனனி மீண்டும் கவலையானாள். 'என்ன ஆச்சு?' என்றான்.

'உங்கப்பாவுக்கு எல்லாம் தெரிஞ்சுடுச்சு... வீட்டுக்குள்ளேயே தள்ளி வெச்ச மாதிரி வச்சுட்டாரு.. நான் செத்துப் போய் ரொம்ப நாளாச்சு...ன்னு அவளுந்தான் அழுகறா,' என்றான்.

ஜனனி அவன் மார்பில் புரண்டு அழுதாள். 'அன்பு.. அப்பா மட்டும் சந்தோஷமா இருப்பார்ன்னா.. நெனக்கிறீங்க.. நிச்சயமா இருக்காது. அவரும் புழுங்கிட்டுத்தான் இருப்பாரு,' என்றாள்.

அவள் தலையை வருடிக் கொடுத்துக் கொண்டே, 'அதனாலதான்டா கண்ணம்மா. இப்படித் தூக்கம் வராம உக்காந்து தவிச்சுகிட்டிருக்கேன்,' என்றான்.

பிறகும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ஜனனி, 'சரி அன்பு நீங்க தூங்குங்க. சும்மா கவலைப்பட்டு என்னத்துக்கு ஆகுது.. ஏதாவது வழி செய்யலாம்,' என்று தன் மடியில் கிடத்தி உறங்கச் செய்தாள்.

எல்லாவற்றையும் கொட்டிவிட்ட காரணத்தினாலோ என்னவோ, அவன் பாரமிறங்கியவனாக உறங்கி விட்டான். ஆனால் ஜனனியின் நெஞ்சில் பாரமேறிக் கொண்டது.

அப்பா தன்னைக் கைராசிக்காரி என்று சொல்லிக் கொள்வது நிஜந்தான்.

அதற்காகவா சித்தி தன் கல்யாணத்தை நிறுத்துகிற அளவுக்குப் போவாள்? தன் மேல் அப்படி என்ன வன்மம்! இல்லை, வேறு ஏதோ இருக்கிறது என்று சொல்லிக் கொண்டாள்.

நேரம் ஆக ஆக அந்த எண்ணம் வலுத்து விட்டது. அதிகாலை ஐந்து மணிக் களைப்பில் கண் மயங்கும் வரை அந்த எண்ணம் பெரிதாகி கொண்டே வந்தது.

## 18

ஒரு வாரமாகவே நாகமாணிக்கம் மகளைப் பார்த்தும் பாராதது போல் கவனித்துக் கொண்டிருந்தார்.

முகம் வாடி நடமாடிக் கொண்டிருந்தாள். அன்று உணவருந்தும் போது கேட்டார்.

'என்னம்மா ஒரு மாதிரியாகவே இருக்கிறே!'

அவள் அசுவாரசியமாக அப்பாவைப் பார்த்தாள்.

'போங்கப்பா, இப்பல்லாம் அடிக்கடி டயர்ட் ஆயிடுது!' என்றாள்.

'தேவையான அளவுக்கு ரெஸ்ட் எடுத்துக்கம்மா,' என்றார்.



'ஆமா, ரெஸ்ட் எடுக்கணும். ஆனா எங்கே முடியுது?' என்றாள்.

'ஏம்மா வீட்ல வேலை ஜாஸ்தியா?'

'ஆமாப்பா, ஆனா அத்தை ரெஸ்ட் எடுக்கத்தான் சொல்வாங்க. ஆனா நாம எப்படிச் சும்மா இருக்கறது?' என்றாள்.

'பேசாம நம்ம வீட்டுக்கு வந்து கொஞ்ச நாள் ரெஸ்ட் எடு,' என்று சொல்ல நினைத்தவர், அடக்கிக் கொண்டார். வீட்டுக்கு வந்தால் தனக்கும் ஜெகதாவுக்கும் இடையேயுள்ள விரிசலைக் கண்டு பிடித்து விடுவாளே என்று தயங்கிக் கொண்டிருக்கையில் அவளே கேட்டாள்.

'அப்பா.. பேசாம நம்ம வீட்டுக்கு வந்து ஒரு மாசம் இருக்கட்டுமா?' என்று ஆர்வமாகக் கேட்டாள்.

உடனே நாகமாணிக்கம் மகிழ்ச்சியானார்.

'தாராளமாக வாம்மா. என்ன இப்படி பர்மிஷன் கேக்கறே?' என்று உற்சாகமானார்.

'என்னைக்கு வர்றே?' என்றார்.

'இன்னைக்கு நைட்டே வந்தர்றேம்பா. அவரையும் கூட்டிக்கிட்டு வர்றேன். இவர் இங்கயும் அங்கேயும் மாத்தி மாத்தி இருந்துப்பாரு,' என்றாள்.

'சரிம்மா... சரிம்மா. சந்தோஷம்மா!' என்றவர், பிற்பகலிலேயே புறப்பட்டு விட்டார். ஜனனிக்குப் புரிந்தது. முன்னாலேயே போய் ஜெகதாம்மாவிடம் சொல்லி எச்சரிக்கை செய்யப் போகிறார் என்று. சிரித்துக் கொண்டாள்.

இதற்கிடையில் அன்பழகன் ஜெகதாவிடம் பேசினான்.

'அக்கா, ஜனனி அங்க ஒரு மாசம் தங்கப் போறா,' என்றான்.

'ஐயய்யோ! அன்பு இங்கிருக்கிற பிரச்சினையெல்லாம் தெரிஞ்சா அவ ரொம்பக் கவலைப் படுவாளே!' என்றாள் ஜெகதா.

'இப்பவாவது அவளைப் புரிஞ்சுகிட்டியே!' என்று ஒரு தாக்குத் தாக்கி விட்டு, பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தாள். அவள் போன் பேசி முடிப்பதற்கும் கணவன் வருவதற்கும் சரியாக இருந்தது.

'ஜெகதா..!' என்று பல நாட்களுக்குப் பிறகு பெயர் சொல்லி அழைத்தார். பிறகு எச்சரிக்கும் குரலில்,

'ஜெகதா, ஜனனி இங்கே வந்து ஒரு மாசம் தங்கறேங்கறா. அவளுக்கு இந்தப் பிரச்சினைகள் எதுவும் தெரிய வேண்டிய தில்லை. நீ இந்த ரூமுக்கே வந்துரு.' என்றார்.

'ஜனனி வர்றான்னு இப்பத்தான் அன்பு சொன்னான், வரட்டும். வரட்டும்...' என்று அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்குவதைப் பார்த்து நாகமாணிக்கம் ஆச்சரியமானார்.

நிஜ உணர்வுதானா, நடிக்கிறாயா என்பது போல் அவர் பார்க்க, நீங்க எங்கே என்னைப் புரிஞ்சுக்கப் போறீங்க... என்று அவளும் விரக்தியாகப் பார்த்துவிட்டு நகர்ந்தாள்.

'ஜனனி வர்றா!' ஜனனி வர்றா!' என்று வீட்டையே அமர்க்களப்படுத்துகிற மனைவியை அவரும் கண்டும் காணாதது போல் கவனித்து ஆச்சரியப்பட்டுக் கொண்டி ருந்தார்.

ஜனனியும் அன்பழகனும் வந்ததற்குப் பிறகு வீடே களை கட்டிவிட்டது.

அன்பழகன் செய்த கலாட்டாவில் அந்த வீட்டில் எல்லோர் முகத்திலும் சிரிப்புத் தொற்றிக் கொண்டது.

வந்த இரவே, 'அக்கா, உன்னோட அந்த மசாலா குருமா வேணுமே.' என்றான்.



'நீ வேற அன்பு, உனக்கு பிபி ஜாஸ்தியாயிரும். நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்னே என்னை ஒண்ணும் செய்ய விடமாட்டேங்கறாங்க.' என்று சலித்துக் கொண்டாள் ஜெகதா.

'ஐயய்யோ, சும்மா உட்கார்ந்திருந்தா அதையும் இதையும் யோசித்து இன்னும் மண்டை குழம்புமே. பிபி எகிறிருமே. நீ என்ன இங்க அரைக்கிறியா? ஆட்டறியா? எல்லாத்துக்கும் ஆள் இருக்கு. குழம்பு கூட்டி வைக்கிறது ஒரு கஷ்டமா? வா...வா...' என்று அடுக்களைக்குள் நுழைந்தான்.

அவனும் உதவிகள் செய்ய, ஜெகதா சந்தோஷமாகச் சமையல் செய்தாள். ஜனனி வந்தவுடனே ரெஸ்ட் எடுக்கிறேன் என்று அறைக்குப் போய் விட்டாள்.

ஒரு ரவுண்டு பார்த்துவிட்டு, 'அப்பாடா! அம்மாவின் பொருட்கள் எதுவும் தனியாக இல்லை..!' என்று நிம்மதியானாள். சாப்பிடுகிற நேரத்துக்கு இறங்கியவள் கணவன் செய்து கொண்டிருக்கிற கலாட்டாவைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டாள்.

அன்றைக்கு வேறு வழியில்லாமல் நாகமாணிக்கமும் வந்து அமர்ந்திருந்தார்.

'வா! வா! ஜனனி, ஜெகதாக்கா... செஞ்ச டிஃபன்... தைரியமிருந்தா சாப்பிடு!' என்று கலாட்டா செய்தான் அன்பழகன்.

ஜனனி அமர்ந்தபடி கணவனை நேராகப் பார்த்தாள். 'எதுக்கு தைரியம்? ஜெக்கிம்மா எனக்கு என்ன விஷமா வைக்கப் போறாங்க... அப்படியே வைச்சாலும்... நான் சந்தோஷமாச் சாப்பிடுவேனே! அம்மா கையால கிடைக்கக் குடுத்து வைச்சிருக்கணுமே!' என்றாள். ஜெகதாவைக் கனிவாகப் பார்த்தாள். அன்பழகனே இதை எதிர்பார்க்காமல் திகைத்து விட்டான்.

ஏற்கெனவே அவர்கள் ஏதோ திட்டத்துடன் வந்திருக்கிறார்கள் எனப் புரிந்து கொண்ட ஜெகதா நெகிழ்ந்து போயிருந்தாள். இப்போது ஜனனி இப்படிச் சொல்லவும் பொலபொலவென்று கண்ணீர் விட்டாள். சட்டென்று எழுந்த ஜனனி, 'ஜெக்கிம்மா, என்ன இது..' என்று கட்டிக் கொண்டு அவள் கன்னத்தில் முத்தம் வைத்தாள்.

'ஆமா, ஜெக்கிம்மா, நீ என்னைப் பார்த்துப் பார்த்து வளர்த்தவளாச்சே!' என்று சிரித்துக் கொண்டே அப்பாவைப் பார்த்தாள்.

அப்பா திகைத்துப் போய் அமர்ந்திருந்தார். அன்றிரவு அவர்கள் அறைக்குள்ளும் சட்டென்று வந்தாள். ஜெகதா கீழே பாயில் படுத்திருப்பதைப் பார்த்து—

'ஜெக்கிம்மா, எதுக்கு இப்படிக் கீழே படுத்திருக்கிறே? இந்தப் பளிங்குக் கல்லு ஜில்லுன்னு இருக்குமே. மறுபடியும் ஆஸ்பத்திரியில படுத்து என்னையும் அப்பாவையும் ஒரு கலக்குக் கலக்கணுமாக்கும்!' என்று மேலே படுக்கையில் படுக்கச் சொல்லிவிட்டுப் போனாள்.

நாகமாணிக்கம் வாயடைத்துப் போய் உறங்குவது போல் படுத்துக் கொண்டார். மீண்டும் எல்லாம் பழையபடி நிகழ்வதை அவரால் தடுக்க முடியவில்லை. ஆனால், இன்னும் மனது ஒட்டவில்லை என்பதைத் தங்கள் தனிமையின் போது வார்த்தைகளாலும் நடத்தையினாலும் காட்டிக் கொண்டுதான் இருந்தார்.

ஜெகதா முழுமையாகத் தெம்பாகி விட்டாள். அன்றைக்குப் பேசியபோது அன்பழகன் சொன்னான்.

'அக்கா.. எல்லாத்தையும் ஜனனிக்குச் சொல்லிட்டேன்.. அம்மா என்னைப் புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானான்னு ரொம்ப வருத்தப்பட்டா. ஆனா மனசார மன்னிச்சிட்டா.



போனதெல்லாம் போகட்டும்... இனிமே எல்லாம் சந்தோஷமாகட்டும் அப்படிங்கறா..' என்று சொல்லியிருந்தான்.

ஜனனியின் மன்னிப்பு அவளுக்கு யானை பலம் கொடுத்திருந்தது. எவ்வளவு அருமையான பெண். தான்தான் அவளைப் புரிந்துகொள்ளவில்லை என்று மாய்ந்து போனாள். அன்பை அவளும் வெளிப்படையாகக் காட்டப் பழகிக் கொண்டாள். உண்மையான ஆர்வத்துடன், ஜனனிக்குப் பார்த்துப் பார்த்துச் செய்தாள்.

அன்று..

இரவு டிஃபன் செய்து கொண்டிருந்தார்கள் ஜனனியும் ஜெகதாவும்.

'என்ன ரெண்டு ஜெவும் சேர்ந்துவிட்டு ஜெ..ஜென்னு டிபஃன் செய்யறீங்க போலிருக்கு.' என்று சிரித்து, அறைக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருந்தான்.

அதைப் பார்த்த ஜெகதா உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டே, 'ஜனனி, நீ இந்தப் பூரியைப் போட்டு எடு.. நான் ஹாலில் உட்கார்ந்து தேய்ச்சு வைக்கிறேன்.' என்று டைனிங் டேபிள் பக்கம் டைனிங் ஹாலுக்குப் போய் விட்டாள்.

'ஹேய்.. என்ன ஒரு வாரமா அம்மாகிட்டே.. செல்லம் கொஞ்சிட்டு நம்மளைக் கவனிக்க மாட்டேங்கறே!' என்று குழைந்து கொண்டிருந்தான் அன்பழகன்.

'என்ன... கவனிக்கணும்? பூரிக் கட்டையால ரெண்டு போடவா?' என்று அவள் சிரித்தாள்.

'போடுவே... போடுவே!' என்று இன்னும் குழைந்தான்.

அதற்குள் அந்தப் பக்கம் நாகமாணிக்கம் ஏதோ அவசரமாகக் கேட்பதற்காக வந்தார். சட்டென்று எழுந்த ஜெகதா.... 'ஐயோ! அங்க போகாதீங்க..' என்று கையைப் பிடித்துத் தடுக்க —

புரியாமல் பார்த்தார்.

'ஏன்?' என்று அவர் புரியாமல் பார்த்தார்.

ஜெகதா சற்று அந்தப்புறம் அழைத்துப் போய், முகமெல்லாம் சிரிப்புடன், 'அங்க அன்பு இருக்கான்... ரெண்டும் என்னமோ சிரிச்சுப் பேசிக்கிட்டு இருக்குதுங்க... அதான் நானே வெளியே வந்துட்டேன்.' என்று அவர் முகம் பார்க்க, ஒரு நிமிடம் திகைத்து விட்டார். பிறகு சிரித்து விட்டார். இரண்டு பேரும் ஒரு நிமிடம் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்தார்கள்.

பல நாள் கழித்துத் தன் முகம் பார்த்து முகம் மலரச் சிரிக்கிற கணவனின் சிரிப்பை ஜெகதா முகம் மலர நிறைவாக மனதில் வாங்கிக் கொண்டாள். அவள் பார்வை பார்த்து அவர் முகமும் லேசாகச் சிவந்தது

'சரியாப் போச்சு போ. உனக்கும் ரொமாண்டிக் மூடு வந்துடுச்சாக்கும்!' என்று சிரிக்க, அவள் வெட்கத்துடன் நகர்ந்தாள்.

அன்றைக்கு முகம் மலர்ந்து சிரித்துக் கொண்டிருக்கிற சகோதரியிடம் அன்பழகன் தனியாகக் கேட்டான்.

'என்னக்கா ரொம்பக் குஷியா இருக்கறே?' என்று.

'இல்ல தம்பி. இன்னைக்கு உங்க மாமனார் ரொம்ப நாள் கழிச்சு என் முகம் பார்த்துச் சிரிச்சுப் பேசினார்.' என்றாள் குரலில் மகிழ்ச்சி நிறைய.

'எங்க மாமனாரா? அது ரொம்ப தூரத்துச் சொந்தம் மாதிரி தெரியுதே! உங்க வீட்டுக்காரர்னு சொல்லு...' என்று அவன் மேலும் கலாட்டா செய்தான்.

மனங்கனிந்து போன ஜெகதா... 'ரொம்பத் தேங்க்ஸ்... அன்பு!' என்றாள், ஆத்மார்த்தமாக.

'அக்கா... அதை நம்ம மேலிடத்துக்குச் சொல்லு. கதை வசனம்... டைரக்ஷன் எல்லாம் ஜனனி தேவியார். ஆக்ஷன் மட்டுந்தான்... நம்மளுது.' என்று சிரித்துக் கொண்டே, நகர.



அவனைத் திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் ஜெகதா.

அவர்கள் அறையில் ஜனனியைத் தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டு அன்பழகன் கேட்டான். 'ஏன் ஜனனி... விஷத்தை விஷத்தாலே எடுக்கணும்பாங்க இது என்ன ஸ்ட்ராட்டஜி வேற மாதிரி இருக்கு!' என்றான்.

ஜனனி சிரித்தாள். 'மை டியர் ஹஸ்பண்ட்! விஷத்தை வேண்ணா விஷத்தாலே முறிக்கலாம்... ஆனா பகையை அன்பாலதான் முறிக்கணும்!' என்றாள்.

அவன் சிந்தனையிலாழ்ந்தான்.

'ஆமா, ஜனனி, உண்மைதான். நாலு அடி ஒண்ணா வாங்கினா மாதிரி. அன்னைக்கு ஜெகதாக்கா நின்னா பாரு...' என்றான்.

ஜனனி யோசனையுடன் சொன்னாள். 'இன்னமும் ஜெக்கிம்மாவுக்கு என்கிட்ட மனசு திறந்து பேசற தைரியம் வர்லை. வர வைக்கணும்... அப்பதான் பிரச்சினையோட ஆழமே புரியும்.' என்றாள்.

'அட ஆண்டவா... இன்னும் பிரச்சினையே பின் பாயிண்ட் செய்யலையா? எப்பக் கண்டு பிடிச்சு எப்பத் தீர்த்து அப்புறம் எப்ப நம்மளைக் கவனிக்கிறது?' என்று அவன் தலையில் கையை வைத்துக் கொண்டான்.

ஜனனி கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பைப் பார்த்தவுடன், அவன் பார்வை கிறக்கப் பார்வையாக மாறியது. 'ஹேய் பகையை அன்பாலே, முறிப்பே. காதலை...?' என்று கேட்கவும், 'இதென்ன கேள்வி? வாங்கறதை விட நிறையத் திருப்பிக் குடுத்துத்தான்!' என்று மறுபடியும் சிரித்தாள்.

'அதைச் செய் முதல்லே.. அதுவுமில்லாம இன்னைக்கு பூரிக் கட்டையால ரெண்டு போடறேன்னு வேற மிரட்டறே! அதுக்கும் சேர்த்துத் தண்டனை கொடுத்துற வேண்டியதுதான்.' என்று அவனும் சிரித்தான்.

## 19

'**என்**னங்க..' என்று வேகமாக வந்தாள் ஜெகதா.

'என்ன?' என்றார் நாகமாணிக்கம்.

'ஜனனிக்கு என்ன புதுசு புதுசா ஏதோ ஆசையெல்லாம் வருது?' என்றாள் புன்னகையுடன்.

'என்னவாம்?'

'இல்லை.. எங்க நாகூர் கிராமத்திலே அன்பழகன் குடும்பத்துக்குன்னு சொந்தமா ஒரு அரை ஏக்கர் நிலமும், ஒரு சின்ன ஓட்டு வீடும் இருக்கு. அதுல போய் நாலு நாள் தங்கிட்டு வரேங்கறா..'

'சரி, போயிட்டு வரட்டும்.'

'என்ன, போயிட்டு வரட்டும்னு சாதாரணமாகச் சொல்றீங்க? ஜனனி வசதியா இருந்து பழகினவ. அன்பழகன் வீட்டிலே கூட அவங்களுக்குத் தனி பாத்ரும் வசதி செஞ்சு குடுத்தாங்க. அங்க கிராமத்துல போயி அவ தண்ணீர், பாத்ரூம் டாய்லெட் வசதி இல்லாமல் எப்படித் தங்குவாளாம்?' என்றாள்.

'அதுக்கு இப்ப என்ன செய்யணுங்கறே?'

'இல்லை, சின்னதா ஒரு சின்டெக்ஸ் டாங்க் வச்சு, நம்ம பில்டிங்ல எங்கயாவது இருந்து ஒரு மோட்டார் எடுத்துட்டுப் போய் ஃபிட் செய்து வசதி பண்ணிக் குடுக்கணும்,' என்றாள்.



'இது என்ன? வேறு விதமான நாடகமா?' என்பது போல் பார்த்தார். இப்போதெல்லாம் ஜெகதா அந்த மாதிரி பார்வைகளைக் கண்டு கொள்வதே யில்லை. இப்போது போல் திறந்த மனத்துடன் இருந்திருந்தால் வாழ்க்கை எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கக் கூடும் என்பது அவளுக்கும் இப்போதுதான் புரிய ஆரம்பித்திருந்தது.

'எப்பப் போறாளாம்?' என்றார்.

'அடுத்த மாசம் முதல் வாரத்திலே!' என்றாள் ஜெகதா.

'எனக்கு டைம் இருக்காதே!' என்றார்.

'சரி, நான் போய் மேற்பார்வை பார்த்து வேலை முடிக்கட்டுமா?' என்றாள் ஆர்வமாக. அவர் சிந்தனையுடன் அவளைப் பார்த்தார். பிறகு, 'சரி.. போ..' என்றார்.

அந்த வாரம் வெள்ளிக் கிழமையே ஆட்கள் மற்றும் பொருட்களை அனுப்பி வைத்ததோடு அவளுக்கும் கார் கொடுத்து அனுப்பி வைத்தார். ஜெகதாவுக்கு அந்தக் கிராமத்திலே மிக நெருக்கமான தோழி ஒருத்தி இருந்தாள். லட்சுமி என்ற அந்தப் பெண்மணி திருமணமான தனது குழந்தைகளை எல்லாம் தனிக் குடித்தனம் வைத்து விட்டுத் தன் கணவருடன் இருந்தாள்.

ஜெகதா தாய் தந்தையர் இல்லாது தனிமையில் தவித்த காலத்திலும், திருமணமான புதிதிலும் தனது குறை நிறைகளை யெல்லாம் அவளிடம் பகிர்ந்து கொள்வாள். பல நாட்களுக்குப் பிறகு லட்சுமியின் வீட்டில் போய்த் தங்கிக்கொண்டு வேலைகளை மேற்பார்வை பார்த்தாள்.

இடையிலே பல ஆண்டுகளாகத் தொடர்பு விட்டுப் போயிருந்தது. மீண்டும் தன் தவறுகளை யெல்லாம் லட்சுமியிடம் கொட்டிய போது அவள் திகைத்துப் போனாள்.

இந்த அளவுக்குப் போயிருக்க வேண்டாம்.' என்று சொன்னதோடு, 'உன் மகளை நீ சரியாப் புரிஞ்சுக்கலைன்னு நெனக்கறேன்.' என்றும் சொன்னாள்.

'அதுக்குத்தான் உண்மையான அன்பைக் கொட்டிப் பிராயச்சித்தம் செய்யறேன்.' என்றாள், ஜெகதா.

'செய்.. செய்.. அதுதான் நல்லது.' என்று அவளும் ஆமோதித்தாள்.

\- - - - - -

'அப்பா.. இன்னும் ஒரு இட்டிலி வச்சுக்கங்கப்பா..' என்றாள், ஜனனி.

'சரிம்மா.' என்று வாங்கிக் கொண்டார். ஜனனி முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு. 'ஏம்ப்பா நீங்க ஜெக்கிம்மாவோட ஊருக்கு எப்பவாவது போயிருக்கீங்களா என்ன?' என்றாள்.

அவர் திகைத்துப் போய்ப் பார்த்தார்.

'இல்லை.' என்றார்.

'ஏம்ப்பா, நாம ஜெக்கிம்மாவுக்குக் குடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்கலையோ என்னவோ. ஒரு நாளாவது அவங்க ஊருக்குப் போகணும். அவங்களுக்கு நெருங்கியவங்க யாருன்னு தெரிஞ்சுக்கணும்னெல்லாம் நமக்குத் தோணவே இல்லை.. இல்லப்பா?' என்றாள்.

நாகமாணிக்கம் ஒன்றும் பேசவில்லை. மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவரைச் சிந்திக்க விட்டுவிட்டு அமைதி காத்தாள். அன்பழகன் சம்பந்தம் இல்லாதவன்போல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சற்று நேரம் கழித்து -

'இவர் ஆனா.. என்னோட எல்லா ஃபிரண்ட்ஸைப் பத்தியும் கேட்டுத் தெரிஞ்சுட்டார். நான் விரும்பினா எந்த



ஃபிரண்ட் வீட்டுக்கும் போயிட்டு வருவேன்.. ரமா வீட்டுக்கு எப்படியும் மாசத்துக்கு ஒரு தடவையாவது கூட்டிட்டுப் போவாரு.' என்றாள்.

பிறகு எதையோ எடுப்பது போல் உள்ளே போய் விட்டாள். அன்பழகன் மாமனாரைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'மாமா, பொண்ணுங்களுக்குப் புகுந்த வீட்டுக்குப் போனதுக்கப்புறம்தான் பிறந்த வீட்டு மேலே பாசம் அதிகமாகுமாம்.' என்றான்.

'மாப்பிள்ளை, இவளுக்கு ஜெகதா என்னென்ன செஞ்சான்னு தெரிஞ்சா...'

'தெரியும் மாமா. எல்லாம் தெரியும்.' என்றான்.

அவர் அதிர்ந்து போய்ப் பார்த்தார்.

மாமா, உங்க மக ஒரு வித்தியாசமான பிறவி. ஒரே நாள்ல மன்னிச்சிட்டா. அதுவுமில்லாம ஜெக்கிம்மாவுக்கு இவ்வளவு வன்மம் வர்ற அளவுக்கு நாங்க ஏதோ காயப்படுத்தியிருக்கணும். எங்க அன்பில் ஏதோ குறையிருக்குங்கறா...' என்று சிரித்தான்.

நாகமாணிக்கத்தின் முகத்தில் கனிவு நிறைந்தது. அவன் மீண்டும் சிரித்தான். 'இப்படித்தான் மாமா, எல்லாத்தையும் அன்பாலேயே விழுக்காட்டிடறா. எங்க வீட்டுக்கு வந்த முத நாள்ல டிபன் பாக்ஸ்ல இட்லி எடுத்துக்கிட்டுக் கடைக்கு வந்தா பாருங்க... அன்னைக்கு விழுந்த ஆளுதான் நானு..' என்று இடிஇடியென்று சிரித்தான்.

நாகமாணிக்கமும் பெருமையும் பெருமிதமுமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவன் சிரிப்பை நிறுத்திவிட்டு.

'அவ போக்கில.. போங்க மாமா.. அதுதான்.. நல்லது!' என்று சொல்லி விட்டு எழுந்து போனான்.

\- - - - -

ஞாயிற்றுக் கிழமை...

பிற்பகல் ஒரு மணிக்கு.

'ஜனனி, நான் நாகூருக்குப் போயிட்டு வரேன். நீ வர்றியா?' என்று வந்து நிற்கிற அப்பாவைப் பார்த்து மகள் உள்ளுக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

'நா வர்லேப்பா. நான்தான் அடுத்த மாதம் போறேனே... நீங்க போயிட்டு வாங்க.' என்றாள்.

புறப்பட்டவரிடம், 'அப்பா... நிறைய ஸ்வீட் பாக்ஸ்... வாங்கிட்டுப் போங்க... அம்மாவுக்கு ரொம்ப நெருங்கினவங்களே... ஏழெட்டு வீடு இருக்காம்.' என்றாள்.

வழியில் பாலையாவிடம் நாகமாணிக்கம், 'ஏன்... பாலையா... இந்தப் பொம்பளைங்களையே.... புரிஞ்சிக்க முடியலை...?' என்று சிரித்தார்.

'அதென்னமோ நிஜந்தாங்க. ஆனா ஜெகதாம்மா நல்லா மாறியிருக்கறாங்கன்னு மட்டும் புரியுது.' என்றார்.

நாகமாணிக்கத்தின் வருகையைச் சற்றும் எதிர்பார்க்காத ஜெகதா மகிழ்ச்சியின் எல்லைக்கே போய் விட்டாள். அந்தப் பிற்பகல் முழுவதும் ஜெகதாவின் நெருங்கிய உறவினர்கள் வீட்டில் செலவிட்டு விட்டு அன்று அங்கேயே தங்கவும் செய்தார்.

அந்தச் சிறிய கிராமம் அவரது வருகையைக் கொண்டாடியதைப் பார்த்து நெகிழ்ந்து போனார். ஒரு வீட்டிலிருந்து கட்டில் மெத்தை வந்தது. ஒரு வீட்டிலிருந்து நான்கு சேர்கள் கொண்டு வந்து போட்டார்கள். ஒரு வீட்டில் தடபுடல் விருந்து வைத்தார்கள். எல்லாம் பரபரப்பாக ஏற்பாடு ஆனது. ஊர்ப் பெரியவர்கள் வந்து பார்த்தார்கள்.

'இப்பவாவது வர முடிஞ்சுதே!' என்றார்கள்.



'என்ன செய்றது. பிஸினஸ் அப்படி. இப்பக் கொஞ்சம் மக பார்த்துக்கறா...' என்றார்.

ஊரில் இருக்கிற அம்மன் கோயிலுக்கும், பள்ளிக் கூடத்துக்கும் ஒரு தொகை கொடுக்க ஒப்புக் கொண்டார். இரவு பதினோரு மணிக்குதான் எல்லாரும் போனார்கள்.

பாலையா முன் வராண்டாவில் தங்கிக்கொள்ள, ஒரு நீளக் கூடம், ஒரு சின்னச் சமையலறை, ஒரு சின்னப் படுக்கையறை என்று இருந்த அந்த வீட்டை ஒரு தரம் கண்ணால் அளந்தபடி கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தார்.

ஜெகதாவின் சத்தத்தையே காணவில்லையே என்று எட்டிப் பார்த்தார். அவள் சமையல் அறையில் சுவரில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள். கன்னங்களில் கண்ணீர் கோடிட்டிருந்தது.

'என்ன ஜெகதா, என்னம்மா? ஏன் அழறே?' என்று அணைத்துக் கொண்டார்.

'இப்படியெல்லாம் நீங்க வர மாட்டீங்களான்னு எத்தனை நாள் ஏங்கியிருப்பேன் தெரியுமா?' என்று மார்பில் புரண்டு அழுதாள்.

அவரும் ஆதுரத்துடன் அவள் தலையைத் தடவிக் கொடுத்தபடி நின்றார்.

'இப்பவும் நம்ம சிற்றறிவுக்கு ஒன்னும் அது எட்டலே. மகதான் கேட்டா, எப்பவாவது அம்மா ஊருக்குப் போகணும்னு தோணினது உண்டான்னு?' என்று புன்னகைத்தார்.

ஜெகதா மீண்டும் அழுதாள். 'சரி சரி, விடு.' என்று தேற்றினார்.

'ஜனனியை மகளாகச் சுமக்க இந்தப் பாவி வயித்துக்குப் புண்ணியம் இல்லாமப் போயிடுச்சே!' என்று வெகுவாகப் புலம்பியவளைத் தேற்றினார்.

சற்று நேரம் அமைதியில் கழிந்தது பிறகு நாகமாணிக்கம் ஆழ்ந்த குரலில் சொன்னார்.

'என்ன இருந்தாலும் ஜெகதா. என் மகளோட பெருந்தன்மை எனக்கு வராது. நம்ம எல்லாத்தையும் விடச் சின்ன வயசு. அம்மாவோட ரிக்வெஸ்ட்டுக்காக முன்பின் தெரியாத அன்பழகனோட கையைப் பிடிச்சுகிட்டு வெளிய போனாளே. அதுவும் என்னோட கோபத்தையும் தாங்கிகிட்டு. அன்பழகன் மாதிரி ஒரு மாப்பிளை அமைஞ்சதனாலே நல்லதா ஆச்சு. இல்லாட்டி? என் மகளைப் போல உன்னை மன்னிக்கிற மனசு எனக்கு இன்னும் வர்லை.. ஆனா.. அவளுக்காகத்தான் முயற்சி பண்றேன்.' என்றார்.

ஜெகதாவால் வாயைத் திறக்க முடியவில்லை. கிடைத்த மட்டும் போதும் என்று அமைதியாக வாங்கிக் கொண்டாள்.

ஊர்ப் பெரியவர்களின் வற்புறுத்தலுக்காக மறுநாளும் தங்கினார்.

'நீங்க மெதுவா வாங்கப்பா.. ஒன்னும் பிராப்ளமில்லை.' என்று ஜனனி ஃபோனில் தெரிவித்தாள்.

- - - - - -

'ஐயோ! நீ பயங்கரமான ஸ்கீமர். பயங்கரமான ஆளு!' என்று சிரித்துக் கொண்டிருந்தான் அன்பழகன்.

'ஆனா இன்னும் பாதிக் கிணறுதான் தாண்டியிருக்கேன்.' என்றாள் ஜனனி.

'யப்பா சாமி, ரொம்பப் பெரிய கிணறா இருக்கே..! எப்பத் தாண்டி முடிக்கறதாம்?' என்றான். அவன்.

மேலும் சிரிப்புடன், 'சீக்கிரம், வெகு சீக்கிரம்..' என்றாள் ஜனனி.



20

'என்னப்பா நீ. பழைய அன்பழகனா? இல்லே. பெரிய வீட்டு மருமகனா?' என்று கலாட்டா செய்தார்கள். ஊர்க்காரர்கள்.

அன்பழகன் மௌனமாய்ப் புன்னகைத்தான். 'எப்பவும் நான் அதே அன்பழகன்தான்!' என்றான்.

நாகமாணிக்கத்துக்கு எவ்வளவு மரியாதை கொடுத்தார்களோ. அதே அளவுக்கு அன்பை அன்பழகனிடம் வாரிக் கொட்டினார்கள்.

அன்பழகனின் இன்னொரு பக்கமும் அங்கே ஜனனிக்குப் புரிந்தது. ஓரளவு பணப் பிரச்சினை தீர்ந்ததற்குப் பிறகு ஊரில் இரண்டு மூன்று பேருக்கு மேல் படிப்புக்கு உதவி செய்கிறான் என்றார்கள். தவிர மாமாவிடம் சொல்லிச் சில பேருக்கு உதவிகள் வாங்கித் தந்திருக்கிறானாம். ஜனனி அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

அவன் புன்னகையுடன் சொன்னான். 'ஜனனி. படிக்கிறதுக்குத் திறமை யிருந்தும் ஆசை யிருந்தும் பணமில்லாமல் அவஸ்தைப்படுவது எவ்வளவு கொடுமை தெரியுமா?' என்று.

ஜனனியின் மனம் கனிந்து போனது. அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'ஆமா.. அன்பு.. அதுவும் பொறுப்பான முதல் மகனா இருந்தா இன்னும் கஷ்டம்தான்.' என்றாள்.

'அதனால் எனக்கொன்றும் குறைஞ்சு போயிடலை.' என்று புன்னகைத்தான்.

ஜனனி ஒன்றும் பேசவில்லை. உறவினர் ஒருவர் வீட்டில் பகல் உணவு உண்டுவிட்டுத் தங்களது வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு அன்பழகன் உறங்கிவிட்டான்.

ஜனனிக்குத் தன் மாமியார் ஒரு முறை சொன்னது நினைவுக்கு வந்தது.

'வீட்டில் எதைச் சமைத்துப் போட்டாலும் பேசாமல் சாப்பிட்டு விட்டுப் போய்விடுவான். தம்பிகள் சாப்பிட்டார்களா, தங்கை சாப்பிட்டாளான்னெல்லாம் கேட்டுட்டுத்தான் சாப்பிடுவான். ஒரு நாளைக்கு ஏதோ விருந்தாளிகள் வந்தா சத்தமில்லாம போயிடுவான். எங்கடா போனேன்னு கேட்டா. கடையில ஃப்ரெண்ட்ஸோட சாப்பிட்டுட்டேம்மான்னு சொல்லிச் சமாளிச்சிடுவான். குடும்பத்துக்கே அவன்தான் பொறுப்பு மாதிரி அலைஞ்சான். அதுக்குத்தான் கடவுள் உன்னைக் குடுத்துருக்கான்.' என்றது நினைவு வந்தது.

மெல்ல அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

'என்னம்மா?' என்று தூக்கத்திலேயே புரண்டு படுத்தான்.

'ஒன்னுமில்லை... ஒன்னுமில்லை... தூங்குங்க.' தட்டிக் கொடுத்து உறங்கச் செய்தாள்.

- - - - -

லட்சுமியின் முன்னால் ஒரு சின்ன ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் ஜனனி.

'ரொம்பக் கஷ்டப்பட்டாங்களா, ஜெக்கிம்மா?' என்று கேட்டாள்.

'கல்யாணம் ஆனப்பவே அவளுக்கு உள்ளூரப் பயந்தான். பெரிய இடத்துக்குப் போறோமேன்னு. அதுக்கு நடுவிலும் வேதனையா சிரிப்பா. 'ஏன் லட்சுமி, எல்லாப்



பொண்ணுகளுக்கும் குழந்தை பிறக்கறதுதான் தகுதின்னா... என் கல்யாணத்துல எனக்குக் குழந்தையே பொறக்காதுங்கறதுதான் தகுதியாப் போச்சு இல்லேம்பா. ஆனா எனக்குத்தான் ரெடிமேடா ஒரு மக கிடைப்பாளே. அவகிட்டயே எல்லாப் பிரியத்தையும் கொட்டிக்கறேன் அப்படீம்பா...'

ஜனனிக்கு மனம் நெகிழ்ந்தது. அப்படித் தன் மேல் பிரியம் வைக்க வேண்டும் என்று நினைத்தவள் ஏன் பின்னால் அப்படி ரிசர்வ்ட் ஆக மாறிப் போனாள் என்று யோசனை உள்ளே ஓடியது.

'அப்புறம்... கல்யாணத்துக்கு அப்புறம் வந்தாங்கன்னா எப்படிப் பேசுவாங்க?' என்று கேட்டாள்.

'முதல்ல கொஞ்சம் சந்தோஷமாப் பேசுவா... அப்புறம் நான் நானா இருக்க முடியல லட்சுமி. யாரும் எதுவும் பேசறது இல்லை. கஷ்டம் எல்லாம் எதுவும் இல்லை... ஆனா போன மறுநாளே எங்க வீட்டுக்காரர், 'ஜனனிதான் வீட்டோட மையப்புள்ளி... அவளுக்காகத்தான் இந்தக் கல்யாணமே. புரிஞ்சு நடந்துக்க...ன்னு சொல்லிட்டார்...ன்னா...'

'ஓ...' என்று திகைத்தாள் ஜனனி.

'அதனால அந்தக் குழந்தைகிட்ட என்னால இயல்பா இருக்க முடியலை... அவளும் பாட்டிகிட்டதான் ஒட்டறா. தாய்ன்னு இருந்தா ஒரு நேரம் மிரட்டணும், ஒரு நேரம் கொஞ்சணும் ஆனா எதுக்குமே பயமாயிருக்கு அப்படின்னு புலம்பினா...

-----

'ரொம்ப அனலைஸ் பண்ணி மனசைக் கெடுத்துக்காதே. இயல்பாய் இரு. அப்படின்னேன். கொஞ்சம் கொஞ்சமாய் இங்க வர்றதையே நிறுத்திட்டா...' என்றாள்.

ஜனனி அன்றைக்கெல்லாம் வெகுவாக யோசனையில் ஆழ்ந்தாள். அது மட்டுமில்லாமல் தன் வாழ்க்கையிலும் ஒரு முயற்சியில் இறங்கினாள்.

அன்றிரவு கணவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

'ஏன் அன்பு... இந்தக் கிராமத்து வீட்டிலே நமக்கு நல்ல பிரைவசி கிடைக்குதில்லை.' என்றாள்.

'ம்...' என்றான். அவன் - அவளது தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டே.

'ஆனா நம்ம வீட்டிலே எப்பவும் பயந்தான். அத்தை எப்பக் கூப்பிடுவாங்களோ. சத்தமா சிரிச்சாக் கேட்டுடுமோன்னு... இல்லை...' என்றாள்.

'அது சரி. அதுக்குத்தான் உங்கப்பா மேலே ரூம் போட்டுக் குடுக்கறேன்னப்ப என்னோட பாலிசியெல்லாம் விட்டு விட்டு ஒத்துகிட்டேனே. இப்ப அந்தப் பயமெல்லாம்தான் இல்லியே. அதுவும் அம்மா ரொம்ப இங்கிதம் தெரிஞ்சு நடந்துக்குவாங்கதானே?' என்றான்.

'இல்லை... நாம பேசாம அப்பா வீட்டுக்குப் போயிடலாமா?'

______

'என்ன... ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க...'

அவன் ஆழ்ந்த குரலில் சொன்னான். 'இல்லை, ஜனனி. அது சரி வராது.'

அவள் இன்னும் இழைந்தாள்.

'இல்லைன்னா தனிக்குடித்தனம் போகலாமா?' என்றாள்.

______

'பதில் சொல்லுங்க...!' என்றாள் கொஞ்சலாக.

'வேண்டாம்... ஜனனி. அது சரி வராது.'



'ஏன்?'

'நான் குடும்பத்துக்கு மூத்த மகன் ஜனனி... எனக்குன்னு சில பொறுப்பிருக்கு.'

'அப்ப என்னைச் சந்தோஷமா வச்சுக்கறது உங்க பொறுப்பில்லையா?' என்றாள் ஜனனி கோபமாக.

'உனக்கு என்ன குறை? உனக்கு எப்பப்ப பிரைவஸி வேணுமோ அப்பப்ப கிடைக்கற மாதிரியே பார்த்துக்கலாம். சரியா?'

அவள் விலகினாள்.

'அப்ப பிரையாரிட்டி உங்க குடும்பத்துக்குத்தான். எனக்கில்லை இல்லை?' என்றாள்.

அவன் திடுக்கிட்டான். 'ஹேய் ஜனனி, என்ன ஆச்சு? இன்னைக்கு இப்படிப் பேசறே.' என்று அதிர்ந்தான்.

'ஏன்? நான் இன்னைக்குத்தான் உண்மையாய்ப் பேசறேன். உங்களுக்கு என் மேலே பிரியம் இருக்கா... இல்லையா?'

'என்ன ஜனனி, இப்படிக் கேட்கறே? உன் மேல உயிரையே வச்சிருக்கேன்,' என்றான் இறங்கிய குரலில்.

'பொய். உங்களுக்கு என் பணம் வேணும். என்னால கிடைக்கிற வசதிகள்... நான் எல்லாமும் வேணும். ஆனா உங்க மனுஷங்கதான் உங்களுக்கு முக்கியம்...!'

'ப்ளீஸ் என் மனுஷங்க உன் மனுஷங்கன்னு ஏன் பிரிச்சுப் பேசறே... நம்ம மனுஷங்க ஜனனி...'

அவள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

'யு ஆர் எ ஹிப்பாகிரட்... சுயநலவாதி. செல்ப் சென்டர்ட் மேன்!' என்றாள் அடிக் குரலில்.

அவனுக்கும் கோபம் வந்தது. அவள் தோள்களை இறுகப் பற்றினான். கோபமாகப் பார்த்தான். ஒரு கணம் அடிக்கப் போகிறானோ என்று நினைக்கிற மாதிரிக் கையை ஓங்கினான். அடுத்த கணம் 'சே..' என்று தன்னைத் தானே நொந்து கொண்டு, கையைக் கீழே போட்டு விட்டு எழுந்து வெளியே போய் விட்டான்.

அவன் கையை ஓங்கியதை எதிர்பார்க்காத ஜனனி அதிர்ந்து போனாள். அழுகை வெடித்துக் கொண்டு கிளம்பியது. விம்மி விம்மி அழுதாள். அரைமணி நேரத்துக்கு மேல் அவன் வரவில்லையே என்று எட்டிப் பார்த்தாள். அவன் தாழ்வாரத்தில் குறுக்கும் மறுக்கும் நடந்து கொண்டிருந்தான். முகத்தில் ஆழ்ந்த வேதனையும், சிந்தனையும் நிறைந்திருந்தது. ஜனனியே ஒரு கணம் உருகிப் போனாள். வாயிற்படிக்கருகில் நின்று, 'தூக்கம் வரலையா?' என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு அறைக்கு வந்தான்.

அவன் விட்டம் பார்த்துப் படுத்துக் கொள்ளவும், அவள் அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு படுத்திருந்தாள். சற்றுக் கழித்து-

'ஜனனி, ஐ ம் சாரி..' என்றான்.

'பரவால்லே,' என்றாள்.

ஜனனிக்கு இப்படியொரு எண்ணம் வரக்கூடும் என்பதே அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. மெதுவான குரலில் -

'ஜனனி, ஒவ்வொரு மனுஷனுக்கும் எல்லாக் கடமையும் இருக்கு. அதிலயும் கவிதாவுக்குக் கல்யாணம் ஆகியிருந்தாக் கூடப் பரவாயில்லே,' என்றான்.

அவள் பதிலே பேசவில்லை.

அவன் அவளைத் தன் பக்கம் திருப்பினான்.



'அதே மாதிரி உனக்கும் கணவனா இருக்கற கடமையும் இருக்கு,' என்றவள், 'நீ ரொம்ப பிடிவாதமா இருந்தேன்னா..' என்று அவன் சொல்வதற்குள் குறுக்கிட்டாள்.

'என் ஹஸ்பண்ட் எனக்காக மட்டுந்தான்னு நான் நினைக்கக் கூடாதா?' என்றாள் ஆவேசமாக.

அவன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். பிறகு சட்டென்று சிரித்து விட்டான். அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

'மக்கு..மக்கு! ஹஸ்பண்டா உனக்கு மட்டுந்தான். உயிர் உள்ளவரை நீ மட்டுந்தான். ஆனா, அண்ணனா, மகனா எல்லாம் எனக்குக் கடமையிருக்கே!' என்றான்.

'அப்ப சரி எங்க வீடும் வேண்டாம். உங்க வீடும் வேண்டாம். தனியாப் போவோம்,' என்றாள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டவனாக, 'சரி, ஜனனி. உன் விருப்பம் அதுன்னா அப்படியே ஆகட்டும். கொஞ்சம் டைம் குடு.. அம்மாகிட்டே பேசறேன்,' என்றான். மெதுவாக அவனிடமிருந்து விலகிக் கொண்டான்.

சற்று நேரம் இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு மெதுவாக அவள் அவனைத் தன் பக்கம் திருப்பினாள்.

'கோபமா?' என்றாள்.

அவன் அவளை நேராகப் பார்ப்பதைத் தவிர்த்தான். 'கோபம் எல்லாம் இல்லே... வருத்தம். நான் என்னோட ஜனனியை ரொம்ப உயர்வா நினைச்சுகிட்டிருந்தேன். வயசுக்கு மீறின விவேகம். அறிவாளின்னு ரொம்ப மதிப்பா நெனச்சேன்,' என்றான்.

'அதுதான் கைய ஓங்கினீங்களாக்கும்!' என்றாள் பொய்க் கோபத்துடன்.

'அதான் சாரி சொல்லிட்டேனே..' என்றான் அவன்.

அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

'ஒரு அடி வச்சிருக்கலாம் இல்லே?' என்றாள்.

'வ்வாட்..?' என்று அவன் அதிர்ந்து போய்ப் பார்த்தான்.

'என்னடா.. இப்படிப் பொறுப்பில்லாமப் பேசறேன்னு ரெண்டு வைக்க வேண்டியதுதானே!' என்றாள்.

'ஜனனி, உன்னை அப்படியெல்லாம் என்னாலே நடத்த முடியாது. நான் உன்னை ரொம்ப மதிக்கறேன் ஜனனி.'

'என்ன? என்னத்தை மதிக்கறேன் மதிக்கறேன்னுகிட்டு.. இயல்பா நடந்துக்குங்க.' திட்ட வேண்டிய நேரத்துல திட்டணும் அடிக்க வேண்டிய நேரத்துல அடிக்கணும். ஒரு அடி அடிப்பீங்கன்னு ஆசையா இருந்தேன்.' என்றாள், கோபமாய்.

அன்பழகன் சத்தமாக அதிர்ந்தே போனான். 'ஏய்..நீ என்ன இப்படி அலைக்கழிக்கறே! என்னதான் மனசிலே நெனச்சுக்கிட்டிருக்கே.. சொல்லித் தொலைடீ!' என்றான், கோபத்துடன்.

அவள் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு, கலகலவெனச் சிரித்தாள். 'ம். இது.. இது நல்லாருக்கு..' என்றாள்.

'ஜனனி' என்று ஒரு விதமான விசித்திரமான பார்வையுடன் அவள் முகத்தை நிமிர்ந்து கண்களால் பருகினான். அவள் முகத்தில் தெரிந்த உணர்வுகளைக் கண்டு பேச்சற்றுப் போனான்.

வெட்கம் ததும்ப அவன் மார்பை நீவிக் கொண்டே, 'இல்லே.. நாம தனிக் குடித்தனம் போலாம்னு வற்புறுத்தினா என்ன சொல்வீங்கன்னு பார்த்தேன்.' என்றாள்.

அவன் பார்வை மாறியது. கிறக்கம் முகத்தில் ஏறியது.



'என்ன இப்படியெல்லாம் ஆசை?' என்றான் குழைந்த குரலில்.

'சும்மாதான்..' என்று மறுபடியும் சிரித்தாள். 'பயங்கரமான ஆளு.. நீங்க. ஹஸ்பண்டா உனக்கு மட்டும்தான்னு.. சொல்லிச் சமாளிச்சுட்டீங்க..' என்றாள்.

அவன் தன்னை மறந்தான். 'அதிலென்ன சந்தேகம்!' என்று தன்னருகில் இழுத்தான். அன்று சற்றே வேகம் காட்டிய கணவனை எண்ணி அவள் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

ஆழ்ந்த அமைதியில் உறக்கம் தழுவுகிற நேரத்தில் அவன் மெதுவாக அவள் காதருகில் முணுமுணுத்தான். 'ஜனனி! என்னோட வாழ்க்கையின் பெரிய அதிர்ஷ்டமே நீதான்னு நெனச்சு ரொம்ப கர்வமாத் திரிஞ்சுகிட்டிருக்கேன். இப்படியெல்லாம் பரிசோதனை பண்ணி என்னைச் சிரமப்படுத்தாதே. என்னால தாங்க முடியாது...' என்றான்.

'சாரி. ஐ ம் வெரி சாரி. ஆனா ஒரு கேள்விக்கு எனக்கு விடை தெரிய வேண்டியிருந்தது. நீங்க சொல்றது நெஜந்தான். அவரவர்களுக்கு உள்ள இடம் எதுங்கறதை அவங்கவங்க புரிஞ்சுகிட்டா ஒரு பிரச்சினையும் இல்லே.' என்றாள்.

கணவனை இறுக அணைத்துக் கொண்டு, தட்டிக் கொடுத்து உறங்கச் செய்தாள்.

உள்ளே சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

## 21

'ஹேய் ஜனனி, நீ இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவேன்னு நா நெனைக்கவே இல்லை. தெரியுமா?' என்று பலமுறை சொல்லி விட்டான், அன்பழகன்.

'எல்லாம் காரணமாய்த்தான்.' என்று சிரித்தாள் ஜனனி. ஆனால் திடீரென்று முகத்தில் கலவரம் தெரிந்தது.

'என்ன ஜனனி?' என்றான்.

'என்னங்க... நா தனிக் குடித்தனம் போலாம்னு சொன்னேன்னு அத்தைகிட்டே சொல்லிடாதீங்க. ரொம்ப வருத்தப்படுவாங்க.' என்றாள்.

'தெரிஞ்சுமா அப்படிச் சொன்னே?' என்றான் ஆதங்கத்துடன்.

பிறகுதான் ஜனனி லட்சுமியிடம் தான் பேசியதைச் சொன்னாள். அதற்குப் பிறகும் தன் மனதில் ஓடிக் கொண்டிருக்கிற எண்ணங்களை அவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

அவர்கள் கிராமத்திலிருந்து வந்ததற்குப் பிறகு நேரே அப்பா வீட்டுக்குப் போய் விட்டார்கள். அன்றைக்கு இரவு அன்பழகன் வீட்டுக்குப் போய்விட்டு உடனே திரும்பினார்கள்.

'அண்ணி! நீங்க இல்லாம வீடே நல்லா இல்லை.' என்று அறிவழகனும், கவிதாவும் மாய்ந்து போனார்கள்.

'ஆமாம்மா... எப்ப வரே?' என்று மாமனார் கூடச் சொல்லவும், ஜனனி நெகிழ்ந்து போனாள்.

'ஒரு முக்கியமான வேலையிருக்கு மாமா.... அது முடிஞ்சவுடனே வந்தர்றேன்.' என்றாள்.

'சரிம்மா!' என்றார்.

கணவனோடு திரும்ப வரும்போது சொன்னாள். 'இதுதாங்க நம்ம வீட்டிலே எனக்குப் பிடிச்சதே.' என்று.

'எது..?

'இல்லை, முக்கியமான வேலைன்னு சொன்னேன். ஆனா மாமா என்ன வேலை ஏதுன்னு விசாரிக்கலை. அத்தையும் அப்படித்தான்.' என்றாள்.



'ஆமா ஜனனி, அன்பு ஆதிக்கமா மாறும்போதுதான் பிரச்சினையே வருது.' பேசுவதென்னவோ அப்படித்தான் பேசினாலும் அவளது காரியங்கள் முரண்பாடாகவே அமைந்தன.

- - - - - -

'ஜெக்கிம்மா...' என்று ஆசையுடன் தேடிக் கொண்டு வருகிற ஜனனியைப் பார்த்துப் புன்னகைத்தாள் ஜெகதா.

'என்னம்மா...?' என்றாள்.

'உங்க பிரண்ட் லட்சுமியைப் பார்த்தேன். பேசினேன்...' என்றாள்.

'நல்லா இருக்காளா?' என்றாள்.

'நல்லா இருக்காங்க... ஜெக்கிம்மா. நான் ஒன்னு உங்ககிட்ட கேட்கணும்.' என்றாள்.

அதற்குள் ஜெகதா.. 'நீ கேட்கறது இருக்கட்டும். அதுக்கு முன்னாடி நான் உங்கிட்டே பேசணும்... உட்காரு.' என்று தன் எதிரில் உட்கார்த்தி வைத்தாள்.

பிறகு சற்று நேரம் விரல் நகங்களை அளைந்தபடி தலையைக் குனிந்து கொண்டாள். பிறகு நிமிர்ந்து.

'ஜனனி... என்னை மனசார மன்னிச்சிட்டியா?' என்றாள்.

ஜனனி வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள்.

'போனது போகட்டும் ஜெக்கிம்மா.... எல்லாத்தையும் மறந்துருவோம்.' என்றாள்.

'இல்ல ஜனனி. நான் செஞ்சது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப எனக்குப் புரியுது. உங்கப்பா கேட்ட மாதிரி அன்பழகன் மாதிரி நல்ல மாப்பிள்ளை அமையலேன்னா... உன் வாழ்க்கை என்னவாகி இருக்கும்?'

ஜனனி அமைதியாகப் பேசவிட்டு அமர்ந்திருந்தாள். ஜெகதா தனக்குள் ஆழ்ந்தாள்.

'ஆனா அதுக்கப்புறம் நான் ஏன் அப்படி நடந்துகிட்டேன்னு ரொம்ப யோசிச்சேன் ஜனனி.. எல்லாம் பொறாமைதான். உங்கப்பா எப்பவும் ஜனனிதான் ராசியானவம்பார். உம் மேலே நிறைய அன்பு. அதனால ராசியில்லாதவங்கற பேரு ஆயிடுச்சன்னா அப்புறம் எல்லாம் நம்ம கட்டுப்பாட்டுக்குள்ளே வந்துடும்னு நெனக்கிற அளவுக்குப் போயிட்டேன். எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!' என்று கசப்புடன் சிரித்தாள்.

'ஜெக்கிம்மா, நா ஒன்னு சொல்லட்டா?' என்றாள்.

'ம்..'

'நீ அப்பாவை ரொம்ப நேசிக்கறே. அவரு உனக்கே வேணும்னு நெனச்சுத்தான் என் மேல இருக்கற அன்பைக் குறைக்க வழி பார்த்திருக்கே. அதுவும் அன்புதான்.' என்று சிரித்தாள்.

ஜெகதா திகைத்துப் போனாள். ஜனனி தொடர்ந்து. 'எல்லாரும் என் வீட்டுக்காரர் மாதிரி இருப்பாங்களா?' என்று ஊரில் நடந்த பொய்ச் சண்டையைப் பற்றிச் சொன்னாள்.

ஜெகதா மீண்டும் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, 'இருக்கலாம்.. ஜனனி. என் மனசுலயும் ஒரு ஆழமான காயம் இருந்திருக்கு ஜனனி. கல்யாணம் ஆனவுடனேயே உங்கப்பா ஒரு வார்த்தை சொன்னாரு. ஜனனிதான் எல்லாம். அவள்தான் முதல். அவளா நீயான்னு வந்தா அவள்தான்னு. அப்ப இருந்தே உன்கிட்டே என்னால இயல்பா இருக்க முடியலே. எதுவும் பேசினா தப்பா போயிடுமோங்கற பயமே வாழ்க்கையாப் போச்சு. அதுதான் இப்படி வக்கிரமாய்ப் போயிட..' என்று குலுங்கி அழுதாள்.



ஜனனி வாஞ்சையுடன் மார்பில் சாய்த்துக் கொண்டாள். 'போனது போகட்டும் ஜெக்கிம்மா.. என்னைக்கும் நான் உன் மகதான்' என்று தேற்றினாள்.

அன்றிரவு கணவனிடம், 'அப்பா பெரிய தப்பு பண்ணீட்டார்,' என்றாள்.

'என்ன? உன்னைப் பெத்ததா?' என்று அவன் கிண்டல் செய்தான்.

'நான் சீரியஸாப் பேசறேன்..' என்றாள்.

அவன் உடனே முக பாவத்தை மாற்றிக் கொண்டான்.

'என்ன ஜனனி?' என்றான்.

'ஏன் அன்பு, நம்மளோட தேவை யாருக்குமே இல்லை. வி ஆர் அன்வான்டெட் என்கிற பீலிங். எவ்வளவு கொடுமையானது, தெரியுமா?' என்றாள்.

அவன் சிந்தனையுடன் பார்த்தான்.

'உண்மைதான்,' என்றான்.

'அப்படி யொரு பாதுகாப்பில்லாத மன நிலையை ஜெக்கிம்மாவுக்கு வச்சுட்டாரு. அந்தக் கோபம் என் மேல திரும்பி எப்படி எப்படியோ ஆயிடுச்சு,' என்றாள்.

'எப்படி ஆயிடுச்சு?' என்றான்.

'இங்க வந்து மாட்டிக்கிட்டனே!' என்றாள்.

'மாட்டியது நீயா.. நானா?' என்றான் அவன்.

'சரி சரி, ரெண்டு பேருந்தான். இப்ப நான் சொல்ற பிரச்சினைக்கு வாங்க,' என்றாள்.

'ம் வந்தாச்சு' என்று அவன் நெருங்கி அமர, இருவரும் சிரித்தார்கள்.

\- - - - -

அன்பழகன் வீட்டிலிருந்து எல்லாரும் வந்திருந்தார்கள்.

அறிவழகன் சற்றும் பயமில்லாமல் நாகமாணிக்கத்திடம் பேசியது ஜனனிக்கே ஆச்சரியம்தான்.

'அங்கிள், என்ன எங்க வீட்டு மகாலட்சுமியை இங்கயே உட்கார வச்சுட்டீங்க? எப்பத்தான் அனுப்பப் போறீங்க?' என்றான்.

'ஏம்பா, எங்க வீட்டு மகா லட்சுமியை நீங்க தட்டிக்கிட்டுப் போனதுமில்லாம என்னைக் கேள்வி கேக்கறே!' என்று அவரும் சிரித்தார்.

'ஏன், உங்களுக்குத்தான் அஷ்டலட்சுமியே சேர்ந்த மாதிரி ஜெகதாக்கா இருக்காங்களே..' என்றான், அவன்.

'அது சரி, எதுக்கு இப்ப அண்ணி வேணும்னு இவ்வளவு கவலைப்படறே?' எனவும், 'இந்தக் கவிதா சமையலைச் சாப்பிட்டு நாக்கே மரத்துப் போச்சு' என்று அவனை வம்பிழுக்க,

'அதானே, ஏதுடா அன்பு பிச்சுக்குதேன்னு பார்த்தேன்' என்று அவள் கலாட்டா செய்தாள்.

நாள் முழுதும் கலாட்டாவாக இருந்தது.

மாலையில் எல்லோரும் புல் தரையில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில், அன்பழகன், 'இங்கே வா' என்பது போல் சைகை காட்டி அழைத்து ஒரு காட்சியைக் காண்பித்தான்.

பாபுவை ஜெகதா தன் படுக்கையில் அமர்ந்தபடி மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். பாபு தன் மழலையில் ஏதேதோ சொல்ல, இரண்டு பேரும் உலகத்தையே மறந்து இருந்தார்கள்.

மகளைத் தேடிக் கொண்டு வந்த அப்பாவிடம் ஜனனி அந்தக் காட்சியைக் காட்டினாள்.

அவர் முகத்திலும் சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

அங்கிருந்து நகர்கையில் ஜனனி கணவனிடம் ரகசியம் பேசினாள்.

அவன் பவ்யமாகத் தலையாட்டிக் கொண்டான்.



## 22

நாகமாணிக்கம் அமைதியாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இரவு உணவு ஜனனி பரிமாறிக் கொண்டிருந்தாள்.

'ஜெக்கிம்மா இல்லாம நல்லாவே இல்லை, இல்லே?' என்றாள்.

'ம்..!' என்றார் நாகமாணிக்கம். ஜனனியின் புகுந்த வீட்டார் அன்று புறப்படும்போது செண்பகமே நாகமாணிக்கத்திடம் வந்து 'சம்பந்தி.. ஜெகதாவை ஒரு நாலு நாளைக்கு அனுப்பி வைங்களேன்... அவளுக்கும் எங்க வீடுதானே பிறந்த வீடு..' என்று கேட்கவும், அனுப்பி வைத்தார்.

'ஏம்மா என்ன திடீர்னு ஜெகதாவுக்கும் பிறந்த வீடு கிடைச்சிருக்கு?' என்றார், பாதிக் கிண்டலும் பாதி உண்மையுமாய். ஜனனி புன்னகைத்தாள்.

'அது இப்பத்தானே ஜெக்கிம்மா எல்லாத்துகிட்டேயும் நல்லாப் பழகறாங்க.. அதனால இருக்கும்.' என்றாள்.

நாகமாணிக்கம் சற்றே சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு,

'ஏம்மா உங்க மாமியார் உன்னை நல்லாத்தானே வச்சுக்கறாங்க... ஒண்ணும் பிரச்சினையில்லையே?' என்றார் கூர்மையான பார்வையுடன்.

ஜனனி உச்சுக் கொட்டினாள். அதெல்லாம் ஒண்ணும் இல்லையே என்றாள். பிறகு,

'ஏம்பா அப்படிக் கேக்கறீங்க..?' என்றாள்.

'இல்லை, அவங்க வீட்டுக்குப் போறதுக்கு உனக்கு இன்ட்ரஸ்ட் இல்லாத மாதிரி இருக்கு!'

ஜனனி அவர் முகத்தைப் பார்க்கவில்லை. மாறாக.. அவங்களால எல்லாம் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று இழுத்தாள்.

'அப்ப வேற யாரால பிரச்சினை? மாப்பிள்ளையா?' என்றார்.

ஜனனியும் எதிரில் அமர்ந்து சாப்பிடத் துவங்கினாள். நாகமாணிக்கம் சற்றே கவலையுடன் அவள் முகம் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அவள் முகத்தில் கலவையான உணர்வுகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

'பிரச்சினைன்னு நெனச்சா பிரச்சினைதான். ஆனா பிரச்சினையில்லைன்னு ஒதுக்கிடவும் முடியலை,' என்றாள்.

'ஜனனி, விவரமாச் சொல்லும்மா,' என்றார். குரலில் கலக்கம் தெரிந்தது.

அவள் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். 'அப்பா, நாம ஒருத்தர் மேலே உயிரையே வைச்சிருக்கிறோம்... அவங்களுக்கு நாம முக்கியமா இருக்கணுமா... வேண்டாமா?' என்றாள், ஆவேசமாக.

'இருக்கணும்!' என்றார் உள்ளடங்கிய குரலில். பிறகு, 'யாரைச் சொல்றே?' என்றார்.

'உங்க மாப்பிள்ளையைத்தான். ஏதோ ஒரு பேச்சு வந்தப்ப என்னை விட அவங்க குடும்பம்தான் முக்கியம்னு சொல்றார். நானா, அவங்களான்னு வந்தா... அவங்கதானாம்!' என்றாள் கோபமாக.

'ஓ..!' என்றார். முகம் விழுந்து விட்டது. பிறகு, 'எதுக்கும்மா அப்படி ஒரு கேள்வி வந்துச்சு?' என்றார்.

'எதுக்கோ வந்துச்சு. பதில் சொல்லுங்க,' என்றாள்.

அவர் முகத்தில் முதலில் சிந்தனை படர்ந்தது. பிறகு கோபம் ஏறியது.

'நான் பேசறேன் அன்பழகன் கிட்டே,' என்றார்.

'பேசுங்க. இப்பவே வரவழைச்சுப் பேசுங்க,' என்று அலட்டிக் கொள்ளாமல் எழுந்து வாஷ் பேசினில் கைகழுவுகிற மகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

- - - - -



சங்கடமான மௌனம் நிலவியது.

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிற அப்பாவை எந்த வித உணர்வும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜனனி.

'மாப்பிள்ளே, உடனே புறப்பட்டு வாங்க,' என்ற மாமனாரின் பதட்டமான குரல் செல்போஃனில் ஒலிக்கக் கேட்டு, அரக்கப்பரக்கப் புறப்பட்டு வந்திருந்த அன்பழகனும் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

சற்றே தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்ட நாகமாணிக்கம் -

'மாப்பிள்ளே, ஜனனிக்குக் கொஞ்சம் சங்கடம்,' என்றார்.

'என்ன சங்கடம்?' என்று அன்பழகன் விழித்தான்.

நாகமாணிக்கம் அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தொடர்ந்தார்.

'மாப்பிள்ளே, அவளுக்கு யாரும் இல்லைன்னு நீங்க நெனைக்க வேண்டாம்... நீ முக்கியமா, என் குடும்பம் முக்கியமான்னு வந்தா... என் குடும்பம்தான் முக்கியம்னு சொன்னீங்களாம்,' என்றார், காட்டமாக.

அன்பழகன் வெகுவாகத் திகைத்துப் போனான்.

'நான் எப்ப அப்படிச் சொன்னேன்?' என்று மனைவியைத் திகைத்துப் போய்ப் பார்க்க, அவள் தந்தைக்குப் பின்னால் நின்று கொண்டு குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினாள். அவனுக்குச் சட்டென்று புரிந்தது. அவனும் கோபமானவன் போலப் பேச ஆரம்பித்தான்.

'மாமா, அவதான் கேட்டா... நா முக்கியமா, குடும்பம் முக்கியமான்னு. அந்தக் கேள்வியே எதுக்கு வரணும்? அவங்கவுங்களுக்கு ஒரு இடம் இருக்கில்ல. அவளுக்கு நான்

என்ன குறை வைச்சேன்? எல்லா வசதியும் இருக்கு. சந்தோஷமா இருக்க வேண்டியதுதானே?' என்றான், படபடப்பாக.

நாகமாணிக்கம் இப்படியொரு பதிலை எதிர்பார்க்க வில்லை. திணறிப் போனார். பிறகு இறங்கிய குரலில் -

'நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க மாப்பிள்ளை.. குடும்பம்னா.. அது நீங்களும் அவளும்தான். ஏன், நான்கூட வெளியாள்தான்.' என்றார்.

அவன் விசித்திரமாகப் புன்னகைத்தான்.

'ஏன் மாமா, ஒரு வேளை எங்களுக்குக் குழந்தைங்க பிறந்தா?' என்றான்.

'கண்டிப்பா அவங்க உங்க குடும்பம்தான். ஆனா சிறகு முளைக்கிற வரைக்கும் ஆயுசு பரியந்தம் கணவனும், மனைவியும்தான் ஒருத்தருக்கொருத்தர் சரி பாதி!' என்றார்.

அன்பழகன் குற்றம் செய்தவன் போல் சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டான். அந்த இடைவெளியில் ஜனனி அப்பாவின் எதிரில் வந்து அமர்ந்து கொண்டாள்.

முகம் நிமிர்த்திய அன்பழகனும் ஜனனியும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

'ஏங்க, ஜெக்கிம்மாவுக்கும் அவங்க அப்பா உயிரோட இருந்திருந்தா, அப்பாகிட்டே இப்படிப் பேசியிருப்பாங்க இல்லே..?' என்றாள்.

'வ்வாட்?' என்று திகைத்தார், நாகமாணிக்கம். அப்போது ஜனனி இடியைப் போல அந்தக் கேள்வியை இறக்கினாள்.

'இல்லே... ஜெக்கிம்மாவும் இந்த வீட்டுக்கு ஒரு மனைவியாத்தானே வந்தாங்க. அப்ப ஏன் இது உங்களுக்குப் புரியலே?' என்று கேட்ட மகளைத் திகைத்துப் போய் வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

- - - - -



அன்பழகன் படுக்கையில் புரண்டு புரண்டு சிரித்துக் கொண்டிருந்தான்.

'அடங்கப்பா.. சாமி! பயங்கரமான ஆள் நீ' என்று..

மிகவும் உணர்ச்சிமயமான நேரங்களில்தான் அவன் அந்த மாதிரி இறங்கிப் பேசுவது.

'சும்மாயிருங்க, அன்பு!' என்று ஜனனியும் வெட்கத்துடன் புன்னகைத்தாள். அவன் ஆவேசத்துடன் அவளை அணைத்துக் கொண்டான்.

'மை ஸ்வீட் ஜனனி!' என்று சற்று நேரம் கொஞ்சிக் கொண்டான். பிறகு, 'ஜனனி, போராட்டத்தில் கூட மென்மையான அணுகு முறைதான்... இல்லே?' என்றான் வாஞ்சையாக. அவன் அருகில் இழுத்தான். அவள் விருப்பத் துக்கு இடம் கொடுத்து அடைக்கலமாகிக் கொண்டாள்.

சற்று நேரத்திற்குப் பின்பு ஜனனியைத் தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டு சிரித்தான். 'ஜனனி, காதலனுக்காக வாதாடிய, கணவனுக்காக வாதாடிய பெண்கள்னு நான் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா சித்திக்காகச் சிலம்பெடுத்த முதல் ஆள் நீயாய்த்தான் இருக்கும்.' என்றான்.

ஜனனி சற்று நேரம் அமைதியாக இருந்தாள். பிறகு சொன்னாள்.

'ஏங்க, எல்லாத்துக்கும் அடிப்படையும் அன்புதாங்க. அன்பு பாசிட்டிவா வெளிப்படும்போது சந்தோஷம். ஆனா அதுவே நெகடிவா வெளிப்படும் போது வக்கிரம். ஜெக்கிம்மாவுக்கு என் மேல ஏன் இவ்வளவு வன்மம்னு யோசிச்சேன்.. அப்புறம்தான் அவங்க மனசில இருக்கற காயம் புரிஞ்சது.

'அன்புக்கும், ஆதரவுக்கும் ஏங்கி இந்த வீட்டுக்கு வந்த அவங்களை இந்த வீடு சரியாப் புரிஞ்சுக்கலை. நீ வெறும் அலங்காரப் பொம்மைதான். உனக்கு எந்த உரிமையும் இல்லை..

நீயா ஜனனியான்னு வந்தா அவதான்னெல்லாம் சொன்னா, எவ்வளவு அதிர்ச்சியா யிருந்திருக்கும்... நெனச்சுப் பாருங்க!' என்றாள். 'பாவம், ஜெக்கிம்மா!' என்று பெருமூச்சு விட்டாள்.

பிரமிப்பாய் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'எவ்வளவு உயர்வானவள் இவள். பகைவனுக்கும் அருள்கிற மனசு!' என்று எண்ணிக் கொண்டான். ஜனனி தொடர்ந்தாள்.

'அன்பு, நோய் நாடி நோய் முதல் நாடின்னு குறள் சொல்லுதே. அது மாதிரி நோயோட ஆரம்பம் எங்கேன்னு பார்த்தேன். கண்டுபிடிச்சேன்.' என்றாள். புன்னகைத்தாள்.

'தட்ஸ் ஃபைன் ஜனனிம்மா!' என்று அவள் முகத்தைக் கையில் ஏந்தி முத்த மாரி பொழிந்தான் அன்பழகன். பிறகு அவன் பேச விட்ட போது, 'மகன் தனக்கே வேண்டும்னு நினைக்கிற அம்மா, கணவன் தனக்கே வேணும்னு நினைக்கிற மனைவி - ரெண்டு பேரும் எதுக்குப் போட்டி போடறாங்கன்னு நெனக்கிறீங்க. ஒரே ஆளோட அன்புக்குத்தான்.' என்றாள்.

'ஜனனி!' என்றான் கிறக்கமான குரலில். 'இதெல்லாம் எங்கே கத்துகிட்டே?' என்றான் தன் காதல் பார்வையை அவள் முகத்தில் படரவிட்டு.

ஜனனி கலகலவெனச் சிரித்தாள். 'உங்ககிட்டேயிருந்து தான்.' என்றாள். 'நீங்கதானே அப்பாகிட்டே சொன்னீங்க. உண்மையான அன்பு தோற்கும். விட்டுக் கொடுக்கும்னு. அந்தப் பாடந்தான் நானும் இப்பப் படிக்கிறேன். அப்பாவை ஜெக்கிம்மாவுக்கு விட்டுக் கொடுக்கிறேன்.' என்றாள்.

அவன் திடீரென்று குறும்பாகச் சிரித்தான். 'எல்லாப் பாடமும் நல்லாக் கத்துக்கறே!' என்றான்.

தலையணை பறந்தது. வாங்கிக் கொண்டு மீண்டும் சிரித்தான்.

'எப்படியோ கலகத்தைக் கிளப்பிவிட்டுட்டே!' என்றான்.



'ஆமா, கலகம்தான். கலகம் பிறந்தாதான் நியாயம் பிறக்கும்.' என்றாள். அவன் கேள்விக் குறியுடன் பார்க்க -

'அப்பா ரூம்ல லைட் எரியுது பாருங்க. இன்னும் தூங்கலை... யோசிக்க ஆரம்பிச்சிருக்கிறாரு.' என்று மீண்டும் சிரித்தாள்.

'யப்பா, நீ பயங்கரமான ஆள். புயலாய் வந்த தென்றல். என் வீட்டையே கொள்ளையடிச்சுட்டே!' என்று மனம் நிறையப் பாராட்டிய அன்பழகன் அவளை மேலே பேசவோ யோசிக்கவோ அனுமதிக்கவில்லை.

## 23

'ஜெகதாக்கா! உனக்கு ஃபோன்.' என்று செல்லைக் கொண்டு வந்து நீட்டினான் அன்பழகன். இரவு பத்து மணியிருக்கும்.

'எனக்கா? இந்த நேரத்திலயா?' என்றாள், ஜெகதா - ஆச்சரியமாய்.

ஒரு விதக் குறுஞ்சிரிப்புடன், 'மாமா!' என்று கிசுகிசுத்தான்.

'ஜெகதா, நான் நாகு பேசறேன்.' என்று முன்பெல்லாம் அலுவலகத்தில் இருந்து கூப்பிடுவாரே. அதுபோல் அழைக்கிற தன் கணவனின் குரல் கேட்டவுடன் மகிழ்ச்சியும், திகைப்புமாய்க் கலகலத்துப் போனாள் ஜெகதா.

'என்னங்க, நீங்களா?!' என்று குழறினாள்.

அந்தப் பக்கம் அவள் குரலில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்டு நாகமாணிக்கம் சற்றே இளகிப் போனார்.

'என்ன ஜெகதா? போயி ரெண்டு நாளாச்சு. போன் பண்ணுவேன்னு பார்த்தேன். பேசலை... சாப்பிட்டியா... என்ன செஞ்சிட்டிருக்கே?' என்று இயல்பாகப் பேசவும், ஜெகதா

சட்டென்று எழுந்து தனிமை நாடுவதைக் கண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான் அன்பழகன்.

'சாப்பிட்டேங்க... நீங்க சாப்பிட்டீங்களா. இன்னைக்கு பி காம்ப்ளெக்ஸ் போட்டீங்களா?' என்று தழுதழுத்தாள்.

'போட்டேன் போட்டேன். அதெல்லாம் ரெகுலரா நடக்குது. ஆனா நீ யில்லாமத்தான் கஷ்டமா இருக்கு.'

'ஏன், நான் இல்லைன்னா என்ன. ஜனனி இருக்காளே. அவ உங்களுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்வாளே!' என்றாள் யதார்த்தமாக.

'ஜனனி அதெல்லாம் நல்லாத்தான் பார்த்துக்கிறா. ஆனா என்ன. எப்பப் பார்த்தாலும் வீட்டுக்காரரைப் பத்தித்தான் பேசறா... எனக்கும் உன்னோட ஞாபகம் வந்துருது.' என்றார்.

ஜெகதாவின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது... தேம்பினாள்.

'என்னம்மா... என்ன ஆச்சு?' என்று அந்தப் பக்கம் பதறினார் நாகமாணிக்கம்.

'இப்படி யெல்லாம் நீங்க பேசுவீங்கன்னு நான் நினைக்கவே இல்லீங்க... மனசுல இருந்து சுத்தமாத் தூக்கி எறிஞ்சிட்டீங்கன்னு நெனச்சேன். என்னால நம்பவே முடியலீங்க...!' என்று கசிந்துருகினாள்.

'என்னாலயும்தான் முடியலே...!' என்று சிரித்தார்.

'என்ன?'

'மனசில இருந்து தூக்கி யெறியணும்னு முயற்சி செய்தேன். என்னால முடியலயே. நீ என் மேல வைச்ச அளவு கடந்த பிரியத்துனாலதான் இப்படி யெல்லாம் நடந்துகிட்டியாம். ஜனனி சொல்றா. மருமகன் வேற 'இன்னைக்கெல்லாம் உங்க அப்பாவுக்கு என்ன வயசு? ஒரு நாப்பத்தைஞ்சு, நாப்பத்தாறு இருக்குமா? ஜெகதாக்காவுக்கு என்ன... நாப்பது இருக்குமா?



வாழ வேண்டிய வயசுதான்னு மெசேஜ் குடுக்கறாரு. என்ன செய்ய, சொல்லு...' என்று கலகலவென்று சிரிக்கவும், ஜெகதா சொர்க்கத்தையே கண்டாற்போல் மலர்ந்தாள்.

'போதுங்க... இந்தச் சிரிப்பைக் கேட்டு இந்த நிமிஷம் உயிர் போனாலும் போதும்.' என்று நெகிழ்ந்தாள்.

'அம்மிணி, அப்படியெல்லாம் அம்போன்னு விட்டுட்டுப் போயிடாதம்மா.... தாங்கற சக்தியில்லே. நாளைக்கு மூணு மணிக்கு வரேன். ரெடியாயிரு... நம்ம வீட்டுக்கு வருவியாம்.' என்று மேலும் சற்று நேரம் பேசினார்.

கணவனிடம் பேசிவிட்டுக் கனவில் நடப்பதைப் போல் வருகிற சகோதரியை அன்பழகன் பாசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்னக்கா. உங்க வீட்டுக்காரரு வரச் சொல்றாராக்கும். நீ போயி நம்ம வீட்டுக்காரியை அனுப்பு' என்று சிரித்தான். 'அறுபதிலும் ஆசை வரும்' என்ற பாடலை விசில் அடித்துக் கொண்டே எழவும், ஜெகதாவின் முகம் சிவந்து போனது.

அதே நேரம் எங்கிருந்தோ ஓடி வந்த பாபு, 'ஜெக்கிம்மா நீ வா, உன் பக்கத்துல படுத்துக்கறேன்.' என்று தொற்றிக்கொள்ள அவனை அணைத்துக் கொண்டு, 'வரேன்டா செல்லம்,' என்று முத்த மாரி பொழிந்தாள், ஜெகதா.

அன்பழகன் நின்று அதை வேடிக்கை பார்க்கவும், அங்கே வந்த அறிவழகன், 'என்னண்ணா, இந்தப் பாபுப் பய இன்னும் தூங்கலே? நீ என்னத்தை அப்படி வெறிச்சுப் பார்க்கிறே?' என்றான்.

அன்பழகன் திரும்பிச் சகோதரனைப் பார்த்தான். 'டேய் அறிவு! எல்லாரும் கட்சி மார்றாங்கடா... எங்க மாமனார்தான் மாறிட்டார்ன்னு பார்த்தேன். இந்தப் பொடிப் பய கூட எப்படி மாறிட்டான் பாரு!' என்று இடிஇடியென்று சிரித்தான்.

- - - - -

சம்பந்தி வருகிறார் என்றவுடன் வீடே பரபரப்பானது.

செண்பகம் அவரைச் சாப்பிட அழைத்ததனால் பகலுணவுக்கே வந்து விட்டார். விருந்து தடபுடல் பட்டது.

அவரும் ருசித்துச் சாப்பிட்டார்.

'சம்பந்திம்மா, ஜனனி எங்க மாமியார் கைப்பக்குவமே தனிதாம்ப்பான்னு அடிக்கடி சொல்லுவா... ரொம்ப அருமைங்கம்மா!' என்று பாராட்டினார்.

எல்லாருக்கும் ஏதேதோ பரிசுகள் அள்ளிக் கொண்டு வந்து ஜெகதாவின் கையால் கொடுக்கச் செய்தார்.

'மாமா. கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க மாமா,' என்று கீழே ஒரு அறையில் ஓய்வெடுக்கச் செய்தான் அன்பழகன்.

கிராமத்துச் சுவாரசியங்களை யெல்லாம் செண்பகம் சுவையாகச் சொல்ல... சுற்றி அமர்ந்து எல்லாரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெகதா கூட மிகவும் சுவாரசியமாய்க் கதை சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டு நாகமாணிக்கம் மனதில் மனைவியின் மேல் கருணை மேலிட்டது. 'அவளும் பாவம்தான்!' என்று எண்ணிக் கொண்டார்.

'அம்மா, எல்லாரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. ஈவ்னிங் எல்லாருக்கும் நானும் ஜனனியும் ஆர்யாஸில் ட்ரீட் கொடுக்கிறோம்,' என்று சபையைக் கலைத்தான் அன்பழகன்.

ஜெகதா நாகமாணிக்கம் உறங்கிக் கொண்டிருந்த அறையில் கீழே பாயை விரித்துப் படுத்தாள்.

'ஜெக்கிம்மா!' என்று ஓடி வந்து அருகில் படுத்துக் கொண்டான் பாபு. அவனைப் பாசத்துடன் இறுகக் கட்டிக் கொண்டாள்.

ஜனனி தங்கள் அறைக்குத் தண்ணீர் ஜக் கொண்டு செல்ல வந்தவள் அதை நின்று ஆழ்ந்த யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



கீழே வந்தவளைக் காணோமே என்று இறங்கி வந்த அன்பழகன்,

'என்ன ஜனனி?' என்றான். அவள் ஜெகதாவும், பாபுவும் உறங்கிக் கொண்டிருந்த விதத்தைக் காட்டினாள்.

அவன் புன்னகைத்தான். 'நீ வேற. உங்க வீட்டுக்குப் போய் ஒரு மாசமாச்சே. என்னவோ தெரியலே... ஜெகதாக்கா கிட்டே ரொம்ப ஒட்டிக்கிட்டான்,' என்றான்.

சற்று நேரம் கழித்து...

அவர்கள் அறையில் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்த கணவனிடம் இழைந்தாள். பிறகு மெல்லிய குரலில், 'காதலும், தாய்மையும்தான் ஒரு பெண்ணை முழுமையாக்குது... இல்லே?' என்றாள்.

'ம்..!' என்று புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, 'ஆமா. ஜெகதாக்கா பாவந்தான்... இல்லை...?' என்றான், அவனும்.

'ஏங்க. குழந்தையைப் பெத்தாத்தான் தாயாகணுமா... என்ன? பெறாமலேயும் ஆகலாங்க... தாய்மை உணர்வுதான் முக்கியம்,' என்றாள்.

அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பது அன்பழகனுக்குச் சட்டென்று புரிந்து போனது.

புரண்டு சிரித்தான். 'போச்சுடா! அடுத்த பிளான் போட்டுட்டா!' என்றபடி.

'சிரிக்காதீங்க அன்பு. நான் சொல்றது நெஜந்தானே..!' என்று அவள் சிணுங்கினாள்.

'நீ எப்ப பொய் சொன்னே? எப்பவும் நிஜந்தான் சொல்றே,' என்று மறுபடியும் புன்னகைத்தான்.

- - - - -

அன்றைக்கு 'ஜனனி இல்லம்' களை கட்டியிருந்தது. இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடந்திருந்தன.

காலையில் ஜெகதாவும், நாகமாணிக்கமும் பாபுவைச் சட்ட பூர்வமாகத் தத்தெடுத்துக் கொண்டார்கள்.

மாலையில் கவிதாவின் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நல்ல வேலையில் இருக்கிற வரனாக நாகமாணிக்கமே பார்த்துத் தெரிவு செய்திருந்தார்.

பாபுவைத் தத்தெடுக்கிற யோசனையை ஜனனி சொன்னபோது, நாகமாணிக்கம் முதலில் மறுத்தார். 'விளையாடாதே, ஜனனி.' என்றார்.

'அப்பா, எனக்குக் குழந்தை பிறக்கலைன்னா என்ன? ரெடிமேடா மகள் இருக்கிறா... அவகிட்ட பாசத்தைக் கொட்டுவேன்னு... லட்சுமி ஆன்ட்டிகிட்ட ஜெக்கிம்மா கல்யாணத்துக்கு முந்தி சொல்வாங்களாம். அவங்க பாசத்தை நாமதான் புரிஞ்சுக்கலை. அந்தத் தாய்மை உணர்வுக்கு வடிகால் வேணும்ப்பா...' என்று வாதாடினாள், ஜனனி.

'அம்மா, சொத்துப் பிரச்சினை அது-இதுன்னு நெறைய வரும்...' என்று, அவர் தயங்கியபோது, 'அப்பா... எனக்கு அவரையும் உங்களையும் விட என்னப்பா சொத்து வேணும்? எல்லாம் ஒழுங்கு படுத்திக்கலாம்ப்பா... ஜெக்கிம்மா... பாவம்ப்பா...' என்று சம்மதிக்க வைத்தாள்.

'ஜனனி, உன்னை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்கும்மா...' என்று பரவசப்பட்டார் நாகமாணிக்கம் இந்த விஷயம் முடிவு செய்யப்பட்ட அன்றைக்கு அறையில் ஜனனியை எதிரில் நிற்க வைத்து ஸ்லோ மோஷனில் தலையை நிமிர்ந்து பார்க்கிற மாதிரி நடித்தான் அன்பழகன்.

'என்னங்க? என்று புரியாமல் பார்க்கவும்...

'இல்லே... விசுவரூபம் எடுக்கறே... ஜனனி, அதைத்தான் மனக்கண்ணிலே பார்க்கறேன்... விஷுவல் எஃபக்டோட...' என்று சிரித்தான்.



'சே! பயமுறுத்திட்டீங்க... என்னமோன்னு நெனச்சுட்டேன்.' என்று மார்பில் சாய்ந்து கொண்டவளைப் பெருமையாய் அணைத்துக் கொண்டான்.

- - - - - -

'என்னது கிப்ட் பாக்கெட்?' என்று திறந்தார் நாகமாணிக்கம்.

'வாழ்க்கைக் கல்வி' என்ற புத்தகம் ஜனனி பரிசாகக் கொடுத்திருந்தாள்.

சற்று நேரம் ஆழ்ந்த மௌனத்தில் தலை குனிந்து அமர்ந்திருந்தாள், ஜெகதா. நாகமாணிக்கம் அணைத்துக் கொண்டார்.

'ஏங்க, ஜனனி... எவ்வளவு அற்புதமானவ... விளை விதைச்ச எனக்குத் தினையே அறுவடை பண்ணிக் கொடுத்திட்டா இல்லை!' என்று நெகிழ்ந்தாள், அவரது அணைப்பில் ஒப்புக் கொடுத்தாள்.

- - - - - -

அங்கே

அன்பழகனும் தன் மனைவியிடம் அதையே சொல்லிக் கொண்டிருந்தான்.

'ஜனனி... உனக்குத் தாயுமானவள்ன்னு பேரு வச்சிருக்கணும்... அம்மா அப்பாவுக்கே தாயாகிட்டே இல்லை!' என்று உருகிக் கொண்டான்.

அது மட்டுமில்லைங்க. உங்க வாரிசுக்கும் தாயாகப் போறேன். தெரியுமா? பையன் வேணுமா? பொண்ணா? என்று கேட்கவும், அவன் உலகம் மறந்தான்.

'ரியலி....' என்று கையில் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி இறக்கினான். பின் நிறைவான மனத்துடன் கைப்பிடியில் வைத்துக் கொண்டான்.

'ஜனனி! யூ ஆர் ரியலி க்ரேட் எல்லாருக்கும் ரொம்ப வளைஞ்சு குடுக்கற மாதிரிக் குடுத்து கடைசியில நீதான் ஜெயிக்கறே. நாணல் மாதிரி.' என்றான்.

'என்ன ஜெயித்தேனாம்?' என்றாள் லேசான வெட்கத்துடன்.

'என்ன ஜெயிக்கலே? என்னை... இங்க இருக்கிறவங் களை... ஏன், ஜெகதாக்காவோட வக்கிரமான மனசையே ஜெயிச்சிட்டவளாச்சே..!' என்றான்.

'ஆனா தோற்கறதுதாங்க சுகம்.. அதுவும் உங்ககிட்டே!' என்று காதலுடன் புன்னகைத்தாள்.

அன்றொரு நாள் ஜனனி சொன்னது அன்பழகனுக்கு நினைவு வந்தது.

'அன்பு பாசிட்டிவ்வா வெளிப்பட்டா சந்தோஷம், நெகடிவ்வாகவும் வெளிப்படக் கூடும்.' என்று எதிர்மறையான ஒரு மனத்தைக் கூட ஜெயித்துக் காட்டிய தன் மனைவியின் மடியில் தன் வாரிசு சிரிக்கிற அழகை அவன் மனக்கண்ணில் காணத் துவங்கினான்.

அவனது கைப்பிடியில் அவளும் எல்லையில்லாத நிம்மதியை உணர்ந்தாள். இவளைப் போல் ஒரு துணை கிடைத்தால் உலகத்தில் எதையும் வெல்லலாம் என்று கர்வம் அவன் மனத்தில் நிறைய, எதிர்கால வாழ்வை எதிர்கொள்ளும் கனவுகளில் ஆழ்ந்து போனான்.

தென்றல் இதமாய் அறைக்குள் எட்டிப் பார்த்தது.